உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 11 புதன்கிழமை (28.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 306



09
சட்ட ரீதியாக நீதி கிடைக்கும்



14
ஜெனீவா குறிப்புகள்





21
குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள்

# அரசு கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சை எதிர்க்கிறது தேசப்பற்றுள்ள இயக்கம்

## நாட்டைக் கூறுபோட முனைகிறார்கள் 'புலிக்குட்டிகள்' என்கிறார் அதன் தலைவர்

கொழும்பு, செப்ரெம்பர் 28

ஐ.நாவின் 66 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ள நிலையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நடத்தி வரும் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. 'புலிக் குட்டிகளான கூட்டமைப்புடன் நடத்தி வரும் பேச்சுக்களை உடன்நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப்பட வேண்டும் என்பது தொடர்பாக 'உதயனு'க்கு விவரிக்கையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு நாட்டைக் கூறுபோடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. இவர்கள்தான் புலிகளின் ஏகப் பிரதிநிதிகள் என்பதைப் புரிந்துகொண்டு அரசு செயற்படவேண்டும்.

புலிகளின் அனுசரணையுடன் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி புலிகளின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள புலிக்குட்டிகளுடன் பேச்சுகளை அரசு தொடரக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

தேசிய இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே

பக் 25

ஜே.வி.பி. உட்பூசல் தீவிரமடைந்தது

## அதிருப்தியாளர்கள் மீது அவசர ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு, செப்.28

ஜே.வி.பி. கட்சிக்குள் அதிரடி மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென அந்தக் கட்சியின் அதிருப்தியாளர்கள் முரண்டுபிடித்து வரும் பரபரப்பான சூழ்நிலையில், அதிருப்தியாளர்கள் மீது உடனடி ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கும், அதற்காக அவசரமாகக் கட்சியின் மாநாட்டைக் கூட்டுவதற்கும் ஜே.வி.பி. தலைமை முடிவு செய்திருக்கிறது.

பக் 25

## கட்சி மாநாட்டில் எமக்கெதிராகத் தீர்மானம் அது முழு அரசியல் பழிவாங்கல் தான்

### ஜே.வி.பி. அதிருப்திக்குழு காட்டம்

ஜே.வி.பியானது கட்சி மாநாட்டைக் கூட்டி எங்களுக்கு எதிராக, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்றால் அதனை அரசியல் பழிவாங்கல் என்றே நாம் கருதுவோம்.

- இவ்வாறு ஜே.வி.பியின் அதிருப்தியாளர் குழுவின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜாகொட நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜே.வி.பியின் கட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு

பக் 25

## வன்னியில் அவலம்; பிளேக்கிடம் கோத்தா ஏளனமாகப் பதில் !

கொழும்பு, செப்.28

வன்னியில் இறுதிப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் பாதுகாப்பு வலயமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் ஷெல் தாக்குதல்களில் பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக், பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவைத் தொடர்பு கொண்டு கூறினார். அதற்கு கோத்தா "காலநிலை சீரின்மையால் இரண்டு நாள்கள் ஜெட் போர் விமானங்கள் பறக்கவில்லையே" என்று ஏளனமாகப் பதிலளித்துள்ளார் என்று 'விக்கிலீக்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

யுத்த காலப்பகுதியில் அமெரிக்கத் தூதுவராகக். கொழும்பில் இருந்த பிளேக் இதுபற்றி

பக் 25

## யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் இன்று ஒரு மணிநேர பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் இன்று முற்பகல் ஒருமணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் இருவரை அவர்களது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து வைத்தியர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக்கோரி இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முற்பகல் 10.30 தொடக்கம் 11.30 வரை இந்தப் போராட்டம் இடம் பெறும் என்று வைத்தியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவிலில் கடந்தவாரம் வீட்டில் வைத்து வைத்தியர்கள் இருவரையும் தாக்கிவிட்டு அங்கிருந்த நகைகளை அபகரித்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## கூட்டமைப்புடன் பேசி விரைவில் நீதியான தீர்வைக் காணுங்கள்

### இந்திய அமைச்சர் முகர்ஜி அறிவுரை

வாஷிங்டன், செப்.28

இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்று இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அனைத்துலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் கூட்டத் தொடர் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்ற சமயத்தில் பிரணாப் முகர்ஜி, இலங்கையின் பிரதி நிதி அமைச்சர் சரத் அனுகமவுடன் நடத்திய பேச்சின்போது மேற்கண்டவாறு

பக் 25

## இந்தியப் போர்ப் பயிற்சி முடிவுற்றதோடு வருகிறது அமெரிக்க போர்க் கப்பல்!

கொழும்பு, செப்.28

இந்திய - இலங்கை கடற்படைகளின் கூட்டுப்போர்ப்பயிற்சி இலங்கை கடற்பரப்பில் நடந்து முடிவடைந்துள்ள நிலையில், அவசர விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்க கடற்படை அதிகாரிகள் விசேட போர்க்கப்பலொன்றில் விரைவில் இலங்கை வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க கடற்படையினரின் இலங்கை விஜயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால், திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை வரும் அமெரிக்க கடற்படையின் விசேட அதிகாரிகள் உள்ளடங்கிய குழு இலங்கைக் கடற்படையின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த போர்க்கப்பலில் நூற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்க கடற்படையினர் வரவுள்ளனர் எனவும், இலங்கைக் கடற்பரப்பில் அவர்களும் கூட்டுப் போர்ப்பயிற்சியில் ஈடுபடுவர் என்றும் கூறப்படுகின்றது. (ஒ-சி)

03.10.2011 முதல் மீண்டும் வெளிவருகின்றது

புலமைச்சுடர் 2012 - 2013

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி திங்கள் தோறும் வெளிவரும் முன்னோடிக் கையேடு

2012(தரம் 04), 2013(தரம் 03) ஆம் ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை தயார்படுத்துவதற்கான சிறப்பு வழிகாட்டி

தொடர்புகளுக்கு:
புலமைச்சுடர் ஆசிரியபீடம் - 011 5738855 / 071 6850005
விநியோகப்பிரிவு - கொழும்பு 011 5737599 / 071 6850006
யாழ்ப்பாணம் 021 5677222 / 071 6182182

இவையனைத்தும் 15 ரூபா விலையில்.....

தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி கல்விச்சுடர் வளவாளர்களின் அரிய படைப்பு

இக்கையேட்டை அலங்கரிப்பவை
கற்றல் குறிப்புகள்
தமிழ் மொழி
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்
தரம் 4, 5 படிமுறை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
கட்டுரைக்களம், பொது அறிவு
மூளைக்கு வேலை விஞ்ஞான விளையாட்டு
வாரம் ஐந்து வினா - விடை விளக்கம்
சங்கமம்
முதல்நிலை மாணவர்களின் அனுபவப் பகிர்வு

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள பத்திரிகை முகவரிடம் முற்பதிவு செய்துகொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராசையா கனகம்மா



இமையாணன் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கனகம்மா நேற்று (27.09.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் கனகசுந்தரம், கனகேஸ்வரி, குபேந்திரன் ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, வல்லை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர்.

தகவல்:
**செல்வராசா குடும்பம்.**

## திருமதி இராசையா திரேசம்மா



ஊற்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா திரேசம்மா 26.09.2011 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மரியம்மா மற்றும் விறிசிற் அம்மா, யோசேப், குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரிமளத்தின் அன்பு மைத்துனியும் இராசேஸ்வரி, பற்றிமா, சதாநாயகி, ஜெசிந்தா (சுவிஸ்), கெனடி(சுவிஸ்), றெஜினா (நியூசிலாந்து), யூடிற்றா ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற செல்வரெட் ணம் மற்றும் அந்தோனிப்பிள்ளை ரெட்ணசிங்கம் (பாரின்), இராசநாயகம்(சுவிஸ்), ராஜேஸ்(சுவிஸ்), றிச்சேட் (நியூ சிலாந்து), ரவிச்சந்திரன் (செயலாளர், இல.செஞ்சிலுவைச் சங்கம்-சண்டிலிப்பாய் பகுதி) ஆகியோரின் அன்பு மாமியும், அன்ரனிதாஸ் (கண்ணன்), சந்திரன் (கொலண்ட்), அனிஸ்ரன், றொபின்சன், றொபினா, அனிற்றா, சகாயராஜ் (லண் டன்), ஷாம், சுவிஸ்ரன் (சுவிஸ்), ஜெனிஸ்ரன் (சுவிஸ்), றெபேக்கா (சுவிஸ்), செபஸ்ரியன் (சுவிஸ்), கிறிஸ்ரீனா (நியூசிலாந்து), டோமினிக் (நியூசிலாந்து), மதுஷா, சயானா, கமில் டன் ஆகியோரின் பேர்த்தியும், நிரோஜிகா, தனு, தர்மிலன், றிதன் ஆகியோரின் பூட்டியும் அருட்சகோதரி அமிர்தாவின் (தி.க.ச) பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.09.2011) புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
**ரவிச்சந்திரன் (மருமகன்).**

# உடுவில் சுகாதார பிரிவில் 22 டெங்கு நோயாளர்கள்

யாழ்ப்பாணம்,செப்.28

உடுவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் கடந்த 9 மாதங்களில் 22 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக உடுவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இணுவில் பகுதியில் 13 பேரும், ஏழாலைப் பகுதியில் 2 பேரும், சுன்னாகம் பகுதியில் 4 பேரும், சுன்னாகம் கிழக்குப் பகுதியில் ஒருவரும் நல்லூர் பிரதேசத்தில் சொந்தமான பகுதிகளில் 2 பேரும், உடுவில் பொதுச்சுகாதார பரிசோதகரால் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

எனினும் இனங்காணப்பட்ட 22 டெங்கு நோயாளிகளில் 14 பேர் மட்டுமே வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் ஜனவரி மாதத்தில் 2 பேரும், பெப்ரவரி மாதத்தில் 3 பேரும், ஏப்ரல் மாதத்தில் 2 பேரும், மே மாதத்தில் 3 பேரும், யூன் மாதத்தில் ஒருவரும், ஓகஸ்ட் மாதத்தில் 3 பேரும் டெங்கு நோயாளிகளாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். உடுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பணிமனையில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை அடுத்து செப்ரெம்பர் மாதத்தில் இதுவரை டெங்கு நோயாளர் எவரும் இனங்காணப்படவில்லை எனப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-313)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி துரைசாமி (சேகர்) புவனேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வனும் து. வைத்தீஸ்வரனின் தம்பியுமாகிய **து.சிவசங்கர்** யா/ இந்து ஆரம்ப பாடசாலையில் 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்தமையினைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் உயர் கல்வியில் சிறந்து விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.

வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

**வாழ்த்துவோர்:**
சேந்திரன் பெரியப்பா, சறோ பெரியம்மா, சிந்து அக்கா,
ஆஸ்திரேலியா

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் நா.றமணன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி நாராயணபிள்ளை மகேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள்
**கிளி/ஜெயபுரம் ம.வி.**

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

### FACULTY OF AGRICULTURE

**Senior Professor/ Professor** in
Agronomy / Agricultural Biology /Agricultural Chemistry/ Agricultural Economics

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II /Lecturer (Probationary)** in
Agronomy / Animal Science

### SPORTS SCIENCE UNIT

**Lecturer (Probationary)** in Sports Science

### PHYSICAL EDUCATION UNIT

* Instructor (Male) in Physical Education Grade II
  * Preference will be given who have competency in any two of the following Games: Badminton/ Baseball/ Chess/ Karate/ Rowing/ Rugby Foot ball/ Swimming/Taekwondo/ Tennis/ Wrestling Age Limit- Not more than 45 yrs

| Post | Salary |
|---|---|
| Senior Professor | Rs.57,755-11x900-67655/- p.m. |
| Professor | Rs.50905 -13x 850- 61955 /p.m. |
| Senior Lecturer Grade I | Rs.42650-7x800-48250 p.m. |
| Senior Lecturer Grade II | Rs.37650-11x700-45350 p.m. |
| Lecturer (Probationary) | Rs.26900-10x585-32750 p.m. |
| Instructor Grade II | Rs.22595-10x280-25395/- p.m. |

**Note:** In addition to the above salary the following allowances will also be paid.

i Academic allowance } other than Instructor Grade II
ii. Research allowance }
iii. Special allowance
iv. Cost of living allowance

**Statutory benefits**

i. Sabbatical leave entitlement for the post of Senior Lecturer Grade II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits
v. Free medical

**Closing date:**

Post of Senior Professor/ Professor- 27.12.2011
Other Posts - 27.10.2011

Applications and other required documents for the Post of Senior Professor/ Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self – addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the downloaded application forms through the University website should be attached a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one post** should make **separate applications**.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without information. Only short listed applicants will be called for an interview.

**Registrar.**
2011.09.23

# யா/கொடிகாமம்
# திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011


ஸ்ரீ. வினுஜா - 164


நே. கம்ஷியன் - 162


க. ரேனுஜா - 160


இ. கேதுஷா - 159


ப. கனிஸ்த்தா - 158


சு. ஜிவிதர்சன் - 158


ச. சஜீவன் - 152


பா. கிந்துஜன் - 151

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

லோ. டிலக்சன் - 150, த. சர்மிகா - 149, அ. யர்சா - 144, ஸ.றெக்குலின் றொக்சிற்றா - 134, ந. ஜனுசா - 125, க. கபிலா - 107, அ. சிலெக்ஷனா - 104, கு. கனுஸ்ரன் - 101

மேற்படி சித்தி பெற்ற மாணவர்களையும் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களையும் மேலும் கல்வியில் சாதனைகள் படைத்து உயர்வு பெற வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கொடிகாமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### நாகலிங்கம் தயானந்தன்

(தயா)

திதி: அபரபக்க பிரதமை
28.09.2011

தோற்றம்
16.09.1962

மறைவு
28.09.2011

முப்பத்தொரு நாள்கள் ஓடி மறைந்தாலும்
நெஞ்சினிலே உன் நினைவு முகம்
பிஞ்சு மகனைத் தவிக்க விட்டு
பிரிய மனம் உனக்கு என்றும் இல்லை
கொடிய நோய் ஒன்று காரணமாம்
உனைப் பிரித்துவிட்டான் காலனவன்
என் அருமை மைந்தன் தயாவே
ஐயா நீ மோட்ச பதம் அடைவாயாக

1/9, பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உன் ஆத்மா சாந்தி தேடும்
**குடும்பத்தினர்.**

## எரிகாயங்களுக்கு சிகிச்சை பெற்று வந்த பெண் மரணம்

எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது 41 ஆவது நாள் மரணமானார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி இவர் எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்ட நெடியகாடு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பு.ஜெயராணி (வயது 44) என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ-4)

## மரண அறிவித்தல்



### பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி

சிதம்பரத்தைப் பிறப்பிடமாகவும் 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி (தேவி அச்சக ஸ்தாபகர், மூர்த்தி விளம்பர சேவை) நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சவர்ணம்பிள்ளை–குப்பம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்–சின்னம்மா தம்பதியரின் மருமகனும் விமலாதேவியின் (தவம்) ஆருயிர் கணவனும் காலஞ்சென்றவர்களான சவுந்தரம், சம்பந்தர், சரோசா ஆகியோரின் அன்புச் சகோரனும் நித்தியானந்தன் (ஜேர்மனி), நித்தியானந்ததேவி (கொழும்பு), அகிலானந்தன் (கனடா), அகிலானந்ததேவி (ஜேர்மனி), சர்வானந்தன் (கொழும்பு), தயானந்தன் (சுவிஸ்), தேவானந்தன் (லண்டன்), முருகானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி (ஜேர்மனி), குகதாசன் (கொழும்பு), லோகிநாயகி (கனடா), அலோ சியஸ் (ஜேர்மனி), தாரணி (கொழும்பு), சாந்தினி (சுவிஸ்), பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் அபிராமி, ஸ்ரீராம் (ஜேர்மனி), சபேசன், சர்மிளாதேவி (பிரான்ஸ்), காயத்திரிதேவி, கௌதமிதேவி (கொழும்பு), ராகவி, ரஜீவ் (கனடா), தர்சன் (ஜேர்மனி), ஆகிஷன், துவாஷன் (கொழும்பு), சதுர்ஜன் (சுவிஸ்), சாருசன் (ஜேர்மனி), பாலகுமார் (பிரான்ஸ்), தில்லைநடேசன் (ஆசிரியர், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் தபிஷேக்கின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவி அச்சகம், மூர்த்தி விளம்பர சேவை
114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**தகவல்: குடும்பத்தினர்**

முதன் முறையாக யாழ் மண்ணில்!

City & Guilds UK

Engineering Degrees

மேலதிக விபரங்களுக்கு
0771 067 394

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
The Leader in Technical Education
Colombo | Kandy | Jaffna

முதன் முறையாக இலங்கையில்...

வாகனக் குத்தகைக்கான
தடைகள்
முற்றிலும் நீக்கப்பட்டுள்ளன

உத்தரவாதம்
தேவையில்லை

ஆரம்ப
கட்டணம்
இல்லை

ஒரே நாளில்
வாகனத்தை
எடுத்துச்
செல்ல முடியும்

PHOENIX O&M

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

இனியும் தாமதிக்க வேண்டாம்.
அருகிலுள்ள NDB வங்கிக் கிளைக்கு வாருங்கள்
அல்லது அழையுங்கள் 011 2 448 888

NDB லீசிங்

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

# Spoken English

veta

Experts in English Training

ஆங்கில பயிற்சி மையம்

Foundation , First Step மற்றும் Next Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 7.30 a.m. | Sat, Sun | 8.30 a.m. | Sat, Sun | 3.30 p.m. |
| Mon, Wed, fri | 8.30.a.m. | Wed, Fri | 8.30 a.m. | Wed,Thu | 3.30 p.m. |
| Sat, Sun | 10.00 a.m. | Sat, Sun | 10.00 a.m. | Tue,Thu | 8.30 a.m. |

இலகுவான முறையில் ஆங்கிலப் பயிலுங்கள்.

UK Student Visa , Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று. ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

## DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலையம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250

7ம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு மாபெரும் புலமைப் பரிசில்

80% OFFER

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Microsoft office | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Desktop Publishing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Web page Designing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Graphic Designing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Computerized Accounting | 3 Months | ~~15000~~ | 3000 |
| Diploma in Computer Science | 4 Months | ~~12500~~ | 2500 |
| Hon. Diploma in Computer Science | 4 Months | ~~12500~~ | 2500 |
| Hon. Diploma in Programming | 3 Months | ~~10000~~ | 2000 |
| AUTO CAD | 3 Months | | 2000 |

Advanced Diploma Courses
- Advanced Dip. in Multimedia
- Advanced Dip. in Video Editing
- Advanced Dip. in Networking

3000/=

A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான
Quick Book,Acc Pac, MYOB,Tally
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
T.P:021 222 8250
0774907444
திருவனைவராஜ் Ashok

Batch Time:
I) 28/09/2011
II) 30/09/2011
III)01/10/2011
IV)02/10/2011
9AM OR 3PM

# மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்பவரும் எமது பெருமதிப்புக்குரிய அண்ணன் திரு.சி.இரத்தினம் அவர்களின் பேரனுமான செல்வன் லி.மதுர்ஷன் அவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக நாமும் மனதார பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். இவர் மேன்மேலும் பல உயர்வுநிலை பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர்:
செ.பி.செல்வகுமார் குடும்பம்,
இ.உதயசூரியன் குடும்பம்
கண.கிருஷ்ணராஜன் குடும்பம்
கோப்பாய்.

# கடைத்தொகுதி வாடகைக்கு விடல்

எமது சங்கத்தினால் பருத்தித்துறை வீதி, கோப்பாய் V.C.அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படவுள்ளது.
வாடகைக்கு பெற விரும்புவோர் 10.10.2011 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் எழுத்து மூலமாக
தலைவர், கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

தலைவர்
கோப்பாய், ப.தெ.வ.அ.கூ.சங்கம்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.



# மங்களகரமான தெரிவுகள்
# திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்
# போஸ்கோ

610/3, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0370

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 23 ★ 01 ★ 1948



உதிர்வு 30 ★ 08 ★ 2011

## அமரர் சிவதாஸ் தர்மகுலசிங்கம்
(காலையடி, பண்டத்தரிப்பு)

கடந்த 30.08.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலமும், வேறு பல வழிகளிலும் உதவியும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (29.09.2011) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

காலையடி,
பண்டத்தரிப்பு

குடும்பத்தினர்.

# DIPLOMA COURSES
# PROGRAMMING



Visual Basic
Advanced Java
HTML, DHTML
RMI, Servelets
C, C++ Programming
PHP, MySQL

CSC-ASIAN COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் - 2G ... 021 2225577
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267

# மரண அறிவித்தல்



## திருமதி இராசரெத்தினம் செல்லம்மா
(ஓய்வுபெற்ற ஆசிரியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் 281/11, கண்டி வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இராசரெத்தினம் செல்லம்மா 25.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத் துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

281/11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடும் முயற்சி இனியும் வேண்டாம்....

இறுதிப்போரின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக, இலங்கை அரசு சர்வதேச அழுத்தங்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வரும் இன்றைய நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா.பொதுச் சபையின் 66 ஆவது அமர்வில் ஆற்றிய உரை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஜனாதிபதியின் உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் சில:

- ★ இலங்கை இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும். சர்வதேச ரீதியிலான தீர்வைத் தேட முனைவது யதார்த்தத்தில் சாத்தியமற்றது.
- ★ இடம்பெயர்ந்த மக்களில் 95 சதவீதமானோர் மீள்குடியேற்றப்பட்டு விட்டனர்.
- ★ வடக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கே படையினர் பயன்படுத்தப்படுகின்றனர். குறைந்த படையினரே அங்கு கடமையில் உள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. அது காலத்தால் பாலஸ்தீன பிரச்சினையை ஒத்தது. பாலஸ்தீனப் பிரச்சினை போன்று சிக்கல் நிறைந்தேதே இலங்கை இனப்பிரச்சினையும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வுகாண்பதற்கே ஆரம்பத்தில் முயற்சி எடுக்கப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் உட்பட பல ஒப்பந்தங்கள், வாக்குறுதிகள் சிங்கள அரசுகளினால் காற்றில் பறக்கவிடப்பட்ட நிலையில், தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கையில் எடுத்திருந்த வேளையில் 1987இல் இந்தியாவின் நேரடித் தலையீடு ஏற்பட்டது. பின்பு 2002இல் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து இலங்கை அரசுகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்ட நிலையில், சர்வதேச ரீதியிலான தீர்வு வேண்டாம் என்று இலங்கை அரசு இப்போது அறிவித்திருக்கிறது. இதன் முக்கிய நோக்கம் பெரும்பான்மை சிங்கள மக்கள் நிரந்தரமாக மேலோங்கிகளாகத் திகழ வழி செய்யும் ஒரு தீர்வை உருவாக்குவதே. கடந்த காலங்களில் அதற்கான முயற்சிகள் தோற்றுப்போய் இருக்கின்றன.

ஆகவே, உள்நாட்டில் ஏற்படுத்தப்படும் தீர்வு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா என்பதே இன்றைய கேள்வி. நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்ற பேச்சு இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றை ஏற்படுத்தும் அளவுக்கு முன்னேறி இருந்தது. அப்பொழுது இலங்கை அரச தரப்பு சார்பாக பேச்சில் ஈடுபட்டிருந்த பிரதிநிதிகளும் அதனைக் கொள்கை அளவில் ஏற்றிருந்தனர். இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான ஆகக் கூடிய ஒரு தெரிவாக சமஷ்டி முறை இனம் காணப்பட்டிருந்தது. ஆனால் பேச்சில் கலந்துகொண்டிருந்த இரு தரப்பினருமே விட்டுக்கொடுக்கும் இதய சுத்தியுடன் செயற்படாத காரணத்தால் அரிய சந்தர்ப்பம் ஒன்று கை நழுவியது.

தற்பொழுது விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில், தோற்கடிக்கப்பட்ட நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது. இந்தப் பேச்சுகள் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு உட்பட ஒரு தீர்வை மட்டுமே கொண்டு வரக்கூடியவை. இது தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் ஏற்புடையதாக இருக்காது என்பதை உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம், அகிம்சை வழிப் போராட்டம் தொடங்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு தொடக்கம், அவர்களும் இந்த நாட்டின், பூர்வீக இனக்குழுமம் ஒன்றின் வழித்தோன்றல்கள் என்பதனைக் கணக்கில் எடுக்க மறுத்து, அவர்களுக்குச் சேர வேண்டிய பிறப்புரிமைகளை வழங்குவதற்கு மறுத்து வருவதே, இந்த நாட்டின் சிங்கள அரசுகளின் இயல்பாகி விட்டது.

அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தையே நீக்கிவிட வேண்டும் என்று குணதாச அமரசேகரவின் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், அமைச்சர் விமல்வீரவன்ஸவின் தேசிய சுதந்தர முன்னணி மற்றும் ஜாதிகஹெல உருமய ஆகிய கடும்போக்குப் பேரினவாதிகள் அரசாங்கத்துக்குப் பேராதரவும் அழுத்தமும் கொடுத்து வரும் வேளையில், இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு, தமிழ் மக்களை, தமிழ் பேசும் மக்களை மூன்றாம் தரப் பிரசைகளாகப் குழியில் வீழ்த்தும் சதியாகவே தேறும்!

இப்பேச்சுகள் தோல்வி அடைந்து நெருக்கடிகள் உருவானால் 1987போன்று மற்றொரு தலையீட்டுக்கான சாத்தியம் முன்னரைவிட மிகமிக அதிகமாகவும் காத்திரமாகவும் இருக்கும்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே கண்டறியப்பட வேண்டும். ஆனால் இப்போது அரசு மற்றும் அதுசார்புடைய ஆதரவுத் தரப்புகள் -

நியாயமான, நிலையான தீர்வுக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தி நிற்பதால் -

வெளிநாடுகளின் அனுசரணையும், ஆதரவும் இன்றி தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று கிடைக்கும் என்பது நூறு வீதம் சந்தேகமே. இந்த நாட்டின் இறைமை, சிங்கள அரசியல் தலைவர்களின் தனிச் சொத்தல்ல.

வெளிநாடுகளின் உதவியை விரும்பாத அரசு, தனது சொந்தத் தீர்வு எத்தகையது என்று அறுத்து உறுத்து முன்வைக்காதிருக்கும் வரை, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடும்வரை, வெளிநாடுகளின் அனுசரணை இன்றி நடைபெறும் பேச்சுக்களில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்; வைக்கக் கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வழுவல் நழுவல் நிலைப்பாட்டைக் கைக்கொள்ளக் கடுகளவும் நினைக்கக் கூடாது.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில்

# மாணவர் அடைவை உயர்த்த மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

யாழ்ப்பாணம், செப்.28

இந்த ஆண்டு ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது அடைவை உயர்த்தும் நோக்கில் பரீட்சைத் திணைக்களம் பிரதான பாடங்களில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களைத் தயாரித்துள்ளது.

இந்த வினாத்தாள்கள் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பரீட்சையை இலக்காகக் கொண்ட இறுவட்டுகளும் வெளியிடப்பட்டுள்ளன. வலயக் கல்விப் பணிமனைகள் இந்த மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு தத்தமது வலயங்களில் பரீட்சைகளை நடத்துவதுடன் பின்னூட்டல் கருத்தரங்குகளையும் நடத்தவுள்ளன. தாய் மொழி, விஞ்ஞானம், ஆங்கிலம்,கணிதம், வரலாறு ஆகிய பாடங்களிலேயே விசேட பரீட்சைகளும் கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன. (த-38)

# ஊடகவியலாளர்களுக்கு அரசு மக்கள் வங்கி மூலம் கடன் வசதி

வரணி, செப்.28

ஊடகவியலாளர்களுக்கு, கணினி, மோட்டார் சைக்கிள், புகைப்படக் கருவி மற்றும் பக்ஸ் இயந்திரம் போன்றவற்றை கொள்வனவு செய்ய மக்கள் வங்கி மூலம் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பீ.கணேகல நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் விண்ணப்பிக்கும் ஊடகவியலாளர்கள், தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாகவும், 18 வயது முதல் 55 வயது எல்லைக்குட்பட்டவர்களாகவும், அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களில் மூன்று வருடகால சேவைக் காலத்தையுடைய தொழில் நுட்ப சேவையாளர்களாகவோ அல்லது சுதந்திர ஊடகத் துறையில் 3 வருட கால சேவை யைக்கொண்டவர்களாகவோ இருக்க வேண்டும்.

இவர்கள் இலங்கை பிரசைகளாகவும் இருப்பதுடன் இவர்களது வருடாந்த வருமானம் ரூபா 144,000 க்கு குறையாமல் இருக்க வேண்டும். இவர்கள் அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையின் பெயரை விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள், கணினிகள் என்பவற்றுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும், பக்ஸ் இயந்திரம் டிஜிற்றல் கமரா போன்றவற்றுக்கு தலா 15,000 ரூபாவும் கடனாகப் பெற முடியும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உரிய விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 5 ஆம் திகதிக்கு முன்பு நிறுவனத் தலைவர்களின் சிபார்சுடன், திருமதி கே.டபிள்யூ.என்.அமரதுங்க, மேலதிக செயலாளர், (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்) வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு 163, கிருலப்பன மாவத்தை, பொல்ஹேன்கொட , கொழும்பு 5 என்னும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (த-122)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 6 இந்தியர்கள் கைது

யாழ்ப்பாணம், செப்.28

யாழ். மாவட்டத்தில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இந்தியப் பிரஜைகள் 6 பேரை குடியகல்வு, குடிவரவுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர். இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

கொழும்பிலிருந்து வந்த 3 பேர் கொண்ட குடியகல்வு, குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் நேற்றுமுன்தினமும் நேற்றும் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்தனர். இங்கு விசா முடிவடைந்த பின்னரும் தங்கியிருந்தவர்கள் மற்றும் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் என 6 பேர் அவர்களிடம் சிக்கினர். இவ்வாறு கைதான அறுவரும் கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கூறினார். (ஒ-15)

# விலங்கு விசர் நோய் தினமும் விழிப்புணர்வுக் கூட்டமும்

யாழ்ப்பாணம், செப்.28

உலக விலங்கு விசர்நோய் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்று யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் இன்று நடத்தப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் இந்த நோயை முற்றாக ஒழித்தல் எனும் தொனிப் பொருளில் இது நடத்தப்படுகிறது.

நாவலர் வீதியில் உள்ள தியாகிகள் அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரனும் முதன்மை விருந்தினராக யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.ஜூட், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்த தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப் பட்ட கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம் பெறவுள்ளது. இதன் போது, விலங்கு விசர் நோய் விழிப்புணர்வு சம்பந்தமான இறுவட்டும் வெளியிடப்படவுள்ளது.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. முதலாமிடம் பெற்றவர்களுக்கு பத்தாயிரம் ரூபாவும், இரண்டாமிடம் பெற்றவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாமிடம் பெற்றவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் மேலும் ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து பேருக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபா வீதமும் பரிசு வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வரமாறு:

**கட்டுரைப் போட்டி**

சி.தனுராஜ் (யாழ்/இந்துக் கல்லூரி -உயர்தரம்), ச.சத்தியபாலன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி- உயர்தரம்), க.துவாரகன்(யாழ்/இந்துக் கல்லூரி-உயர்தரம்),

ஆறுதல் பரிசு பெறுவோர்:-

கி.அரவிந்தன் (யாழ்/இணுவில் மத்திய கல்லூரி), கி.சுவஸ்திகா (யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை), டிலாணி பூமணி (யாழ்/இந்து மகளிர் கல்லூரி), சி.சிவதர்சினி (புலோலி மெ.மி.த. க.பாடசாலை), ம.கஜ கிருஷ்ணா(யாழ்/இந்துக் கல்லூரி),

ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோர்:-

தே.பபிராஜ் (யா/இணுவில் மத்திய கல்லூரி), து.சர்மிளா (யா/இந்து மகளிர் கல்லூரி), த.மதுசன் (பரு/ஹாட்லிக் கல்லூரி).

ஆறுதல் பரிசு பெறுவோர்:-

வ.தனுசுயன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), ப.பார்த்தீபன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), யோ.அரவிந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), கு.கஜலக்ஷன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), ம.கலாரஞ்சினி (யா/இணுவில் மத்திய கல்லூரி). (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாதேவா சிறார் இல்லத்துக்கு 100 ஏக்கர் காணி அன்பளிப்பு

## மீசாலை கொடை வள்ளல் வழங்கினார்

யாழ்ப்பாணம்,செப்.28

மீசாலையைச் சேர்ந்த கொடை வள்ளல் ஒருவர் பூநகரிப் பகுதியில் 100 ஏக்கர் நெற்காணியை மகாதேவா சைவச்சிறார் இல்லத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதன்மூலம் செய்கை பண்ணப்படும் நெல் மகாதேவா சைவச்சிறார் இல்லத்தின் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது

மகாதேவா சைவச்சிறார் இல்லப் பிரமத நிறைவேற்று அதிகாரி ரி.இரட்ணசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பெயர் குறிப்பிடவிரும்பாத மீசாலையைச் சேர்ந்த கொடை வள்ளல் ஒருவரே மகாதேவா சைவச்சிறார் இல்லப் பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகருதி இந்த 100 ஏக்கர் நெற்காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதனையடுத்து இந்தக்காணியில் இந்த வருட பெரும்போக நெற்செய்கைக்கான மண் பண்படுத்தல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் அறுவடையின் போது நல்ல விளைச்சலை பூநகரியில் உள்ள இந்தக் காணியில் இருந்து பெறுவோம்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் மகாதேவா சைவச்சிறார் இல்ல மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்றார் அவர். (த-302)

# பிரதேச செயலர் பிரிவுகளில் முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 28

சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதியோர் தினத்தன்று அவர்களை மகிழ்விக்கும் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்திலும் இந்தமுறை முதியோர் வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்த முதியோர் வாரத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இல்லத்தின் அத்தியட்சகர் என். இராசலிங்கம் தெரிவித்தார். முதியோர் வாரத்தில் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் மத்தியில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் வெற்றி பெறும் முதியோர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் முதியோர் வாரத்தில் சிரமதானம் மூலம் இல்ல வளாகத்தைத் துப்புரவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறுதி நாள் நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் அவர்களுடைய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார். (த-26-121)

# பச்சிலைப் பள்ளியில் இலவச கணினிப் பயிற்சி

தென்மராட்சி,செப்.28

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் இலவச கணினிப் பயிற்சி வகுப்புக்கள் கடந்த 25 ஆம் திகதி பளைப் பிரதேச செயலர் த.முகுந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை உதவி மருத்துவ அதிகாரி டாக்டர்.ச. அம்பிகைபாகன், பளை மத்திய கல்லூரி அதிபர் க.குணபாலசிங்கம், பேரவையின் லண்டன் கிளைப் பிரதிநிதி செல்வராசா ஆகியோர் உட்படப் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தில் நலிவுற்ற குடும்பங்களின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்குக் கணினிப் பயிற்சி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(த-207)

# சட்டவிரோதமாக இரும்பு ஏற்றிய ஐந்துபேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப்.28

இரண்டு லொறிகளில் சட்டவிரோதமாக இரும்புகள் ஏற்றிச் சென்ற புத்தளத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐந்து பேர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸார் நேற்று முன்னிலைப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா ஒவ்வொருவரையும் தலா 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்ல உத்தரவிட்டார். இரண்டு லொறிகளையும் இரும்புகளையும் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டுபேரும் பிணைப் பணத்தைச் செலுத்தியதையடுத்து விடுவிக்கப்பட்டனர். புத்தளத்தைச் சேரந்த மூவரும் பிணைப் பணம் செலுத்தாமையினால் அதனைச் செலுத்தும்வரை அவர்களை தடுப்பில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு இரும்புகளைக் கடத்திச் சென்ற போதே இரண்டு லொறிகளையும் வேலணையில் வைத்து பொலிஸார் பிடித்தனர்.

இதேவேளை ஹன்ரர் வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி 17 ஆடுகளை ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக இரண்டு பேருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் தலா 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது வேலணையில் வைத்து வாகனத்துடன் இரண்டு பேரையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போதே நீதிவான் மேற்கொண்ட உத்தரவை விடுத்தார். (த-4)

# கொடிகாமம் பொலிஸாரின் நடமாடும் சேவை வரணியில்

வரணி, செப். 28

கொடிகாமம் பொலிஸாரின் நடமாடும் சேவை ஒன்று கடந்த சனிக்கிழமை வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெகத் பண்டார மற்றும் யாழ்ப்பாணம் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ய. ஜெயலத் ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். கொடிகாமம் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு உதவிப் பொலிஸ் அதிகாரி எச்.என்.சிறியந்த தலைமையில் நடமாடும் சேவை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பலவிதமான முறைப்பாடுகள் ஏற்கப்பட்டு அவற்றுக்கான விசாரணைகளும் இடம்பெற்றன. முறைப்பாட்டுப் பிரதிகளும் உடனுக்குடன் அன்றயதினம் வழங்கப்பட்டன. தீர்ப்புகளும் வழங்கப்பட்டன.

மோட்டார் போக்குவரத்துப் பிரிவினரால் குற்றவியல் சார்பான நடவடிக்கைகள், முறைப்பாடுகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுதல் தொடர்பான ஆலோசனைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

பொலிஸாரால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் மத்தியஸ்தர் சபைப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. சாவகச்சேரி மத்தியஸ்தர் சபைப் பிரதிநிதிகள் வே.இரத்தினசிங் கம் மற்றும் திருமதி சி.வல்லிபுரநாதன் ஆகியோர் சமுகமளித்து முறைப்பாடு களை ஆராய்ந்தனர்.

மேலும் ஆங்கில மற்றும் ஆயுள்வேத மருத்துவ சிகிச் சைகளும் இதில் இடம்பெற்றன. வரணிப் பிரதேச வைத்தியசாலை வைத்தியர் ரி.கே.நடராசா மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆயுள்வேத வைத்தியர்களான ஏ.வெலிச்சோர், திருமதி வீ.லலிதா ஆகியோர் பொதுமக்களுக்கு வைத்திய ஆலோசனைகளை வழங்கினர். இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (த-122)

# யுத்தம் முடிவடைந்தபோதும் ஓமந்தையில் தொடரும் அவலம்

## யாழ். புத்தி ஜீவிகள் விசனம்

யாழ்ப்பாணம், செப்.28

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் ஓமந்தை சோதனைச் சாவடியில் மக்கள் இறங்கி ஏற வேண்டிய அவல நிலையே காணப்படுகிறது.

யாழ். குடாநாட்டு மக்களே இவ்வாறான அவல நிலையை அதிகம் எதிர்கொள்கின்றனர் என்று புத்திஜீவிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்தம் முடிவடைந்து வருடங்களாகியும் வடபகுதியிலிருந்து தென்பகுதி செல்லும் மக்கள் ஓமந்தையில் இறங்கி ஏறவேண்டியுள்ளது.

போக்குவரத்து என்பது தனி மனிதனது நடமாடும் இன்றியமையாதது; ஒரே நாட்டில் குறித்த ஒரு பகுதி மக்களுக்குச் சௌகரியமான போக்குவரத்துக்குத் தடையான நிகழ்வுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

குறிப்பாக பேருந்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிக்கும் போது நடுநிசியில் பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு பயணப் பொதிகளுடன் நடக்க விடப்படுகின்றனர். இது நிம்மதியான பயணத்துக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்.

உண்மையில் சோதிக்க விரும்பின் பயண ஆரம்பத்தில் சோதிக்கலாம். இது நிம்மதி தரும். ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கொள்கைக்கு எதிரானது இது .

பயணிகளில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், நீதிபதிகள், மதபோதகர்கள் எனப் பல தரப்பட்டோரும் உள்ளனர்.

வட மாகாணத்துக்கு என்று மக்களால் தெரிவு செய்த மாகாண சபை நிர்வாகம் இன்மையால் எம் மக்களின் போக்குவரத்து குறித்து நலன் பேணல் அமைச்சர் இல்லாத தன்மையே இத்தகைய நிலைக்குக் காரணம். ஆயுததாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் பணம் வசூலிக்கும் பாதையாக ஏ-9 வீதி கடந்த 2 ஆண்டுகளாக மாறிவிட்டது. இதனை மாற்ற வேண்டியது ஜனநாயகத்தின் மீது அக்கறையுடையோரின் கடமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பவர்கள் கடமைகளைச் செய்யுமாறு நிர்ப்பந்திப்பது மக்கள் சட்டத்தை கையில் எடுத்தலாகாது

## கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி செல்வக்குமாரன்

யாழ்ப்பாணம், செப்.28

அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் தமது கடமைகளில் இருந்து தவறும் போது மக்கள் அதனைத் தட்டிக் கேட்டால் அல்லது அவற்றைச் செய்யுமாறு நிர்ப்பந்தித்தால் அதனைச் சட்டத்தைக் கையில் எடுத்தல் எனக் கூற முடியாது. இவ்வாறு குடாநாட்டின் அண்மைக்காலச் சம்பவங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடாதிபதியும், இலங்கை அரச கரும மொழிகள் ஆணைக் குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான சட்டத்தரணி நா. செல்வக்குமாரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிவில் சமூக பிரதிநிதிகளுக்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவ [partly obscured] லகத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பான தேசிய பயிற்சிச் செயற்திட்டத்தின் இரு நாள் செயலமர்வு கிறீன் கிறாஸ் விடுதியில் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போதே வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

1978 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் படி மக்களின் சட்டங்களைச் செயற்படுத்தும் முகவர்களாகவே ஜனாதிபதியும், நாடாளுமன்றமும் உள்ளன.

அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையில் இலங்கையில் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த (கைய ளிக்க) முடியாததாகவும் இருக்கு மெனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன் இறைமையானது அடிப்படை உரிமைகளையும் உள்ளடக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக மக்களின் இறைமை மக்களிடமே இருக்க வேண்டும். மக்களால் கொடுக்கப்பட்ட கடமையைச் சரியாகச் செய்யாவிடின் இதைக் கொடுக்கும் மக்கள், அதனைச் செயற்படுத்த முனையலாம். அது சட்டத்தைக் கையில் எடுப்பதாக அமையாது.

கிறீஸ் பூத நடவடிக்கையில் பொலிஸார் அதனை தடுக்க வேண்டும். அல்லது இத்தகைய பரப்புரைகளை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டும் செய்யப்படாவிட்டால் மக்களுக்குப் பொலிஸார் மீது நம்பிக்கையீனம் ஏற்படும். மக்கள் சட்டத்தைக் கையில் எடுப்பார்கள்.

மக்களின் இறைமை எந்தளவு தூரம் நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதிலும் , அதை நீதிமன்றங்கள் எவ்வளவு தூரம் உணரும் என்பதாலேயே இறைமை பாதுகாக்கப்படும் - என்றார். (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்பின்போது சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நட்டஈடு பெற வாய்ப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அகலிப்புப் பணிகளின் போது சுவீகரிக்கப்படும் பொதுமக்களின் காணிகளுக்கு நட்டஈடு பெறுவதற்கானவாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதன் மூலம் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்கப்படாவிடின் அது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறையிட முடியும் எனவும் அது தொடர்பில் ஆணைக்குழு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


எமது ஆணைக்குழுவுக்கு தனியார் காணி தொடர்பில் ஏற்கனவே ஒரு விடயம் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. புத்தூர் ஆவரங்காலைச் சேர்ந்த ஒருவர் தனது தனியார் காணியில், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதி அகலிப்புப் பணிகளுக்காகக் கற்கள் பறித்தமைக்கு எதிராக முறையிட்டிருந்தார்.

இது தொடர்பில் எமது ஆணைக்குழு ஆராய்ந்து அவர் கேட்டிருந்த நட்ட ஈட்டுத் தொகையை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொடுத்தோம்.

தற்போது வீதி அகலிப்புப் பணிகளின் போது சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளுக்கு நட்ட ஈடு வழங்கப்படாதுவிடின் அது குறித்து முறையீடு செய்ய முடியும். அத்துடன் முறைப்பாடு செய்பவர் அந்தக் காணி தனக்கு உரித்தானது என்பதையும் பிரதேச சபையின் விதிமுறைகளுக்கு அமைவாக கட்டப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தினால் எம்மால் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படும்.

அதன் பின்னர் அந்த விடயம் தொடர்பாக எம்மால் விசாரணைகள் மேற்கொண்டு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றார். (த-15)

# கோப்பாயில் வாராந்தம் நோயியல் கருத்துப் பகிர்வு



வலி வடக்கு,செப்.28

கோப்பாய் பகுதி மக்களின் நலன் கருதி கோப்பாய் வைத்தியர்களால் வாரம் தோறும் நோயியல் கருத்துப் பகிர்வு நடைபெற்று வருகிறது.

வாரம் தோறும் பல்வேறு தலைப்புக்களில் கோப்பாய் வைத்திய சாலையில்நடைபெற்று வரும் இந்த நோயியல் கருத்துப் பகிர்வில் மக்கள் ஆர்வத்துடன்கலந்து கொண்டு பயன் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் நகரை நாடி வந்து மருத்துவ வியாபாரிகளிடம் சிக்குவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நோயியல் கருத்துப்பகிர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வைத்தியர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு இடமாற்றம் சென்றுள்ளபோதும் மக்கள் நலன் கருதி இங்கு வந்து. இந்தக் கருத்துப் பகிர்வை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டது. (த)

# சித்திரக் கண்காட்சி

சுன்னாகம்,செப்.28

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ். சிவதாசனின் ஒழுங்கமைப்பில் சித்திரத்துறை மாணவர்களின் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.

''சின்னச் சின்னக் கைகள்'' என்ற தலைப்பிலான இக் கண்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை 35/5, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் நடைபெறும்.

செல்வன்அபிராம் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் வை. சிவசுப்பிரமணியமும் (ஓவியர் ரமணி), சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் எஸ். கணேசராசா,யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சற்குணராசா, யாழ். கல்வி வலய சித்திர பாட ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர். கண் காட்சி காலை9மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். (த-38)

# சாரதிகள், நடத்துநர்களுக்கு தொழில் அடையாள அட்டை

## போக்குவரத்து ஆணைக்குழு வழங்குகிறது

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.மாவட்டத்தில் சேவையிலுள்ள சிற்றூர்திகள்,பேருந்துகளில் கடமையிலுள்ள சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

நாளை வியாழக்கிழமை வரை இந்தப் பதிவுகளை யாழ். மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அடையாள அட்டைகள் இன்றி இனிவரும் காலத்தில் பஸ் சாரதிகளோ நடத்துநர்களோ கடமையாற்ற முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய கூட்டிணைக் கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தலைவர் பொன்னுத்துரை கெங்காதரன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு

யாழ்.மாவட்டத்தில், சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள், பேருந்துகளில் கடமையாற்றும் சாரதிகள்,நடத்துநர்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அடையாள அட்டைகள் வழங்குவதற்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

கொழும்பில் உள்ளஆணைக்குழுவின் அலுவலர்களால் இந்தப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனயாழ்மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் தொடக்கம் நாளை வரை இந்தப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.

இந்தப்பதிவுக்குதேசிய போக்குவரத்து ஆணைக்குழு அடையாள அட்டை பெற பதிவு செய்யாத சகல சாரதிகள்,நடத்துநர்கள் தத்தமது சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நேர அட்டவணைப் படி சமுகமளிக்க வேண்டும்

இனிவரும் காலங்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அடையாள அட்டைகள் இன்றி சேவையில் ஈடுபட முடியாது.இப்போது பதிவு செய்யாமல் அடையாள அட்டை இன்றி சேவையில் ஈடுபடும்போது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

யாழ்.மாவட்டத்திலிருந்து மாவட்டத்துக்கு வெளியே கிளிநொச்சி,முலைத்தீவு,வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கான சேவையில் ஈடுபடும் சாரதிகளும் நடத்துநர்களும் இதற்குப் பதிவு செய்வது அவசியம் ஆகும் - என்றார். (த-14)

# விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.28

தலைக்கவசம் அணியாமல் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கிணற்றுக்கட்டுடன் மோதியமையால் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அராலி செட்டியார் மடம் வீதியிலே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதே பகுதியைச் சேர்ந்த பொ.சசிகரன் (வயது-26), ம.மயூரன் (வயது-32), இ.நிசந்தன் (வயது-26) ஆகிய மூவருமே தலை, கழுத்து, வாய்ப் பகுதிகளில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-323)

# சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.28

தேசிய சுகாதார தினத்தை முன்னிட்டு ஒக்ரோபர் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை உடுவில் பிரதேச சுகாதாரப் பிரிவுகளில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உடுவில் சுகாதாரப் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்குகளில் டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், தொற்றுநோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பன இடம் பெறவுள்ளன.

பாடசாலைகள், கிராமங்கள் தோறும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-313)

# கல்வி வாய்ப்புக்களில் சமமின்மையை நீக்கவே ஆயிரம் பாடசாலைத் திட்டம்

## இதனைச் சரியாகப் பயன்படுத்தக் கோருகிறார் இளங்கோவன்

சுன்னாகம், செப்.28

கல்வி வாய்ப்புக்களில் நிலவிய சமமின்மையை நீக்கி பிரதேசப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் மூலம் சரியான வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் பிரதேசத்தின் இரண்டாந் தரப் பாடசாலைகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்.

இணுவில் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிபர் அ.சதானந்தன் தலைமையில் கல்லூரியின் சரஸ்வதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் உரையாற்றும் போது மேலும் குறிப்பிட்டதாவது:

கிராமப்புறப் பாடசாலைகளில் பயின்று அங்கு கற்பித்த ஆசிரியர்களது கையால் குட்டுப்பட்டு அவர்களால் வளர்க்கப்பட்டு பெரிய பாடசாலைகளுக்குச் சென்று படித்தே நாமெல்லோரும் முன்னேறியுள்ளோம்.பிரதேசப் பாடசாலைகள் வளங்களும், வசதிகளும் இல்லாமல் இயங்கும் அதே வேளை நகரப்புறப் பாடசாலைகள் சகல வளங்கள் வசதிகளுடன் இயங்கும் நிலை காணப்படுகின்றது. கிராமப்புறப் பிள்ளைகள் அதிகாலையிலேயே பஸ்ஸிற்குக் காவலிருந்து மிகக் கஷ்டப்பட்டு நகரப்புறப் பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள்.

இந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நாட்டில் உள்ள இரண்டாம் தரப் பாடசாலைகளுக்கு முழு வளங்களையும் அளித்து அபிவிருத்தி செய்யும் சிறப்பான திட்டமே ஆயிரம் பாடசாலைத் திட்டமாகும். பிரதேசத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளை அயற் பாடசாலைகளாலான ஊட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானதாகும். இந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென 35 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இரண்டாம் தரப்பாடசாலைகள் தரமுயர்த்தப்படும் போது ஆரம்பப் பாடசாலைகளை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் பல பாடசாலைகள் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள பின் நிற்கின்றன. ஆனால்இரண் டாம் தரப் பாடசாலைகள் தரமுயர்த்தப்படும் போது அவற்றின் ஆரம்பப் பிரிவுகள் பாடசாலைகள் ஊட்டப் பாடசாலைகளாக விளங்கும். எதிர் காலத்தில் நிதி கிடைப்பது கஷ்டமாகும். மக்கள் மீள்குடியமர்ந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கே முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது. எனவே ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் இணைந்து பிரதேசத்தின் முதற்தரப் பாடசாலைகளாக மிளிர்வதற்கான மீள்சிந்தனை ஏற்பட வேண்டும் என்றார்.

வலிகாமம் கல்வி வலயக் கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சறோஜினி நாகராஜா, உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபெரநாதன் ஆகியோரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையரை நாடு கடத்தும் நடவடிக்கைக்குக் கண்டனம்

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் பிரிட்டன் மேற் கொண்டு வரும் கொள்கையை சித்திர வதையில் இருந்து விடுதலை (ப்ரீடம் ப்ரோம் டோச்சர்) என்ற அமைப்பு கண்டித்துள்ளது. இலங்கையில் தமிழர்கள் மீது தொடர்ந்தும் வன் முறைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் அகதிகளாக வந்தவர் களை பிரிட்டன் திருப் பியனுப்புவது எந்த விதத்தில் நியாயம் என்று அந்த அமைப்பு கேட்டுள்ளது. அகதிகளாக பிரிட்டனுக்குள் வந்த சில தமிழர்களை பிரிட்டன் இன்று புதன்கிழமை இலங்கைக்கு நாடு கடத் தவுள்ளது. இது ஏற்றுக் கொள்ளதக்க விடயமாகாது என்று குறித்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கெய்த் பெஸ்ட் குறிப்பிட்டுள்ளார்.

சனல் 4 காணொளி இலங்கையில் போர்க் குற்றம் இடம் பெற்றமையைக் காட்டியது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவும் இந்த போர்க் குற்றச் சாட்டை நிரூபித்துள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டனும் இலங்கை மீது மனித உரிமைகள் தொடர் பான அழுத்தங்களை மேற் கொண்டு வருகிறது.

எனினும் அந்த நாட்டில் தமிழர்கள் மீது தற்போதும் மனித உரிமை மீறல் சம் பவங்கள் இடம்பெறுகின்றன என்பதை பிரிட்டன் அவ தானிக்கத் தவறிவிட்டது என்று பெஸ்ட் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டமைக்கான ஆதாரங் களை சர்வதேச மன்னிப்பு சபை வெளியிட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(வ)

# கொழும்பு வாழ் மக்களின் தேவைகளை ஜனாதிபதியால் மட்டுமே தீர்க்க முடியும்

**அமைப்பாளர் பௌசான் அன்வர் கூறுகிறார்**

கொழும்புவாழ் மக்களின் அனைத்து தேவைகளையும் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான அரசால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும்- என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பௌசான் அன்வர் தெரிவித்தார்.


கொழும்பு மாநகரசபைக்கு போட்டியிடும் ஐ.ம.சு.மு. வேட் பாளர்களுக்கு ஆதரவு தேடி புதுக் கடை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

கடந்த காலங்களில் கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவு செய் யப்பட்டவர்கள் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. இன் றைய அரசு மக்களின் பிரச்சினை களை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க முன்வந்துள்ளது. அதற்கு மக்களின் ஒத்துழைப்புத்தேவை. தேர்தல் காலங்களில் மட்டும் உங்களிடம் வந்து அதைச்செய்து தருவேன்; இதைச் செய்து தருவேன் என்றுகூறி வாக்கு களைக் கொள்ளையடிக்கத் திட்ட மிட்டுள்ளனர். அவர்களின் பசப்பு வார்த்தைக்கு மயங்கி வாக்கு களை வீணாக்க வேண்டாம்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசு தற் போது நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்தில் ஈடுபட் டுள்ளது. ஜனாதிபதியும், பாதுகாப்புச் செயலாளரும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கான வழி வகைகளைச் செய்துள்ளனர். எனவே நாம் எமது ஆதரவை அரசுக்கே வழங்க வேண் டும் - என்றார். (வ)

Hunters
Trusted Quality Since 1911
ஹன்டர் அன்ட் கம்பனி பீஎல்சி
மூன்று நாள்
சேல்
சர்வதேச புகழ்பெற்ற தயரிப்பு வகைகள் குறைக்கப்பட்ட விலைகளில் வீட்டு மற்றும் தோட்ட தயாரிப்புகள், கைத்தொழில் மற்றும் மென் பொறியியல் தயாரிப்புகள், சைக்கிள்கள், உபகரணங்கள்
2011 செப்டெம்பர் 28, 29, 30
காலை 9 - மாலை 7
at the following showroom
யாழ்ப்பாணம்
320 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை: 021-4923112.



# புரட்டாதிச் சனி நேர்த்திகள் தீர்க்க விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,செப்.28

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்க டேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புரட்டாதி சனிவார நேர்த்திக்கடன் களை தீர்க்கும் அடியவர்களுக்காக விசேட ஏற் பாடுகளை ஆலய நிர்வாகத் தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆலயத்தில் நடுவில் சூரியன் மேற்கு நோக்கிய பார் வையில் இருக்க சுற்றியிருக்கும் மற்றைய எட்டு கிரகங் களின் பார்வையும் சூரியன் மேல் இருப் பது அதைவிட சூரியனும் சனீஸ் வர னும் நேர் எதிராக இருப்பது சிறப்பு மிக்க அம்சங்களாகும்.

இதற்கமைய பக்தர்களின் நலன் கருதி சனீஸ்வரனுக்கு பிரீ தியான கறுப்புச் சட்டியில் எள்தீபம் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட் டுள்ளன.(ம-313)

# குருநகர் பகுதியில் மதகுகள் சேதம்

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட குருநகர், சின்னக்கடைப் பொதுச் சந்தையைச் சூழ அமைந்துள்ள வடிகால்கள் சேத மடைந்த நிலையில் காணப்படு கின்றன. இந்த வடிகால்களின் மேலுள்ள வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

குருநகர் சின்னக்கடைப் பகுதி யில் நான்காம் குறுக்கு வீதி, குரு நகர் பங்ஷால் வீதி ஆகியவைகளில் இந்தச் சேதங்கள் உள்ளன. இவற் றைத் திருத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். இந்த மதகுகள் உடைந்து சேதமடைந்து உள்ளமையால் கழிவு நீர் வெளியேறுவதும் தடைப்படுள்ளதாகவும் சுட்டிக் காகட்டப் பட்டுள்ளது. (ம-51)

**பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்**

வாகனங்களின் பிளாஸ்ரிக் ஒட்டுவேலைகள், கண்ணாடி வகைகள், பொன்சிங், பைவர் மோல்டிங், பிளேற்றிங் (மொப்பிங்வேலை), ஸ்பிறேபெயின்ரிங் என்பன சிறந்த தொழில் நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்.

வரலட்சுமி பிளாஸ்ரிக் ஒட்டுத் தொழிலகம்.
இல.286/2, அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P: 0773512591

**தவறிவிட்டது**

52-3961 ரொயாட்டா டவுண் ஏசி வான் பதிவு புத்தகம் என்பன சிவப்பு நிற File உடன் பருத்தித்துறைப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-சிவநேசக்குருக்கள்,
சிவன் கோயிலடி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.
T.P: 0213219945

**தவறிவிட்டது**

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த நடராஜா பஞ்சசீலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (791083281V) அச்சுவேலியில் தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் அச்சு வேலி பஸ் நிலையம், மக்கள் வங்கிக்கு கீழே உள்ள நடராஜா புடைவையகத்தில் ஒப்படைக்கவும். / 0779122985 உடன் தொடர்பு கொள்ளவும்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மேணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**விசேட சேவை**



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவச்செல்வங்களுக்கு அவர்களின் புகைப்படம் பதித்த விருதுப் பொருள்களையோ, தங்க மெடலையோ பரிசாக வழங்கி ஊக்குவியுங்கள்.
இல.381, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

# பேரா. நந்தி நினைவுப் பேருரை முனைவர் அரசு நிகழ்த்துவார்



யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வாழ்நாள் பேராசிரியரான அமரர் செல்லத் துரை சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவு பேருரை அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் . பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்காக சென்னை பல்கலைக்கழகத் தின் தமிழ் இலக்கியத் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் வி.அரசு இந்தி யாவிலிருந்து வருகை தரவுள் ளார். 'நந்தியின் புனைகதை களில் ஈழப்பின்- காலனிய சமுகம்' என்ற தலைப்பில் இவர் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

பேராசிரியர் நந்தி யாழ். பல் கலைக்கழக மருத்துவ பீடத் தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்து மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக் கியவர். மருத்துவ மாணவர் களின் வளரச்சிக்காகத் தனது இறுதிக்காலம் வரை பணியாற் றியவர். சமுதாய மருத்துவத் துறை பேராசிரியராகவும் பணி யாற்றிய இவர் இலக்கிய மற் றும் ஆன்மிகத் துறைகளிலும் பணியாற்றியவர். இவருக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் வாழ் நாள் பேராசிரியர் பட்டம் வழங் கிக் கௌரவித்தது.

பேராசிரியர் சிவஞான சுந் தரம் (நந்தி) மருத்துவத் துறை சார்ந்த பல நூல்களை எழுதி யதுடன் இலக்கிய துறையிலும் ''நந்தி'' என்ற புனை பெயரில் சிறுகதை மற்றும் நாவல்களை யும் சிறுவர்களுக்கான கட்டுரைத் தொகுப்புக்கள், ஆன்மிக மற்றும் மருத்துவ அறிவுரை சார்ந்த நூல் களையும் எழுதியுள்ளார்.

இத்தகைய பல்துறைசார்ந்த ஆற்றல் மிக்க இவர் 2005 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 3 ஆம் திகதி காலமானார். (வ)

# தமிழினிக்கு புனர்வாழ்வு அளிப்பது குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறவும்

## நீதிமன்றம் அறிவுறுத்து

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினிக்கு புனர் வாழ்வு அளித்து மீளவும் சமூகத்துடன் இணைப்பது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனைப் பெற்றுக் கொள் ளுமாறு நீதிமன்றம், தமிழினி யின் சட்டத்தரணிக்கு அறி வுறுத்தல் விடுத்துள்ளது.

கொழும்பு நீதிமன்றின் பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி இந்த அறிவுறுத் தலை விடுத்துள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழினி குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வும், அதனால் அவர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழினியின் இளமைக் காலத்தை புலிகள் பறித்துக் கொண்டதாகவும், தற்போது அவர் சிறையில் வாடுவதாக வும் சட்டத்தரணி நீதிமன்றில் உருக்கமாகத் தெரிவித்துள்ளார். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி இடம்பெயர் முகாம் ஒன்றில் வைத்து தமிழினியை பொலிஸார் கைது செய்தனர்.(வ)

## முதலாம் ஆண்டு அஞ்சலி நினைவலைகள்

அன்னை மடியில்
19 . 03 . 1931

ஆண்டவன் அடியில்
09 . 10 . 2010



திதி: துதியை

**திருமதி பத்மநிதி அருணாசலம்**

திருப்தியும் இன்பமும் உன் வாழ்வில் துலங்க - நின்
தேவைகள் எல்லாம் திட்டமிட்டபடி நீ அடைய
உன் வாழ்க்கைப் பாதை நர்த்தனமாய் நகர்ந்து இல்லற வாழ்வில் பூரண கும்பமானாய்
ஊரையும், உறவையும், நண்பர்களையும், ஆலயங்களையும் தரிசிக்க ஊர் வந்து நிறைவாக்கி
மீண்டும் லண்டன் சென்று குடும்பத்துடன் நின் பணி நிறைவாகிவிட்டது என்றெண்ணி எம்மை
விட்டு இல்லற வாழ்வை துறந்தாயோ? நிழலாகிவிட்ட நின் நினைவலைகள் எம்
நெஞ்சமதில் சுழலாய் வந்து சுனாமியாக அலைமோத எழில்பாடும் நின் பண்பை
பாசத்தை பணிவை சேவையை கடந்த ஐபத்தாண்டுகளுக்கு மேலாக உன் பாச
உறவை எப்படி எடுத்துரைப்போம் பராபரமே! நின் ஆத்மா படைத்தவன் பாதார
விந்தத்தில் பூரண சுகமடைய வேண்டுகின்றோம் நாமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

லண்டன். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## போரினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள் நேர்க்கோட்டில் இணைய...

சமுதை கெட்டால் குட்டிச்சுவர் என்பார்கள். 2009 மேயுடன் கொடிய யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தத் தினம் வரையான போரில் எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர்? எத்தனை பேர் அங்கவீனமாக்கப்பட்டனர்? எத்தனை பேர் காயமுற்றனர்? என்ற சரியான அல்லது ஓரளவுக்குத் திருத்தமான தகவல் ஏதும் யாரிடமுமில்லை.அது போலவே எத்தனை பிள்ளைகள் தாய், தந்தையரை இழந்துள்ளனர்? எத்தனை பெண்கள் கணவனை இழந்த விதவைகளாகவுள்ளனர்? எத்தனை பேர் மனைவியரை இழந்துள்ளனர்? எத்தனை பேர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளனர்? எத்தனை சிறுவர்கள் தமது கல்வியை விட்டு நீங்கியுள்ளனர்? என்ற விவரங்களையும் யாரிடமும் முழுமையாகப் பெற முடியாதுள்ளது.

இந்தத் தகவல்கள் அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். ஐ.நா.நிறுவனங்களிடம் இருக்க வேண்டும். அரசியற் தலைவர்களிடம் குறிப்பாக, தமிழ் அரசியற் தலைவர்களிடம் இருக்க வேண்டும். ஆனால் சில விடயங்களில் மட்டும் அரசியற் தலைவர்களாலும், அரசாங்கத்தாலும் எழுந்தமானமாகவே தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இரண்டும் மலைக்கும் மடுவுக்குமிடையிலான வேறுபாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன என்று போரின் போது வன்னியில் வாழ்ந்து தப்பி ஓடியவர்கள் தெரிவிக்கின்றனர்.

தரவுகள் என்பவை சரியாகவும்,திருத்தமான அளவிலும் இருக்க வேண்டும். ஏனெனில் இத்தரவுகளைக் கொண்டே பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்கள் செய்யப்பட வேண்டும். பாடசாலை செல்லாத, செல்ல முடியாத பிள்ளைகளுக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். விதவைகள், தபுதாரன்களுக்கான எதிர்கால வாழ்க்கை ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டு அவர்களது எதிர்காலத்துக்கு அடித்தளமிடப்பட வேண்டும்.மொத்தத்தில் பல்வேறு சமூக நிகழ்ச்சித் திட்டங்கள் போரால் பாதிக்கப்பட்ட அனைவர் தொடர்பிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

காலாதி காலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளன,வருகின்றன. இவ்வுதவிகள் ஆரம்பத்தில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக இருக்கும். அடுத்தடுத்த தடவைகளில் இவை தேவைக்கு மேலதிகமாக அவர்களுக்குக் கிடைக்கும். எனவே, உதவிப் பொருள்களைக் கையளித்த நிறுவன வண்டி அடுத்த வளைவில் திரும்புவதற்கிடையில் பெறப்பட்ட பொருள்கள் சந்தைக்குச் சென்று விடும். ஒரு பக்கப் பார்வையில் மற்றவரில் தங்கி நின்று வாழ்வதற்கும், கையேந்தி வாழ்வதற்கும் அவர்களைப் பயிற்றுவிப்பதாகவே இவ்வுதவிகள் அமையும்.

பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதே சிறந்தது என்றொரு சீனப் பழமொழி உள்ளது. பொதுவாக பிரதேசத்தின் தனித்துவத்தைப் பேணக் கூடிய வகையில், பிரதேச வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் மார்க்கம் பற்றி அதிகளவில் கவனம் செலுத்தப்படுவதில்லை. எனினும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டிருப்பதும் மறுப்பதற்கில்லை.

வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் எனப்படுபவை பல்பரிமாணம் மிக்கவையானவையாகும். இது பல்முனைப்பட்ட அவர்களது தேவைகளுக்கு தொடரானதும், கூட்டானதுமான நடவடிக்கைகள் அவசியமாகும்.அரசாங்கம், தமிழ் அரசியற் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு நேர்கோட்டில் இணையும் போதே அவர்களுக்கான உதவிகள் சரியான முறையில் கிடைக்கும்.

அத்தகைய ஒரு நிலைமைக்கு முன்பாக சரியான தரவுகள் அவசியமாகும். இத்தரவுகள் அரசாங்கத்தைக் குறை கூறப் பயன்படுத்தப்படும் மிகைத் தரவுகளாகவோ, பயங்கரவாதிகளுடன் தமிழ் அரசியற் தரப்புக்களை ஒப்பிட்டு அவற்றின் பிரசாரத்தை உடைக்கும் வகையில் அரசாங்கத்தால் வெளியிடப்படும் குறைக்கப்பட்ட தரவுகளாகவோ இருக்கக் கூடாது என்பதே முக்கியமாகும். நடந்து முடிந்த யுத்தத்தின் தீர்ப்பு எவ்வாறேனும் எழுதப்படட்டும். இறைவனது தீர்ப்பு என்றும் ஒன்றிருப்பதாகவே பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் நம்புகின்றனர். ஆனால் இந்த வெளிப்பார்வையால் பாதிக்கப்பட்ட மக்களைக் கவனிக்காது விட முடியாது. ஏனெனில் வன்னி மக்களை ஆரோக்கியமான சமூகமாக மீளவும் உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியதாகும்.

விழிச்சான் குஞ்சு.

# இலங்கையில் தமிழ் மக்களுக்கு சட்ட ரீதியாக நீதி கிடைக்காது

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் தெரிவிப்பு



தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய அரசியல் மற்றும் சட்ட ரீதியிலான வாய்ப்பு இலங்கையில் இல்லை என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத்ரகுமாரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த ரமேஷின் மனைவி நியூயோர்க் சிவில் நீதிமன்றில் தொடுத்துள்ள வழக்கு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்து முடிந்த யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த ரமேஷ், யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் ராணுவத்தினரிடம் சரணடைந்து, பின்னர் படையினரால் கொல்லப்பட்டதாகக்கூறி, அவரது மனைவி, வத்சலா தேவி, அமெரிக்காவின் நியூயோர்க் நகர சிவில் நீதிமன்றம் ஒன்றில் இழப்பீடு தரக்கோரி இரண்டு வழக்குகளை தொடுத்திருக்கிறார்.

இதில் ஒரு வழக்கில் இலங்கையின் ராணுவ உயர் அதிகாரி, மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வாவையும், மற்றொரு வழக்கில், இலங்கை முப்படைகளின் தளபதி என்ற வகையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பிரதிவாதிகளாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்பது குறித்த தகவல்கள் வெளி யில் வரவேண்டும், மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த வழக்கை தாக்கல் செய்ததாக அவர் கூறியுள்ளார். வத்சலாதேவி சார்பில் இந்த வழக்கை தாக்கல் செய்த விஸ்வநாதன் உருத்ரகுமாரன் மக்களுக்கான நீதி கிடைக்கக் கூடிய அரசியல் மற்றும் சட்ட ரீதியிலான வாய்ப்பு இலங்கையில் இல்லாத காரணத்தினாலேயே இந்த வழக்கை தாம் அமெரிக்காவில் தாக்கல் செய்ததாகவும் அவர் கூறுகிறார்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளதாகவும், ஆனாலும் இது வரை அந்த அழைப்பாணையை பிரதிவாதிகளிடம் கையளிக்க முடியவில்லை என்றும் அவர் தெரி வித்துள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. (வ)

## பஸ் -லொறி விபத்து 19 பேர் காயம்

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தை பகுதி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற தாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். மிஹிந்தலையில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற பஸ்ஸும் எதிர் திசையில் வந்த லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (வ)



கொழும்பு மாநகர சபையில்'' தேசத்தின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டிய பெருந் தலைவர்களின் '' ஓவியங்கள் திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதமர் தி.மு.ஜயரட்ன வுக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கைலாகு கொடுக்கிறார். அருகில் அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதர்கள் நிற்கின்றனர்.

# சர்வதேச சமூகத்துக்குப் பதிலளிப்பதற்காக சுயாதீன விசாரணைக்குழு ஒன்று அவசியம்

## சுட்டிக்காட்டுகிறார் அமைச்சர் விதாரண

சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளின்படி குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழு ஒன்றை இலங்கை அரசு நியமித்தால் மட்டுமே சர்வதேச தலையீடுகள் மற்றும் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

-இவ்வாறு சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண நேற்றுமுன் தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்:

இலங்கை மீதுள்ள யுத்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை அவசியம் என்று ஐக்கிய நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

எனினும், சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல்களையும், கோரிக்கைகளையும் இலங்கை அரசு மறுத்து வருவது வழமையாகி விட்டது.

இந்த நிலையில், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் – ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போதும் இந்த வலியுறுத்தலை விடுத்து, விசாரணை தொடர்பில் ஞாபகப் படுத்தியுள்ளார்.

எனவே, இவர்களின் வலியுறுத்தல்களையும், கோரிக்கைகளையும் நல்லிணக்க ஆணைக் குழுவைச் சுட்டிக்காட்டி தொடர்ந்து தட்டிக்கழிக்க எம்மால் முடியாத சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. சர்வதேச சமூகமும் ஐ.நாவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளில் அதிருப்தி நிலையையே வெளிப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, நல்லிணக்க ஆணைக் குழு ஒரு விசாரணைக் குழு என்பதை அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். அதனாலேயே புறம்பான விசாரணை அவசியம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர் அதனால் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கும் படியான சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொள்ள குழு ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றை எடுக்கும் பட்சத்திலேயே இலங்கை மீதான சர்வதேச தலையீடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் - என்றார். (வ)

# ஜனாதிபதியின் புகைப்படத்தை கைபேசியில் வைத்திருந்தவர் கைது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படமொன்றை விகாரமாக்கி கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படும் வகையில் இந்த படங்களில் மாற்றம் செய்யப்பட்டு கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து வைத்துள்ளார்.

கொட்டாவை நெவுன்கல பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியை இழிவுபடுத்தும் வகையிலான புகைப்படங்களுக்கு மேலதிகமாக பாலியல் காட்சிகளும் குறித்த கையடக்கத் தொலைபேசியில் மேற்படி நபர் பதிவு செய்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகள் நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் கட்டிப் பலமாதங்களாகியும் நீர்ப்பாசனத் தொகுதி கிடைக்கவில்லை

## விரக்தியில் கிளிநொச்சி விவசாயிகள்

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையத்தினூடாகச் சூரியசக்தியில் இயங்கும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பணத்தைச் செலுத்திய விவசாயிகள் ஒன்றரை வருடங்கள் கடந்தும் இவை தமக்கு வழங்கப்படவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தினூடாகத் தவணை அடிப்படையில் பணத்தைச் செலுத்தக் கூடிய வகையில் சூரியசக்தியில் இயங்கும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். மேலும் தலா பத்தாயிரம் ரூபாவும் மேலதிகமாக ஆயிரம் ரூபாவும் செலுத்தியுள்ளனர். தற்போது ஒன்றரை வருடம் கடந்தபோதும் இவர்களுக்கான சொட்டுநீர்ப்பாசனத் தொகுதிகள்வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக விவசாயிகள் பலர் கருத்துத் தெரிவிக்கும்போது, யுத்தத்தால் இடம்பெயர்ந்து அனைத்தையும் இழந்து அகதிகளாகி மீள் குடியேறியபோது தமது வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆரம்பத்தில் ரூபா 10 ஆயிரத்தைச் செலுத்தினோம்.

மேலும் மேலதிகமாக ஆயிரம் ரூபாவையும் செலுத்தி ஒன்றரை வருடங்களைக் கடந்த நிலையிலும் தமக்குரிய சூரியசக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதி வழங்கப்படவில்லையென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் இந்தப் பணத்தைச் செலுத்தியதாகவும் அதனைவிட மேலதிகமாகப் பற்றுச்சீட்டுக்கள் எதுவும் இன்றி ஆயிரம் ரூபாவைச் செலுத்தியிருந்தும் பலன் கிடைக்கவில்லையென விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும்போது;

மேற்படி சூரியசக்தி சொட்டு நீர்ப்பாசனத் தொகுதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தாங்கள் விவசாயிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்ததாகவும் மேலதிக விடயம் எவையும் தங்களின் பொறுப்பு இல்லையெனவும் தெரிவித்தார். இதற்கான முழுப்பொறுப்பும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடமே எனப் பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர், கரைச்சி உதவி அரச அதிபர், பூநகரி அரச அதிபர் ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அரசஅதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அடுத்தமாதம் மூன்றாவது செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள விவசாயக் குழுக் கூட்டத்துக்கு முன்னர் விவசாயிகளின் இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனக் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (க-6)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

மன்னார், செப்.28

**கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலை-**

சத்தியசீலன் டர்சன் - 190 புள்ளிகள், மாவட்ட நிலை 1, ஜீவரட்ணம் இலக்ஷனா - 164 புள்ளிகள், ஜெயகரன் சகானா -161 புள்ளிகள், ஜெகமோகன் சிந்துஜமோகன் - 153 புள்ளிகள். (601)

***

**மன்னார் அல் - அஸ்கர் ம.வி. நவோதைய பாடசாலை**

அஜில்மல் காண் முகமட் அசாட் - 164 புள்ளிகள், முகமட் மாபீர் முகமட் மின்காஸ் - 160 புள்ளிகள், முகமட் ரஸ்லான் றிஸாட் அகமட் - 157புள்ளி கள், எ.எம்.அல்பகான் - 157 புள்ளிகள், எம்.ஆலம் குவைதா - 155 புள்ளிகள்.

(601)

## உயர்ந்த சாதனை...



பெருமை சேர்த்தவர்கள்: உருத்திரபுரம் புனித பற்றிமா றோ.க. த.க.பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகள் பாடசாலை அதிபர் அருட் சகோதரி அன்ரனீற்றா மார்க், வகுப்பாசிரியை திருமதி ம.பவானந்தன் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

# 9 மாதங்களாக அதிபர் இன்றி தத்தளிக்கும் அக்கராயன் ஆரம்ப வித்தி.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஒன்பது மாதங்களாக அதிபர் இல்லாமல் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் இயங்கி வருகிறது. எனினும் இன்னும் இருவாரங்களுள் அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று கிளிநொச்சி வலயப் பதில் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி முதல் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் இயங்கி வருகின்றபோதும் அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பது பெற்றோர்கள் மத்தியில் விசனத்தை உருவாக்கியுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயம் 'இசுறு' பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அக்கராயன் மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுடன் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் புதிய பாடசாலையாக இயங்கத் தொடங்கியபோது அதிபர் விரைவில் நியமிக்கப்பட்டு அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனிப்பாடசாலையாக இயங்கும் எனப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அக்கராயன் ஆரம்பப் பிரிவு 142 மாணவர்களுடன் அக்கராயன் மகாவித்தியாலயக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

அக்கராயன் மகாவித்தியாலயத்துடன் இணைந்து மதிய உணவு வழங்கல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் விவரப்படி 106 பாடசாலைகள் கிளிநொச்சி வலயத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் இயங்குகின்ற 92 பாடசாலைகளில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயமும் ஒன்று.

இதுதொடர்பாக கிளிநொச்சி கல்விவலயத்தின் பதில் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கருத்துத் தெரிவிக்கும்போது;

இந்த அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் தகுதியானவர்கள் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

இதுவொரு பின் தங்கிய இடமாக இருப்பதால் அருகிலுள்ள பாடசாலையில் உள்ள தகுதியான ஆசிரியர்களை அனுகியுள்ளோம். இன்னும் இருவாரங்களில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு அதிபர் நியமிக்கப்பட்டுவிடுவார் என்றார். (க-410)

# வவுனியாவில் சைக்கிள் தொழிற்சாலை

சைக்கிள் களைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று வவுனியாவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுமார் ஐந்துகோடி ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தத் தொழிற்சாலை இந்தியா மற்றும் தனியார் நிறுவனமொன்றின் கூட்டு முயற்சியில் அமையவுள்ளது.

வவுனியா மெனிக்பாம் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட அரை ஏக்கர் காணியில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும்.

அடுத்த ஆறுமாதகாலப்பகுதியில் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் சைக்கிள்களுக்கு இருக்கும் தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# விதைநெல்லுக்கு மானியம் தர அக்கராயன் விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தமக்கான விதை நெல்லை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறு அக்கராயன் திட்டக் குழுவினூடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் இந்த ஆண்டு சிறுபோக நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதேவேளை கடந்த காலபோக நெற்செய்கையும் சீரற்ற காலநிலை, வெள்ளப் பெருக்கு மற்றும் நோய்த் தாக்கம் என்பவற்றால் போதிய விளைச்சலைத் தரவில்லை. இதனால் அடுத்த காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதை நெல் விவசாயிகளிடம் இல்லை. அதனை அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலையிலும் இவர்கள் இல்லை. இதனால் இம்முறை காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லை மானிய அடிப்படையில் பெற்றுத் தருமாறு விவசாயிகள் விவசாய திணைக்களம் (விரிவாக்கம்), மாவட்ட அரச அதிபர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோரிடம் அக்கராயன், ஸ்கந்தபுரம் உப திட்டக் குழுவினூடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கோரிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டபோது விதை நெல்லைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஆனால் உறுதிபடக் கூறமுடியாது எனவும் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# கடற்புலித் தளபதியின் வீட்டை தேடி அலையும் தெற்கு மக்கள்

முள்ளியவளை, செப்.28

கடற்புலிகளின் தளபதி சூசை வீடு என நினைத்து சூலை என்பவரின் வீட்டைத் தென்பகுதியிலிருந்து வந்தவர்கள் குதூகலத்துடன் புகைப்படம் எடுத்து ஏமாந்த சம்பவம் அண்மையில் புதுக்குடியிருப்பில் அரங்கேறியுள்ளது.

தென்பகுதியிலிருந்து மாங்குளம் - முல்லைத்தீவு வீதியூடாக வந்த தென்பகுதியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வள்ளிபுனத்திலுள்ள கடையொன்றில் தமது வாகனத்தை நிறுத்திச் சூசையின் வீட்டுக்குச் செல்லும் வழியைக் கேட்டுள்ளனர்.

கடையில் இருந்தவர்களுக்குச் சூசை என்பது சூலை எனக் கேட்டுள்ளது. இதனால் கோம்பாவில் பகுதியிலுள்ள சூலை என்பவரின் வீட்டுக்கு வழிகாட்டியுள்ளனர். தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகளும் மிகுந்த ஆர்வத்துடன் சூலையின் வீட்டைச் சென்றடைந்தனர். அங்கே இரும்புக் குவியல்கள் மலை போலக் குவிக்கப்பட்டிருந்தன.

அவர்கள் கடற்புலிகளின் தளபதி சூசையும் இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததாக எண்ணினார்களோ என்னவோ இரும்புக் குவியல்களை மளமளவெனப் புகைப்படம் பிடித்தார்கள்.

சூலையின் வீட்டிலுள்ள இரும்புக் குவியல்களைப் படம் பிடிப்பதில் அங்கு சென்றவர்கள் போட்டி போட்டுக் கொண்டனர். தென்பகுதிக்குச் சென்று புலிகளின் தளபதி சேகரித்து வைத்ததாக அந்த இரும்புக் குவியலைக் காட்டுவதில் அவர்கள் அக்கறையுடன் இருந்ததாகவே தெரிந்தது.

அப்போது அந்த வழியே வந்த உள்ளூரைச் சேர்ந்தவர்கள் ஆச்சரியத்துடன் அங்கே குழுமி நின்று வேடிக்கை பார்த்தனர். சூலையின் வீட்டுக்கு இன்று என்ன நடந்தது ? என்று கேள்வியும் எழுப்பினர். பாவம் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் சூசையின் வீடு என நினைத்துச் சூலையின் வீட்டைச் சல்லடை போட்டுக் கொண்டிருந்தனர்.

இப்படியும் விநோதங்கள் வன்னிப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.(க-433)

# முல்லை வீதிகளுக்கு விடிவுகாலம் புனரமைப்பு வேலை துரிதம்

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு செல்லும் வீதிகளும், முல்லைத்தீவில் உள்ள வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் 41.83 கிலோமீற்றர் தூரம் கொண்ட முல்லைத்தீவு-புளியங்குளம் வீதி,52.15 கிலோமீற்றர் நீளமுள்ள பரந்தன்-கரைச்சி- முல்லைத்தீவு வீதி, 49.25 கிலோமீற்றர் நீளமுள்ள மாங்குளம் - முல்லைத்தீவு வீதி,42 கிலோமீற்றர் நீளமுள்ள முல்லைத் தீவு-கொக்கிளாய்-புல்மோட்டை வீதி ஆகியன அடங்கும் இந்த வேலைகளுக்கான ஒப்பந்தத்தை தனியார் நிறுவனமொன்று பெற்றுள்ளது. இந்த வீதி வேலைகள் யாவும் 30 மாத காலப் பகுதிகளினுள் செய்து முடிக்கப்படவேண்டும்.

மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எந்திரி ரி.கே. இளங்கீரனின் (பிரதம பொறியியலாளர் முல்லைத்தீவு) மேற்பார்வையின் கீழ் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் நிதியின் மூலம் முல்லைத்தீவின் நகரிலும் மற்றும் சில பிரதேசங்களிலும் ஊர்களை இணைக்கும் வீதிகள் காப்பெற் இடும் முறைமூலம் செப்பனிடப்படவுள்ளன. இதில் 2.80 கிலோமீற்றர் நீளமுள்ள முள்ளியவளை வற்றப்பளைவீதி, 0.90 கிலோமீற்றர் நீளமுள்ள கடற்கரை வீதி 1.20 கிலோ மீற்றர் நீளமுள்ள வண்ணாகுளம் வீதி,1.20 கிலோமீற்றர் நீளமுள்ள சிலாவத்தை-தச்சன்வெளி வீதி 2.20 கிலோமீற்றர் நீளமுள்ள சின்னாத்தங்காடு வட்டுவாகல் வீதி, 02.00 கிலோமீற்றர் நீளமுள்ள தண்ணீரூற்று -குமுழமுனை வீதி, 1.10 கிலோமீற்றர் நீளமுள்ள முல்லைப்பட்டினம் 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்குத்தெருக்கள், 02.00 கிலோமீற்றர் நீளமுள்ள குமுழமுனை கடைத்தெரு வீதி என்பனவற்றில் முதல் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.(க-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய அமைப்பு ஊடான அபிவிருத்தியே அதிக நன்மைகளைப் பெற்றுத் தரும்

## முல்லைத்தீவு மக்கள் வலியுறுத்து

அபிவிருத்தித் திட்டங்கள் கிராம அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் போது அதிக நன்மைகளை நாம் அடையலாம். இவ்வாறு முல்லை மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிராம அமைப்புக்கள் சாராத அபிவிருத்தி வேலைகளைப் பிறமாவட்டத்தைச் சேர்ந்தவர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுத்துச் செய்யும்போது அந்த வேலைகள் திருப்திகரமானமுறையில் அமைவதில்லை. வேலைகளை இழுத்தடிப்பது தொடர்கிறது.


அதுமட்டுமல்ல எமது கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைகளில் எமது கிராம மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களும் இல்லாது போய்விடுகிறது. வேலைகளைச் சரியான முறையில் மேற்கொள்ளாது ஏனோ தானோ எனச்செய்து விட்டுப் பணங்களைச் சுருட்டிக் கொண்டு செல்கின்றனர். எமது வீதிகள்,குளங்கள்,வாய்க்கால்கள் என்பன சில நாள்களிலேயே பழுதடையும் நிலை ஏற்படுகிறது எனவே ஒப்பந்தம் செய்யும்போது எந்தவேலையாக இருந்தாலும் அக்கிராமத்தில் உள்ள தகுதியானவர்கள் மூலமே அது நிறைவேற்றப்பட வேண்டும் அத்துடன் வேலைகள் பார்வையிடப்பட்டுத் திருப்தி இல்லாத பட்சத்தில் ஒப்பந்தங்களை இரத்துச் செய்தல் வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தகாரர்கள் விழித்துக்கொள்வார்கள். ஏமாற்றுக்காரர்கள், போலி வேலைகளை மேற்கொள்வோர் ஆகியோருக்கு என்றுமே ஒப்பந்தங்களை வழங்கக்கூடாது.

சில இடங்களில் வீதிகள் அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தங்களை எடுத்துப் போலியான வேலைகளைச் செய்வதால் மீண்டும் பழைய நிலைக்கே வீதிகள் திரும்புகின்றன. இதனால் மக்களின் அன்றாட வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கடப்பதற்குப் பதிலாக ஐந்து, ஆறு கிலோ மீற்றர் தூரம் கடக்க வேண்டிய நிலையில் அபிவிருத்திப் பணிகள் உள்ளன.

இப்படியான வேலைகளை மேற்பார்வை செய்பவர்களோ அல்லது இதுசம்பந்தமான உத்தியோகத்தர்களோ இவற்றைத் தட்டிக் கேட்பதில்லை. இதனால் தான்இப்படி நடக்கின்றது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அபிவிருத்திப்பணிகளை கிராம அமைப்புக்கள் பொறுப்பில் அல்லது அவர்கள் அனுசரணையோடு மேற்கொண்டால் சிறந்த பயனை மக்கள் அடைய முடியுமெனப் பலரும் கூறுகின்றனர்.

(க-500)

## ஊக்கத்துக்கு வெற்றி...



மன்னாருக்குப் பெருமை: தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மன்னார் அல் - அஸ்கா மகாவித்தியாலய மாணவ, மாணவிகள் பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியையுடன் காணப்படுகின்றனர்.

# தொலைபேசியால் வந்த வினை

மன்னார், செப்.23

மன்னார் நீதிவான் நீதிமன்றில் தொலைபேசி மணி ஒலித்ததால் அதை வைத்திருந்தவர் ஆயிரத்து 500 ரூபா தண்டம் செலுத்தினார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் மன்னார் நீதிவான் நீதிமன்றம் ஆரம்பிக்கும் நேரத்தில் நீதிவான் தமது ஆசனத்தில் அமரும் சமயம் பார்த்து தொலை பேசி மணி ஒலித்தது.

இதனைத் தொடர்ந்து தொலைபேசிக்குரியவர் கைது செய்யப்பட்டு நீதிவான்முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

நீதிவான்திருமதி கே.ஜீவராணி குறிப்பிட்ட நபரை எச்சரிக்கை செய்ததுடன் ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்தார்.

(க-601)

# மன்னாரில் நாட்டுக் கூத்து நிகழ்வுகள்

மன்னார், செப்.28

மன்னார் நகரில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புனித லூசியா நாட்டுக் கூத்து நிகழ்வுகள் அரங்கேற்றப்படவுள்ளன.

இந்த நாட்டுக் கூத்து நிகழ்வுகள் நாளையும், நாளை மறுதினமும் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பள்ளி முனை விளையாட்டு மைதானத்தில் மேடையேற்றப்படவுள்ளன. மேலும் பள்ளி முனைப்பங்கு அருட்பணிப் பேரவை இதனை மேடையேற்றவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவி வந்த யுத்த சூழ்நிலை நீங்கியுள்ள நிலையில் மீண்டும் இந்த நிகழ்வு அச்சமின்றி நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரின் பழம் பெரும் கலை வடிவமான நாட்டுக் கூத்து நிகழ்வுகள் மீண்டும் தற்போது மேடையேற்றப்பட்டு வருகின்றமை மன்னார் மக்கள் மத்தியிலும் நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், ஆர்வலர்கள் இடையேயும் பெரும் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை மன்னாரின் பல பாகங்களிலும் இந்த ஆண்டு ஆரம்பம் முதல் பல கிராமங்களில் நாட்டுக் கூத்து நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-601)

# மடுத் திருத்தலத்தில் தியான மண்டபம்

மன்னார், செப்.28

மன்னார் மடுத் திருத்தலத்தில் தியான மண்டபமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களும் பயன்பெறக் கூடிய வகையில் மிகப்பெரிய அளவில் இந்தத் தியான மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலப்பகுதியில் இதனைக் கட்டி முடிப்பதற்கு எடுத்த முயற்சி பல இடையூறுகளைச் சந்தித்தது. இதனால் இதன் நிர்மாணப் பணிகளும் தாமதமடைந்தன. தற்போது இதன் வேலைகள் பூர்த்தியான நிலையில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. இதனை ஆயர் இல்லத் தகவல்களும் உறுதிப்படுத்தியுள்ளன. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்தத் தியான மண்டபத்தை நிர்மாணிப்பதில் அதிக பங்களிப்பு வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

(க-601)

# மகாதேவா சைவச் சிறார் இல்லத்துக்கு மூன்று லட்சம் பெறுமதியான காலணிகள்

யாழ்ப்பாணம்,செப்.28

கனடாவில் இருந்து வருகை தந்த திரு, திருமதி வினோகரன்-சாந்தநாயகி குடும்பத்தினர் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான காலணிகளையும், கால் உறைகளையும் கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லச் சிறுவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

மகாதேவா சைவச்சிறார் இல்லத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரி.இரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் இருவாரத்தில் 18 பிள்ளைகள் இணைந்துள்ளனர்.தற்போது இங்கே 288 பிள்ளைகள்வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்புத் தொடர்பாக நாம் ஊடகங்கள் வாயிலாகப் பல அறிக்கைகளை வெளியிட்டு இருந்தோம்.

அதன் பயனாகக் கனடாவில் இருந்து வருகை தந்த திரு.திருமதி வினோகரன்- சாந்தநாயகி குடும்பத்தினர் 288 பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்புத் தொடர்பாக 3 லட்சம் ரூபா பெறுமதியான காலணிகளையும்-அதற்கான கால் உறைகளையும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் இவர்கள் தரமான காலணிகள் வழங்கியமை எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமாக அமையும் என்றார்.

இதேவேளை- மேற்படி தம்பதியரின் சேவையைப் பாராட்டி மகாதேவ இல்லத் தலைவர் தி.இராசநாயகம் கனடா தம்பதியருக்கு நன்றிக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளதாகவும் பிரதம நிறைவேற்று அதிகாரி மேலும் தெரிவித்தார்.(க-302)

# கிளிநொச்சி தொண்டமான் நகரில் வீடுகளை படம் எடுக்கும் இராணுவம்

மன்னார், செப்.23

கிளிநொச்சி தொண்டமான் நகர் பகுதியில் வீடு வீடாகச் செல்லும் இராணுவத்தினர் மக்கள் வசிக்கும் வீடுகளைப் புகைப்படம் பிடித்ததுடன் வீட்டில் உள்ளவர்களின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் பெற்றுப் பதிந்து சென்றுள்ளதாக இங்கு வசிக்கின்ற மக்கள் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

கடந்த 24ஆம் திகதி காலையில் மேற்படி பகுதிக்கு வந்த இராணுவத்தினர் மேற்குறிப்பிட்ட விவரங்களைக் கேட்டுப்பதிந்ததுடன் வீடுகளையும் புகைப்படம் எடுத்துக்கொண்டு சென்றுள்ளார்கள்.

இது எதற்கென மக்கள் அந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது வீடு இல்லாதவர்களுக்கு வீடுவழங்குவதற்காவே இதனைச் செய்வதாக இராணுவத்தினரால் கூறப்பட்டது.

பலரும் வந்து பல்வேறு விதங்களில் பதிவுகளை மேற்கொள்கின்றார்களே தவிரத் தமக்கான வீடுகளை வழங்கித் தாம் நிம்மதியாக வாழ்வதற்கு இன்னும் வழிகிடைக்கவில்லை எனக் கூறி வீடு இல்லாத மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

மேலும் இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டு மனம் குழம்பிய நிலையில் வசிக்கும் இந்த மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு தொடர்பாக உரியவர்கள் தகுந்த விளக்கமளிக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-[illegible])

# மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய உலக விலங்கு விசர்நோய் தினப்பேரணி

மன்னார், செப்.28

உலக விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு மன்னாரில் வீதிப்பேரணியொன்று இடம் பெற்றுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் விலங்கு விசர் நோய் விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10.20 மணியளவில் இந்தப் பேரணி ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார்ப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என்.பரீட், பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அரவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டு [illegible] அறிவுறுத்தல்களை வழங்கினர். பின்னர்



பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாகப் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணி மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை வீதியூடாகச் சென்று பொது விளையாட்டு மைதான வீதி, பஸார் பகுதி ஆகியவற்றுக்குச் சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே முடிவடைந்தது.

இந்தப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இவர்கள் தமது கைகளில் மக்களை விழிப்பூட்டும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் ஏந்திச் சென்றனர்.

விலங்கு விசர்நோய் தொடர்பான விழிப்புணர்வை இந்தப் பேரணி மக்களிடையே ஏற்படுத்தியதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் குத்தும் குச்சியால் உருவான கலைப்படைப்பு

சிறு துரும்பும் பல்குத்த உதவும். பல்குத்தும் குச்சியும் சாதனை படைக்க உதவும் என்பதற் கிணங்க 100,000 குச்சிகளைக் கொண்டு உருவான இந்தப் படைப்பு மிக அற்புதமானது. இதை அமைக்க 34 வருடங்கள் செலவானதாகக் கூறப்படுகிறது. ஏறத்தாழ 3000 மணித்தியாலங் களின் உழைப்பு. அமெரிக்காவின் சில இடங்களை நினைவு கூரும் முகமாகவும் அந்த சிற்பத்தில் சில அம்சங்கள் இருப்பது முக்கியமானது.
51 வயதான Scott Weaver, என்பவர் தனது திருமண நாளன்று இதைச் செய்ய ஆரம்பித்தார். 34 வருடங்களின் பின்னர் இது முழுமை பெற்றிருக்கிறது.




# இறைக்கைக்குள் குஞ்சைப் பாதுகாக்கும் பறவை



கண்ணை இமை காப்பது போலப் பிள்ளைகளைக் காப்பது தான் தாயின் வேலை.
அதை நிரூபிப்பதுபோன்று இங்கே உள்ள தாய்ப் பறவை தன் பிள்ளைகளை இறகுகளுக்குள் அன்பாகப் பொத்திப் பாதுகாக்கின்றது.
கங்காரு தன் குட்டிகளை வயிற்றுப் பையில் வைத்துப் பாதுகாப்பது போல தனது இரண்டு குஞ்சுப் பறவைகளையும் இரண்டு இறைக்கைகளுக்கும் வைத்துப் பாதுகாக்கின்றது.

# திரையில்லாக் கடிகாரம்



கடிகாரம் என்பது அத்தியாவசியமானதொன்று. அவசரமான உலகின் வேகத்தை அளவிடுகின்ற அற்புதக் கருவியாகக் கடிகாரம் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. இப்படியிருக்கையில் கடிகாரங்களின் வடிவங்களும் புதிது புதிதாக வெளிவருகின்றன.
ஜப்பானின் டோக்கியோ பிளாஸ் என்னும் கடிகார வடிவமைப்பு நிறுவனம் அண்மையில் புதியவகைக் கடிகாரம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பார்ப்பதற்குக் கைச்சங்கிலி போலிருக்கும். கையை அழகுபடுத்துகின்ற கைச்சங்கிலி என்றே பார்ப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால் அது கடிகாரமாகவும் செயற்படும்.
130 அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் இந்தக் கடிகாரங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

# 25 கோடி ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது சுனாமி



இந்தியப் பெருங்கடல் தோன்றுவதற்கு முன்பு பல கடல்கள் ஒன்றாக இருந்த நேரத்தில் காஷ்மீர் பகுதியில் சுனாமி ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
நில அமைப்புகள், புவியியல் மாற்றங்கள், சுனாமி ஆகியவை தொடர்பாக அமெரிக்காவின் மசாசூரி சட்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் மைக்கேல் ப்ரூக்பீல்டு ஆராய்ச்சி செய்து வருகிறார். ஸ்ரீநகரில் உள்ள காஷ்மீர் பல்கலைக்கழகத்தின் புவியியல், புவி இயற்பியல், புவி தகவலியல் துறைகள் சார்பில் அவரது சிறப்புரை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
அதில் அவர் தெரிவித்ததாவது:
பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு கண்டங்கள் தற்போது இருப்பது போல பல பிரிவுகளாக இல்லை. 20 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய டிரயாசிக் காலத்தின்போது லாரேசியா, கோண்ட்வானா என இரு பிரிவுகள் மட்டுமே இருந்தன. காஷ்மீரின் குரியுல் பள்ளத்தாக்குப் பகுதியில் பல்வேறு விதமான படிமங்கள் கிடைத்துள்ளன. உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்களும் இங்கு ஆய்வு நடத்தி வருகின்றனர். 25 கோடி ஆண்டுகளுக்கு முன்பு சுனாமி வந்ததற்கான படிம ஆதாரங்களும் கிடைத்திருக்கின்றன- என்றார்.

# சுறா மீனின் கல்லீரலில் இருந்து மருந்து

மனித உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் மருந்துகளைக் கண்டுபிடித்து வருகின்றனர்.இந்தநிலையில் தற் போது சுறா மீனின் கல்லீரலில் இருந்து பலவித மருந்துகள் தயாரிக்க முடியும் என்று கண்டறிந்துள் ளனர். ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மைக்கேல் ஷஸ்லாப் என்பவர் தலைமையிலான குழுவினர் ஓர் ஆய்வு மேற்கொண்டனர். பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் நுண்ணுயிர் மற்றும் ஸ்குயாலமின் என்ற இரசாயனப் பொருள்கள் மனித உடலில் ஏற்படும் நோயைத் தடுக்க உதவுகின்றன. இவற்றின் உதவியுடன் டெங்குக் காய்ச்சல், மஞ்சள் காமாளை நோய்கள் போன்ற நோய்களுக்குப் புதிய வகையான மருந்துகளைத் தயாரிக்க முடியும்.இந்த நிலையில் சுறா மீனின் கல்லீரலில் நோய் எதிர்ப்பு சக்தியுடைய ஸ்குயாலமின் இரசாயனப் பொருள் இருப்பதைப் பரிசோதனையின் மூலம் அறிந்துள் ளனர். இவை தவிர சுறாமீனின் வகையைச் சேர்ந்த மற்ற கடல்வாழ் உயிரினத்தில் இருந்தும் மருந்துகள் தயாரிக்கலாம் என்றும் கூறியுள்ளனர்.

# காசநோய்க்கு வண்டின் இரத்தத்தில் இருந்து மருந்து

லேடிபேர்ட் என்ற வண்டுகளின் இரத்தத்தில் இருந்து காசநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
மலேரியா, எம்.ஆர்.எஸ்.ஏ எனப்படும் நோய் எதிர்ப்பு சக்தியை முறியடிக்கும் பக்டீரியா தொற்று ஆகியவற்றையும் இந்த மருந்து குணப்படுத்தும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
ஜேர்மனி உர்ஸ்பர்க் பல்கலைக்கழக மருத்துவர்கள் மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டதாவது:
நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் நோய் தீர்வு குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஹார்லேக்வின் லேடி பேர்ட் வண்டின் பிசுபிசுப்பான இரத்தம் நோய் கிருமிகளைத் தாக்கி அழிப்பது தெரியவந்துள்ளது.
சோதனைக்கூட ஆய்வில் எதிர்பார்த்ததைவிட இந்த மருந்துக்கு [illegible] [illegible] வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை ஆள்வதற்கு அரசு விரும்பினால் முஸ்லிம் ஒருவரை முதல்வராக்க வேண்டும்

## இல்லையேல் தனித்தே ஆட்சியைப் பிடிப்போம் என்கிறது மு.கா

அம்பாறை, செப்.28

''அடுத்து வருகின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்றும். கிழக்கை ஆளவேண்டும் என்று அரசு விரும்பினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்முனைக்கு வந்து முஸ்லிம் முதலமைச்சரை உத்தரவாதப்படுத்த வேண்டும். இல்லையேல் அந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரசை எதிர்த்து நிற்கும்''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் உள்நாட்டு வர்த்தக, கூட்டுறவு பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாய்ந்தமருது கடற்கரைப் பூங்காவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் சேகுதாவூத் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இம்முறை தேர்தலில் 12 ஆசனங்களுடன் கல்முனை மாநகரசபையை எமது முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும் என்பதில் சந்தேகம் கிடையாது. அதேவேளை, மக்களின் ஆணையை மீறி மேயர் நியமனம் இடம்பெற மாட்டாது. விருப்பு வாக்கின் அடிப்படையிலேயே மேயர் நியமிக்கப்படுவார் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த தலைவர் அஷ்ரப் முஸ்லிம் மாகாண சபையைக் கனவு கண்டார். ஆனால் இன்று கிழக்கு பிரிந்திருக்கின்ற நிலையில் இந்த மாகாணத்தின் முதலமைச்சராக முஸ்லிம் ஒருவரை அமர்த்துவதற்கான வியூகம் பற்றி சிந்திக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் மாத்திரமே முஸ்லிம் முதலமைச்சரைப் பெற முடியும்.

கிழக்கு மாகாணத்தை அரசு ஆளவேண்டும் என விரும்பினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்முனைக்கு வந்து முஸ்லிம் முதலமைச்சரை உறுதிப்படுத்தினால் மாத்திரமே முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன்இணைந்து போட்டியிடும். இல்லையேல், நாம் அரசை எதிர்த்து நிற்போம். அந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு நிச்சயமாக கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றி முதலாவது முஸ்லிம் முதலமைச்சரைப் பதவியில் அமர்த்தும்.

இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமிருக்காது. அதற்கான வியூகத்தை இப்போதிருந்தே மேற்கொண்டு வருகின்றோம். கல்முனை மாநகர சபைத் தேர்தல் முடிவுகளே அதற்கு அடிநாதமாக அமையப்போகின்றன - என்றார்.

## 5 மணித்தியாலங்களின் பின் மீண்டும் உயிருடன் மீட்கப்பட்ட நபர்



கண்டி,செப்.28

கண்டியைச் சேர்ந்த நபரொருவர் 3 அடி குழியொன்றினுள் புதைக்கப்பட்ட நிலையில் 5 மணித்தியாலங்களின் பின் மீண்டும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி, ஹரங்கஹவ சியபத்கமவைச் சேர்ந்த கே.எம்.ஹீன் பண்டா என்ற 59 வயதுடைய நபரே இவ்வாறு 5 மணித்தியாலங்களின் பின் மீட்கப்பட்டுள்ளார்.

சுமார் 40 வருடங்களாக சாகச நிகழ்ச்சிகளை நடத்தி வரும் இந்த நபர் சாதனையொன்றிற்காக இந்த விபரீதப் பரீட்சையில் இறங்கியுள்ளார். விசேட நடுவர்கள் குழுவின் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 அடி நீளமும் 3 அடி அகலமும் 3 அடி ஆழமும் கொண்ட குழியொன்றினுள் இவர் இந்த சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

குழிக்குள் உயிருடன் புதைக்கப்பட்ட பின் அதன் மேல் பலகையை அடுக்கி பலகைக்கு மேலாக மண் தட்டு ஒன்றைப் போட்டு அதன் மேல் தீயிட்டனர்.

ஐந்து மணித்தியாலங்கள் சென்ற நிலையில் இரவு ஏழு மணிக்கு இவரை புதைத்த குழியை மீண்டும் தோண்டி அவரை மீட்டெடுத்தத போது அவர் சுகதேகியாகவே எழும்பி வந்தார்.

இதுவரை இருந்த இத்தகைய சாதனை மூன்று மணித்தியாளம் 39 நிமிடங்கள் 12 வினாடிகள் ஆகும். ஹீன்பண்டா ஐந்து மணித்தியாலங்கள் புதைந்திருந்து அந்தச் சாதனையை முறியடித்தார்.

## ஹெரோயின் வைத்திருந்த நபர் பொலிஸாரால் கைது

தியத்தலாவை செப்.28

நான்காயிரம் மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை ஊவாமாகாண போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பிடவெலகமயில் நீண்ட காலமாக ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்துவருவதாகக் கூறப்படும் மேற்படி சந்தேகநபர் தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவலொன்றின் அடிப்படையில் அங்கு சென்ற ஊவா மாகாண போதைப் பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவினர் சந்தேக நபரைப் பிடித்து சோதனையிட்டபோது அவரது காற்சட்டைப் பையிலிருந்த 4,000 மி.கி. ஹெரோயினை மீட்டுள்ளனர்.

11 பைக்கற்களில் பொதி செய்யப்பட்டிருந்த ஹெரோயினுடன் சந்தேக நபர் பதுளை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார் என்று போதைப் பொருள் தடுப்புப்பிரிவின் ஊவா மாகாண பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சீ.அபேநாயக தெரிவித்தார்.

குறித்த நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கல்முனை மாநகர சபைத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனை 2 ஆம் பிரிவில் நடைபெற்ற பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் வரவேற்று அழைத்து வரப்படுகின்றனர். (வ-30)

## திருமலையில் முப்படைகளின் பிரமாண்டமான ஆயுதக் கண்காட்சி

இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த சுமார் 2,500 படையினர் பங்குபற்றும் விசேட பயிற்சி ஒத்திகைக் கண்காட்சி திருகோணமலையில் நடைபெறுகிறது.

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சியில் இலங்கை ராணுவத்தின் கொமாண்டோ மற்றும் விசேட படைப் பிரிவினர் 1,600 பேரும் பங்குபற்றுகின்றனர். இரண்டாவது தடவையாக நடைபெறும் கடல், வான், தரை பயிற்சிகள் அடங்கிய இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு ' நீர்க்காகத் தாக்குதல்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதிவரை இந்தப் பயிற்சிகள் நடைபெறும்.

பாதுகாப்புப் படைகளின் தீர்மானம் மேற்கொள்ளல், மற்றும் முக்கிய கட்டளை ஆற்றல்களின் வினைத்திறன் ஆகியவற்றை விருத்தி செய்வதை இந்தப் பயிற்சிகள் இலக் காகக் கொண்டுள்ளன.

இந்தப்பயிற் சியில் முக்கிய பங்கு வகிக்கும் இருதரப்புகளாக ராணுவமும் கடற்படையும் விளங்குகின்றன. துருப்புகள் கடலிலிருந்து தரைக்கு இறக்கப்படும். அதன்பின் அவர்கள் நிறைவேற்றுவதற்காக விசேட இலக்கொன்று நிர்ணயிக்கப்படும் என்று இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆரச்சி கூறினார். இந்தப் பயிற்சித் திட்டம் ராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத்ஜய சூரியவின் சிந்தனையில் உருவாக்கப்பட்டதாகும்.

## கல்முனை மாநகர சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் ஜனநாயகக் கட்சி முழுமையான ஆதரவு

### ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றம்

அம்பாறை, செப்.28

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முழுமையாக ஆதரிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அகில இலங்கை மக்கள் ஜன நாயகக் கட்சியின் அரசியல் அதி உயர் பீடக் கூட்டம்கட்சித்தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில், கல்முனை சனச மண்டபத்தில் நடைபெற்ற போது இதற் கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஏகமனதாக ஆதரிப்பதற்கான தீர்மானத்தைக் கூட்டத்தில் தலைவர் லோகநாதன் முன்மொழிந்து உரையாற்றுகையில்:

தமிழ்த்தேசியத்தையும்,தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றே பாடுபட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு - தமிழரசுக்கட்சி சார்பில் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் எமது மண்ணின் மைந்தர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

எனவே இனவாத சக்திகளுக்கோ, அரசின் கூஜா தூக்கிகளுக்கோ எந்த வகையிலேனும் சோரம் போகாமல், கல்முனை மாநகர வாழ் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்திற்கு ஏகமனதாக வாக்களிப்பதுடன், சிறந்தவர்களையும் தெரிவு செய்ய வேண்டும்.

நடைபெற்று முடிந்த தமிழ் மக்கள் வாழும் சகல பிரதேசங்களின் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் எமது மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பு இன்று சர்வதேசத்தை மிக இறுக்கமாக எம் பக்கம் ஈர்க்கச் செய்துள்ளது. எனவே கல் முனை மாநகர சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் அளிக்கும் ஏகோ பித்த ஜனநாயகத் தீர்ப்பு இந்த நிலைப் பாட்டுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைய வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மக்கள் ஜனநாயகக் கட்சியின் முழு ஆதரவையும் இந்தத் தேர்தலில் தமிழரசுக்கட் சிக்கு வழங்குவோம். என்றார் அதனையடுத்துப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (வ)

## விசேட தேவையுடையோருக்கு உதவித் தொகை

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விசேட தேவையுடையவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் அரசகாணியில் குடியிருந்தவர்களுக்கு ரண்பீம திட்டத்தில் காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆகியோர் கலந்து கொண்டு வலது குறைந்தோருக்கான காசோலைகளையும் காணி உறுதிப் பத்திரங்களையும் வழங்கி வைத்தனர்.

## மருதமுனையில் ஆதரவாளர்களுக்குள் மோதல்

கல்முனை, செப்.28

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவாளர் குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் மாலை மருதமுனை பிரதேசத்தில் மோதல் இடம் பெற்றுள்ளது. இதனால் குறித்த பிரதேசத்தில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, கல்முனை பொலிஸார் அங்கு சென்று நிலைமையைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் மருதமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் சகோதரரான ஏ.எம்.நஸீர் படுகாயமடைந்த நிலை யில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் மருதமுனையைச் சேர்ந்த ஏ.ஆர். அமீர் தலைமையில் சென்ற குழுவினரே இவரைத் தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி, தெம்பு உற்சாகம் பெறும் நாள். பல வேலைகளைச் செய்ய திட்டமிட்டு, அதில் ஒரு பகுதி முடிந்து மீதி முடியாமல் போகலாம். சக ஊழியர்கள், நண்பர்களுக்கு கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். சிலர் உங்களை நம்பிப் பொறுப்பான வேலைகளை ஒப்படைக்கலாம். சில விடயங்களில் புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள்.



**இடபம்:**
சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டி கொள்வீர்கள். மாற்று மதத்தினர் விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளுக்கு வேண்டிய பொருள்கள் வாங்க, கணிசமான பணத்தைச் செலவிடலாம். உறவினர்கள் வழியில் முக்கிய செய்தி கேட்கலாம். பணிபுரிவோர், அதிகாரிகள் இட்ட கட்டளைகளைச் செய்ய மறந்து, விமர்சனங்களைச் சந்திக்கலாம்.



**மிதுனம்:**
சக ஊழியர்கள், நண்பர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டு, அவதிப்படுவீர்கள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள் தலையீட்டால் உங்களின் வேலை ஒன்று தடைப்படலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை, நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம்.



**கடகம்:**
நீண்ட நாளைய ஆசை ஒன்று நிறைவேறும். தப்பு என தெரிந்தும், சில விடயங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடியலாம். கடமையில், கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். சோர்வு, சோம்பல் இல்லாமல் புத்துணர்வுடன் செயற்படுவீர்கள்.



**சிங்கம்:**
மற்றவர்களை வெறுப்பேற்றும் வகையில், குதர்க்கமாகப் பேசுவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். உறவுப் பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகள், செலவுகளைச் சந்திக்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, சிலர் உங்களிடம் மரியாதை குறைவாக நடக்கலாம். கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.



**கன்னி:**
சில விடயங்களில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படுவீர்கள். நடக்குமோ, நடக்காதோ என, சந்தேகத்தில் இருந்த ஒரு காரியம், நல்ல விதமாக நடந்து விடலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.



**துலாம்:**
வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை, இன்றே நேரில் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு பிடித்த விடயம் ஒன்று, உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். கஷ்டப்பட்டு சில வேலைகளைச் செய்தும், அதில் பெரிய அளவில் பலன் கிடைக்காமல் போகலாம். மருத்துவ செலவு நேரும்.



**விருச்சிகம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பெரிய மனிதர்கள் வழியில், எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்கள் சிலர் உங்களுக்காக பணத்தைச் செலவு செய்யலாம். பிரியமான உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். கடன் மிகுதி ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள்.



**தனுசு:**
குறைந்தளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரலாம். விருந்தினர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்லலாம்.



**மகரம்:**
உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். வெளியூரில் இருக்கும் நண்பர் ஒருவர், உங்களின் வீடு தேடி வரலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று, மீண்டும் பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள்.



**கும்பம்:**
திட்டமிட்ட வேலைகளை எதிர்பார்த்த வேகத்திற்கு செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீங்கள் செய்த காரியம் ஒன்றை, மற்றவர்கள் தாங்கள் செய்த தாகக் காட்டிக் கொள்ளலாம். பணிபுரிவோர், நிர்வாகத்தினரின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கோபத் துடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். மறதியால் அவதியுண்டு.



**மீனம்:**
ஆசைப்பட்ட சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். உங்களுக்காக மற்றவர்கள் செலவு செய்யலாம். எங்காவது வெளியில் செல்லும் போது, உடனுக்குடன் வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள்.

# ஜெனீ
# குறிப்

■சுனந்த தேசப்பிரிய

பரபரப்புச் செய்திகளை வெளியிடும் செய்தியாளர்கள் இலங்கைக்கு அடுத்த சில வாரங்கள் மிகத் தீர்மானகரமான வாரங்களாக இருக்கும் எனக் கூறியிருந்தனர்.

மனித உரிமைப் பேரவையின் 18 ஆவது கூட்டத்தொடர் கடந்த 12ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகியதும் அவர்கள் இப்படித் தெரிவித்திருந்தனர். இம்முறை கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை சம்பந்தமாக உண்மையில் எவ்வித விசேட குறிப்பு எதுவும் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

**கால அவகாசம் வழங்க நினைக்கும் உலகு**

கூட்டத் தொடரில் நடந்த ஒரே முக்கிய விடயம், இலங்கைப் போர் குறித்து ஆராய ஐ.நா. செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையும் அதற்கு எதிராக அரசு தயாரித்த அறிக்கையும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் அதன் ஆணையர் நவிப்பிள்ளைக்கும் பான் கீ-மூனால் அனுப்பி வைக்கப்பட்டமை ஆகும்.

எனினும், அந்த அறிக்கை கூட்டத் தொடரில் விவாதிக்கப்படுவதற்கான எந்த அறிகுறியும் இருக்கவில்லை. இலங்கையின் இறுதிக் கட்டப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதத் தன்மைக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் அக்கறை செலுத்தும் பல நாடுகள்கூட இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரையில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவது அவசியம் என நினைக்கின்றன.

ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வெளியிடப்படும் எனவும் இதன் மூலம் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புச் சொல்வதற்கு இலங்கை தனது சொந்த யோசனைகளை முன்வைக்கலாம் என அந்த நாடுகள் எதிர்பார்க்கின்றன.

இந்த நிலைமையின் கீழ், இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை சம்பந்தமாக தீர்மானகரமான கலந்துரையாடல்களுக்கோ அதற்கான பின்னணிக்கோ வாய்ப்பிருக்கவில்லை.

**முறியடிப்புக்கான தயார்ப்படுத்தலில் அரசு**

உண்மையான நிலை இப்படி இருக்கையில், கடந்த சில வாரங்களாக ஜெனீவா குறித்து அதீத பிரசாரங்கள் அரச மற்றும் தனியார் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. இதற்கு ஒரு உள்நோக்கம் உண்டு. இலங்கைக்கு எதிராக எடுக்கப்படக் கூடிய சகல முயற்சிகளையும் தோற்கடிப்பதற்கான பின்னணியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உருவாக்குவதே அது என்பதை அனுமானிப்பது ஒன்றும் சிரமமானது அல்ல.

ஜெனீவா மனித உரிமைகள் சபையின் 18ஆவது கூட்டத்தொடரில் தமது நிலைப்பாடுகளை உறுதிப்படுத்த அமைச்சர் சமரசிங்க தலைமையில் சென்றிருந்த உயர் மட்டப் பிரதிநிதிகளால் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான போர்க் குற்றங்கள் குறித்தும் மனிதத் தன்மைக்கு எதிரான குற்றங்கள் குறித்தும் கலந்துரையாடுவதற்கு இலங்கை கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. உண்மையில் இந்த விடயத்தை பகிரங்க கூட்டத்தில் கலந்துரையாடும் எண்ணம் எதுவும் மனித உரிமைகள் சபையிடம் இருக்கவில்லை. பதிலாக கூட்டத்தொடரின் இடைநடுவே இந்த விடயத்தைக் கலந்துரையாடவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த விடயங்களுக்குள் விளங்கிக் கொள்ள முடியாத மறு எதிர்ப்புகள் உள்ளன. கடந்த 12 ஆம் திகதி இலங்கை அரசின் ஜெனீவா தூதரகத்தால், மனித உரிமைகள் சபையின் உணவு இடைவேளை யில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது எழுப்பப்பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் 27 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி இந்த விடயத்தை எழுப்பினார். இலங்கை தொடர்பான இந்த கலந்துரையாடல் மனித உரிமைகள் சபையின் பிரதான கூட்டத்தில் நடைபெறுவதைக் காணவேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என அவர் கூறினார்.

**கேள்விகளும் மறுப்புகளும்**

அத்துடன் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது பகிரங்கமாக வெளியிடப்படும் என்பதை அறிந்து கொள்ளத்தான் விரும்புகிறார் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் அது குறித்து விசேட அக்கறை கொண்டுள்ளது எனவும் அவர் கூறினார். அந்த அறிக்கை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



இதற்கு அமைச்சர் மஹிந்த சமரசிங்கவால் வழிநடத்தப்பட்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் உள்ள முன்னாள் சட்ட மா அதிபர் மெஹான் பீரிஸ் பதிலளித்தார். எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை இலங்கை பிரதிநிதிகள் வழங்காமல் தம்மைத் தற்காத்துக் கொண்டனர். அறிய கிடைத்துள்ள வகையில் அறிக்கையை வெளியிடும் தீர்மானத்தை எடுக்கும் முழுப் பொறுப்பும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளிலேயே இருகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமை குறித்து தெளிவுபடுத்துவதே அரச தரப்பின் பிரதான தொனிப்பொருளாக மாறியிருந்தது. முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸின் கருத்துப் படி, தற்போது அவசரகாலச் சட்டம் ''இறந்துபோன ஒன்று''. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் புதிதாக சில விதிகள் சேர்க்கப்பட்டபோதிலும் அதன் மூலம் அவசரகாலச் சட்டவிதிகள் முழுமையாக சட்டமயமாகாது என்பதே அவரது நிலைப்பாடாகும். அவரது கருத்தை ஏற்றுக்கொள்ளாத உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானு வேல் அடிகளார், பயங்கரவாதத் தடைச் சட்டம் இருக்கும் வரை, அவசர காலச் சட்டத்தை நீக்கியதால் பயனில்லை எனத் தெரிவித்தார். 'சனல்-4' தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற விவரணப் படத்துக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசு தயாரித்த 'புனைந்து பரப்பப்படும் பொய்கள்' என்ற விவரணப்படத்தின் 17 நிமிடங்கள் கொண்ட ஒரு பகுதி இந்த கூட்டத்தில் காண்பிக்கப்பட்டது.

**எதிர் எதிர் திரைப்படங்கள்**

இந்த படத்தின் இறுவட்டு மற்றும் 5.2 கிலோ கிராம் எடை கொண்ட ஆவணங்கள், அங்கிருந்தவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இலங்கையின் இந்த விவரணப்படம், 'சிறிலங்காவின் கொலைக்களம்' விவரணப் படத்துக்கு பல சாவல்களை ஏற்படுத்தும் என்பது உண்மையே. எனினும் அந்தப் படம் முழுமையாக அங்கு காண்பிக்கப்படவில்லை. நேரம் தொடர்பான பிரச்சினை காரணமாகவே திரைப்படத்தை முழுமையாக காண்பிக்க முடியாது போனதா கக் கூறிய அமைச்சர் சமரசிங்க கருத்துக்களைத் தெரிவிப் பதற்கான பகிரங்க விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

இரு தரப்பு ஆவணப்படங்கள் தொடர்பாகவும் கருத்து வெளியிட்ட மனித உரிமைகளுக்கான தமிழ் ஒன்றியத்தின் தலைவர் கிருபாகரன், இந்த இரண்டு திரைப்படங்களும், ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான நிலைப்பாடுகளை முன்வைப்பதால், இது குறித்து சுதந்திரமான அனைத்துலக விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஏன் எதிர்ப்பு தெரிவிக்கின்றது எனக் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்வியை இம்மானுவேல் அடிகளாரும் எழுப்பினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மொஹான் பீரிஸ், ''500 வருட ஏகாதிபத்திய அடிமை ஆட்சி தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா
# புகள்



எதற்குத் தேவைப்படுகிறது?'' எனக் கேட்டார். இதன் மூலம் அனைத்துலக விசாரணை என்பது ஏகாதிபத்திய அடிமை ஆட்சி என்று அவர் கருதுகிறார் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். எனினும், இவ்வாறான விசாரணை பாலஸ்தீன பிரச்சினை, மியன்மாரின் இராணுவ ஆட்சி போன்ற பல சந்தர்ப்பங்களில் ஐ.நாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அப்போதெல்லாம் விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்புகளை வழங்கியிருப்பதாகவும் தேனீர் கலந்துரையாடலின் போது இடம்பெற்ற உரையாடல்களில் இருந்து கேட்க முடிந்தது.

### இலங்கை அரசின் முன்னேற்பாடு

இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வெளிநாடுகளில் உள்ள குறிப்பிடத்தக்க நபர்கள் இலங்கை அரசினால் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சியின்போது அரசின் டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவரும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிப்பவருமான மகிந்தபாலவும் இவர்களில் அடங்குகிறார்.

இவர் தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்திற்குக் கட்டுரைகளை எழுதி வருகிறார். இலங்கை அரசின் திரைப்படத்திற்குச் சார்பாகக் கருத்து வெளியிட்ட அவர், 1988ஆம் ஆண்டு இலங்கை வந்த இந்திய அமைதிப் படையினர் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். இந்திய அமைதிப் படையினரின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு ஏன் அதிகாரம் வழங்கப்படவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உடனடியாகக் குறுகிட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்ததாகவும் இந்திய அமைதிப் படையினர் தாம் செய்ய வேண்டியிருந்த கடமைகளையே செய்தனர் எனவும் குறிப்பிட்டார்.

அதற்கு மேல் ஒன்றும் இல்லை எனத் தெரிவித்த அமைச்சர், இந்திய அரசு தொடர்பாக இலங்கை அரசுக்கு விரோதங்கள் இல்லை எனவும் சுட்டிக்காட்டினார். வேறு கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற இந்தியாவைப் போன்று உதவிய நாடு வேறு இல்லை எனவும் இதற்காக இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து கொள்வதாகவும் மீண்டும் இந்தியா அரசைப் பாதுகாத்துக் கருத்து வெளியிட்டார்.

இலங்கை அரசின் இப்படியான கூட்டங்களில் கலந்துக்கொண்ட கியூபா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் பிரதிநிதிகள் இரண்டு மூன்று வார்த்தைகளில், ''இலங்கை தமது கடமையை நிறைவேற்ற இலங்கையுடன் இருப்பார்கள்'' என்று கூறினர். இந்தியப் பிரதிநிதி எதனையும் கூறாது அமர்ந்திருந்தார்.

### இந்தியா: அரசின் எதிரும் புதிருமான போக்கு

ஐ.நா. மனித உரிமை சபையில், இலங்கை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், இந்தியாவின் நிலைப்பாடே தீர்மானகரமானது என்பது இலங்கைக்கு நன்கு தெரியும். அதனாலேயே அமைச்சர் சமரசிங்க, இந்தியாவைப் பாதுகாக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கையுடனான பிரச்சினைகளை இரு தரப்பு உயர் அதிகாரிகளின் அல்லது தலைவர்களின் சந்திப்புக்களின்போது பேசுவதே இதுவரை இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது. மனித உரிமை ஆணைக் குழுவில் இலங்கை தொடர்பாக ஏற்படும் எந்தத் தீர்மானகரமான கலந்துரையாடல்களின்போதும், இந்திய நிலைப்பாட்டின் முக்கியத்துவத்தை அனைத்துத் தரப்பினரும் தற்போது உணர்ந்து கொண்டுள்ளனர்.

அரசியல் மேடைகளில் அமைச்சர்கள் விமல் வீரவன்ச, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரைக் கொண்டு இந்தியாவைக் கடுமையாக விமர்சிக்கும் இலங்கை அரசு, ராஜதந்திர ரீதியில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவது அதன் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. அரசின் பரப்புரையாளர்களான மகிந்தபாலவின் விமர்சனத்தைக்கூட பலர் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதினர்.

மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் குறித்து ஏன் கலந்துரையாடுவதில்லை எனவும் 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தாதது போல், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் பகிரங்கப்படுத்தாமல் போகுமா எனவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஜெனீவா தலைவர் பீட்டார் ஸ்பிலின்டர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த மொஹான் பீரிஸ் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்க மன்னிப்புச் சபைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது எனக் கேட்டார். இலங்கைக்கு 2 ஆயிரத்து 500 வருடகால வரலாறு இருப்பதால், வெளியாரின் ஆலோச னைகள் அத்தியவசியமற்றது எனவும் மொஹான் பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தலையீடுகளை மேற்கொண்ட, மேடையில் அமர்ந்திருந்த மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட், ''இலங்கையின் இனங்களுக்கு இடையில் மாத்திரமல்ல, மன்னிப்புச் சபைக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியிருப்பது அவசியம் எனத் தெரிகிறது'' என்று கூறினார்.

வாதங்களின்போது சிறந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படவேண்டும் எனச்சுட்டிக் காட்டிய அவர், மனித உரிமைகள் தொடர்பில் பெரும் பங்களிப்பை ஆற்றி வரும் மன்னிப்புச் சபை, மனசாட்சியின் சிறைக் கைதி எனப் பெயரிட்டு, இயங்கி வருவதுடன் தனது விடுதலைக்கும் பங்களிப்பு வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

### அதிகாரப் பகிர்வுக்கு எதிர்ப்பு

இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்குவதற்காகக் கனடாவில் இருந்து சென்றிருந்த இர்னோ, ''நாடு இரண்டு பகுதிகளாக இருப்பது அத்தியவசியமற்றது'' எனத் தெரிவித்தார். அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கான எதிர்ப்பு அவரின் கூற்றில் காணப்பட்டது.

இறுதியில் சுருக்கமான உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர், ஹெலின் செம்பர்லின், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, போர் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிய முறையில் செவிசாய்க்கும் எனத் தாம் எதிர்பார்க்கிறார் என்று கூறினார். அவ்வாறில்லாது போனால், இலங்கைக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவித்தார்.

இறுதியில் வடை மற்றும் பற்றிஸ் விருந்தை முடித்துக் கொண்டு திரும்பிச் சென்ற மனித உரிமைச் செயற்பட்டாளர் ஒருவர் தனது தோளில் சுமந்து சென்ற 5.2 கிலோ கிராம் ஆவ ணப் புத்தகங்களைத் தாங்கி இருந்த தரம் குறைந்த துணியால் ஆன பொதியின் பட்டி[illegible] அந்தப் பொதியில் ''ஆசியாவின் ஆச்சரியம் இலங்கை'' என அச்சிடப்பட்டிருந்தது.

# பங்கிடும் பண்பு



வயதானவர் ஒருவர் இருந்தார். அவர் வயலில் உழுது கொண்டிருந்தார். கிழிந்துபோன ஒரு சிறிய துணியை இடுப்பிலே கட்டியிருந்தார். தலையிலே ஒரு கந்தலைச் சுற்றியிருந்தார். உடம்பு முழுவதும் சேறு. ஏழை போல் இருந்தார். ஏர் செலுத்திக் கொண் டிருப்பவர் வேறு எப்படி இருப்பார். இருந்தாலும் அவர் மிகுந்த சந்தோஷமாகப் பாட்டுப் பாடிக்கொண்டே உழுது கொண்டிருந்தார்.

உடம்பிலே தான் அவர் ஏழையே தவிர மனதில் அவர் ஏழையாகத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் அந்த நாட்டுராஜா அந்தப் பக்கமாக குதிரை மேல் வந்தார். வேட்டைக்குப்போய்விட்டு பரிவாரங்களோடு திரும்பி வந்துகொண்டிருந்தார். மிகுந்த செல்வச் செழிப்பில் இருக்கிற ராஜா அவர் இந்த வயதான விவசாயியைப் பார்த்தார்.

இந்த விவசாயி மிகுந்த ஏழை போன்று இருக்கிறார். உடுத்துக் கொள்ள நல்ல துணியில்லை, உடம்போ இளைத்துப் போயிருக்கிறது, வயிறு ஒட்டியிருக்கிறது, கண்குழி விழுந்து போயிருக் கிறது. ஆனாலும் முகத்தைப் பார்த்தால் சந்தோசமாக இருக்கிறது. இவ்வளவு உற்சாகமாகப் பாடிக்கொண்டிருக்கிறார் என்று ஆச்சரியமாக நினைத்தார்.

சரி அவரிடமே கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று நினைத்து ஐயா பெரியவரே! கொஞ்சம் இப்படி வரமுடி யுமா? என்று கேட்டார்.

''பொழுது சாய்வதற்குள் இந்த வயல்முழுவதும் உழுது முடிக்க வேண்டும்; அதனால் பேசுவதற்கு நேரமில்லை'' என்றார் அந்த விவசாயி.

'' என்ன அவ்வளவு அவசரமா? மீதி இருந்தால் நாளை உழுது கொள்ளக் கூடாதா? அது சரி உங்களுக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது?'' என்று விசாரித்தார் ராஜா.

'' எனக்கென்று சொந்தமாக உள்ளங்கை அளவு நிலம் கூட இல்லை. இது எங்கள் எஜமானுடைய நிலம். இந்த நிலம் முழு வதையும் உழுது முடித்தால் தான் அவர் கூலி கொடுப்பார். நான் கூலிக்கு உழுது கொண்டிருக்கிறேன். பேசிக் கொண்டிருந்தால் நான் அவருக்குத் துரோகம் செய்வதாக அமையும்'' என்றார்.

ராஜா குதிரையை விட்டு இறங்கி வரம்பிலே நடந்து கொண்டு அந்தப் பெரியவரிடம் பேச ஆரம்பித்தார்.

ஒரு நாள் முழுவதும் உழுதால் உனக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்? என்று கேட்டார்.

"எட்டு ரூபாய் கூலி கிடைக்கும்" என்றார் அவர். "இவ்வளவுதானா? இதை வைத்துக் கொண்டு நீ எப்படி வாழ முடியும் என்றார்.

'' ஒன்றும் கவலை இல்லை என்றார் விவசாயி.

ராஜாவுக்கு ஆச்சரியமாகிவிட்டது. எட்டு ரூபாய் கூலி வாங்கும் இவர் கவலை இல்லாமல் இருக்கிறார். ஏராளமான வசதியோடு இருக்கும் நான் கவலையே இல்லாமல் வாழ முடியவில்லையே என்று நினைத்தார்.

" அதுசரி- எட்டு ரூபாயில் எப்படிக் குடும்பம் நடத்துகிறாய்?" என்று கேட்டார்.

" எனக்குக் கிடைக்கிற எட்டு ரூபாயில் இரண்டு ரூபாய்க்குப் பழைய கடன்களைக் கொடுக்கிறேன். இரண்டு ரூபாய் தானம் செய்கிறேன். இரண்டு ரூபாய் வட்டிக்குக் கொடுக்கிறேன் ஒரு குறையும் இல்லை'' என்றார். புரியவில்லை என்றார் மன்னர்.

'' ஐயா எனக்கும் என் மனைவிக்கும் இரண்டு ரூபாய்தான் செலவாகிறது. வயதான அம்மா அப்பா இருக்கிறார்கள் சின்ன வயதில் அவர்கள் என்னைக் காப்பாற்றினார்கள் அந்தக் கடனுக்கு இரண்டு ரூபாய் செலவாகிறது. அது பழைய கடன்.

என் தங்கை ஒருத்தி ஆதரவில்லாத நிலையில் தன் மகனோடு என் வீட்டில் இருக்கிறாள் அவளுக்கும் அவள் மகனுக்கும் இரண்டு ரூபாய் செலவு செய்கிறேன் அது தருமம்.

எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு ரூபாய் செலவு செய்கிறேன். அது வட்டிக்குக் கொடுப்பதைப் போன்றது. பிற்காலத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள். அந்த வகையில் நான் திருப்தியோடு வாழ்ந்த கொண்டிருக்கின்றேன் '' என்றார்.

அந்த ராஜாவுக்கு இப்போதுதான் அர்த்தமே புரிய ஆரம்பித்தது. அந்த நிலத்தை விலைகொடுத்து வாங்கி அந்த விவசாயிக்கே தானமாகக் கொடுத்தார். உழுதவருக்கே நிலம் சொந்தமாகி விட்டது. அன்றிலிருந்து அரசனுக்கு ஆறுதல் கிடைத்ததாம்.

இதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை எப்படி பங்கு போடுகிறார் எப்படித் திருப்தியாக வாழ்கின்றார் என்பதைப் புரிந்து நடக்கவும்.

ஒருத்தர் மகிழ்சியாக இருந்தார் ''உங்கள் மகிழ்சிக்கும் நிம்மதிக்கும் என்ன காரணம் என்று கேட்டார் இன்னொருத்தர்''

''என்னிடம் இருந்த எல்லாவற்றையும் என் பிள்ளைகளுக்குச் சமமாகப் பங்கு போட்டுக் கொடுத்து விட்டேன். எனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. அது தான் என் நிம்மதிக்கு காரணம்'' என்றார். ''உங்களிடம் எவ்வளவு சொத்து இருந்தது?'' என்று கேட்டார் மொத்தமாக ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கும் என்றார்.

''அவ்வளவும் பணமாக இருந்தது?'' என்பதற்கு இல்லை அவ்வளவும் கடன் அதைத்தான் பிரித்துக் கொடுத்தேன்'' என்றார்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28 செப்ரெம்பர் 2011 புதன்கிழமை



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் ஆவணி மாத இதழ் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை நிகழ்த்திய மூத்த எழுத்தாளர் தெணியான் சிறப்புப் பிரதி ஒன்றை வழங்குகிறார். (ம–236)

# பல்கலையில் பட்டம் பெற்றும் வெளியேறும் பலரிடம் தலைமைத்துவ ஆற்றல் இல்லை

## வடக்கின் துரித அபிவிருத்தித் திட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கவலை

சுன்னாகம்,செப்.28

படித்துப் பட்டங்கள் பெற்று வெளியேறும் பலர் போதுமான சமூகத் திறன்கள், வாழ்க்கைத் திறன்களைப் பெற்றிருக்காத வர்களாகவும் தொழிற் சந்தைக் குப் பொருத்தமற்றவர்களாக வும் காணப்படுகின்றனர்.

தன்னம்பிக்கையின்மை, சவால்களை எதிர்கொள்ள இய லாமை, தலைமைத்துவ ஆற்ற லின்மை போன்ற பிரச்சினை களை எதிர்கொள்கின்றனர். இதற்கு அடிப்படைத் தீர்வாக அமையக் கூடியது பாடசாலைக் கல்விப் பருவத்தில் இணைக் கலைத்திட்டச் செயற்பாடு களில் ஈடுபடுதலாகும் .

இவ்வாறு தெரிவித்தார் வடக்கின் துரித அபிவிருத்தித் திட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளரும் கணக்காளரு மாகிய ச.குகதாஸ்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாளும் பரிசில் வழங்கும் விழாவும் கடந்த வியாழக்கிழமை பாட சாலையில் புதிதாகப் புனர மைக்கப்பட்ட பிரதான மண்ட பத்தில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவிக் கையில்:

வெறுமனே புத்தகப் பூச்சி களாக உலாவிய மாணவர்கள் தனியார் தொழில் வாய்ப்புக் களைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர்.

தொழிலுக்காக அரசின் கை களை நம்பியிருக்க வேண்டியவர் களாக இருந்து வருகின்றனர்.

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்கின்ற வகையில் பாடசாலைகள் தமது செயற்பாடு களை முன்னெடுக்க வேண்டும். கிராமப் புறப் பாடசாலைகளும் இணைக் கலைத் திட்டச் செயற் பாடுகளை போதுமான அளவில் முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களுடன் ஒப்பி டும் போது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பல ஆக்க பூர்வமான முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

கடந்த வருடத்தில் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு 13 வீதத்தால் அதிகரித்திருப்பது பாடசாலைச் சமூகத்தவரின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

எனவே, பாடசாலைகளில் நிலவும் ஒற்றுமையான கல்வி நிலை வெற்றிகளைக் குவிக்க வழிகோலும்.- என்றார்.

விருந்தினர்கள் கல்லூரி முன்றிலில் இருந்து பருத்தித் துறை வீதியூடாக விழா மண் டபத்துக்கு அழைத்துவரப்பட் டனர். தொடர்ந்து கல்லூரி நிறுவுநர் அத்தியார் அருணா சலத்தின் நினைவுத் தூபியில் மலர் வணக்கம் இடம்பெற்றது.

கல்லூரியின் பழைய மாண வரும் யாழ்ப்பாணத்தின் மூத்த சிவாச்சாரியாருமான கு.தியா கராஜக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து அதிபர் இரா.குணநாதன் அதிபர் அறிக் கையைச் சமர்ப்பித்து உரையாற் றினார். அதனைத் தொடாந்து ஓய்வு நிலை அதிபர் கே. எஸ். பகவத்சிங்கம் நிறுவுநர் நினைவுப் பேருரை ஆற்றினார். (ம-38)

# சிறுகச் சொல்லி உயர் தாக்கத்தை ஏற்படுத்தும் உரைப் படைப்பே சிறுகதை

## சிரேஷ்ட முது நிலை விரிவுரையாளர் உரை

அச்சுவேலி, செப்.28

''சிறுகதை என்பது சிறிய அளவிலான கதைஅல்ல அது சிறுகச் சொல்லி உயர்பட்சத் தாக்கத்தை ஏற்படுத்துவதான ஓர் உரைப்படைப்பு'' என்பதை கருத்தில் கொண்டு சிறு கதை கள் உருவாக்கப்பட வேண்டும். உரிய வரைவிலக்கணத்தை உள்ளடக்கிய சிறுகதைகள் வாச கர்களின் உள்ளத்தில் உணர்வை ஏற்படுத்தும்.

இவ்வாறு கூறினார் யாழ். பல் கலைக் கழக சட்டத்துறைத் தலைவரும் சிரேஷ்ட முது நிலை விரிவுரையாளருமான கலாநிதி த.கலாமணி.

வலிகாமம் கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவையால் நடத்தப்பட்ட ''சிறுகதை பயி லரங்கம்'' செயல் அமர்வு வலி கிழக்கு பிரதேச செயலர் ம.பிர தீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெற்றது.

பயிலரங்கில் கலந்து கொண்டு காலநிதி த.கலாமணி தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித் தாவது:

சிறுகதையின் மரபு ரீதியி லான வரை விலக்கணத்தை உணர்ந்து கொள்ளாமல் சிறு கதைகள் எழுதப்படுகின்றன. சிறிய அளவிலான கதைகள் எல்லாம் சிறுகதை என்ற எண்ணக்கரு தவறானதாகும்.

சிறுகச் சொல்லி உயர் பட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். ஒரு சம்பவத்தின் அடியாகத் தோன் றும் உணர்வு நிலையே ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தின் மனோ நிலை தொடர்பான அதன் இயக்கத்தையோ இலக்கிய உணர்வுடன் கலாபூர்வமாக சித்தரிப்பதே சிறுகதையாகும்.

தமிழ்ச் சிறுகதைக்கும் மரபுரீதி யான வரையறைகள் உள்ளன. ஆனால் புதிய எழுத்தாளர்கள் மரபு ரீதியான வரையறைகளை புறம் தள்ளிவிட்டு நவீனத் துவம் என்ற நிலையில் எழுதத் தலைப்படுகின்றனர்.

அத்துடன் தாங்கள் எழுதுவது எல்லாம் சிறுகதை என்று ஏற்றுக் கொள்ளப்படவேண் டும். என எண்ணுகின்றனர் இந்த நிலையில் இருந்து விடு பட வேண்டும்.

சிறுகதையின் கூறுகள் என்ற வகையில் பாத்திரப் படைப்பு, பின்னணி, கதைப் பின்னல், நோக்கு நிலை உரிப்பொருள், குறியீடு என்பனவற்றைக் கொள் ளலாம் .

இந்தக் கூறுகள் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்து சிறுகதைக்கு ஒரு வடிவத் தையும் ஓர் அமைப்பையும் தருகின்றது. அத்துடன் ஒருமுக விளைவையும் கொடுக்கின்றது எனக் கூறினார்.(ம-11)

# வல்வெட்டித்துறை கலை இலக்கிய மன்றப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.28

**பரத நாட்டியம்**

பிரிவு 1 - ம.விதுஷிகா, கா.சாருகா.

பிரிவு 2 - ஞா.கிருஷாந் தினி, பி.ஜோதிகா, மு.வானதி ஸ்ரீ.கானப் பிரியா.

**தனி நடிப்பு**

வி.கவிச்செல்வன்,- மு.மாலதி, ர.ரேனுகா, ம.வினோதா.

**சங்கீதம்**

பிரிவு 1 - ஆ. அனித்தா, தி.அமிர்தா

பிரிவு 2 - செ.சங்கவி,இ.ஜெயப் பிரியா.

பிரிவு 3 - ரொ.மேரி அஞ்ச லினா, சி.செல்வநந்தினி.

**கவிதை**

பிரிவு 1 - இ.சுபாசினி, க.கிருஷாளினி.

பிரிவு 2 - தெ.நிரோசன், கு.நிஷாந்தினி, ந.கௌதமி.

பிரிவு 3 - சு.சுந்தரலட்சுமி, சி.செல்வநந்தினி, வி.கவிச் செல்வன்.

**சிறுகதை**

பிரிவு 1 - இ.றக்சனா, க.கிரு சாளினி, க.சினோஜிதா.

பிரிவு 2 - இ.லக்ஸியா, தெ.நிரோசன், ஆ.தமிழினி.

வெளி மாவட்ட சிறப்புப் பரிசு - விராஜ் செர்வின்

பிரிவு3 - பி.பிரதீபா, பி.லக்சியா.

**ஓவியம்**

பிரிவு 1 - மு.வினோ, க.கஸ் தூரி, க.வைதேகி.

பிரிவு 2 - ர.ரசோகன், பா.மவிஸ்ரா, இ.லதா.

பிரிவு 3- யோ.கார்த்தி கேயன், ரா.ரேனுகா.

# புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

**சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை**- பு.நிலக்சன் 178, யோ.மதுஜனா 164, த.கம் சாயினி 153, சி.குபேந்தினி 151.

**வல்வை சிவகுருவித்தி**- வே.வபிஷா-153.

**கல்வியங்காடு இ.த.க.**- ஜெ.கரீசன்-178, ர.சுஜாஜினி -176, சு.துஸ்கரணி-172, வி.மதுர் ஷன்-167, ந.தர்சினி-165, சு.அபிராமி- 163, ஜெ.காயத் திரி-152.

**மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்**



சு.துலக்ஷன்-169



மேனுஜன்-176



றி.கோஷிகன்-156



கோபிகன்-166



அபினா-162



சி.குயின்ஜிகா-162



க.அபிராஜ்-159

# பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.28

செரெண்டிப் சிறுவர் இல் லத்தின் அனுசரணையின் கீழ் உரும்பிராய் இந்துக் கல்லூரி யில் மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டியொன்று நடை பெற்றுள்ளது.

செரண்டிப் சிறுவர் இல்லத் தின் தலைவரும் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியுமான ஏ.கந்த சாமி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் ஈஸ் வரநாதன் சிறப்புரையாற்றினார்.

செரண்டிப் சிறுவர் இல்லம் பெற்றோரை இழந்த மாணவர் களுக்கு அவர்களது கல்விக் கென மாதாந்தம் நிதியுதவி வழங்கி வருகின்றமை குறிப்பி டத்தக்கது. போட்டி முடிவுகள் வருமாறு:-

**மேற்பிரிவு:** தெ.லஜினா (உரும்பிராய் சைவதமிழ் வித்தி),எம். அனுஷியா (ஏழாலை சைவ மகாஜன வித்தி), ஆர். அகிலன்(வசாவிளான் மத்திய மகாவித்தி).

**மத்திய பிரிவு:** கே.வேணுஜா (உரும்பிராய் சைவதமிழ் வித்தி), வி.தனுஜா (வேம்படி மகளிர் வித்தி), ஆர்.லவியா (வசா விளான் மத்திய மகா வித்தி).

**கீழ்ப்பிரிவு:** எல். அஜித்தா (ஏழாலை மகாவித்தி), ஏ.எஸ். சகித்தா(புத்தூர் சோமஸ் கந்தா வித்தி), ஆர். கலைப் பரிதி (உரும்பிராய் சைவதமிழ் வித்தி), ஜே.சயன்தன் (கோப் பாய் மகாவித்தி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டம் போடுவோர் திருந்துவார்களா?

என் நண்பரின் பக்கத்து வீட்டில் நிகழ்ந்துவந்த பலநாள் தவத்துக்குப் பலன் கிடைத்திருந்தது. கிட்டத் தட்ட ஒரு வருடமாக வேள்விக்கு வளர்த்த கிடாய் மாதிரி, அந்த வீட்டுப் பிள்ளையை வெளியில் காட்டாமல் பள்ளிக்கூடம், ரியூசன், பேர்சனல் கிளாஸ் , அதைவிடப் பேரனாரின் அதிகாலை நேரக் கல்வித் திணிப்பு என்பவற்றால் ஒருமாதிரிப் பெடியன் 'கொலர் ஷிப் எக்ஸாம்' பாஸ் பண்ணியிருந்தான். எக்ஸாமுக்கு அந்தப் பெடியனைவிடவும் பெற்றோர்தான் அதிகமாக மண்டையைப் போட்டு உடைத்திருந்தார்கள். எக்ஸாமுக்கு பிறகு பெடியன் , எல்லாத் துன்பங்களில் இருந்தும் விட்டு, விடுதலையானவனாக பழையபடி சினேகிதர்களோடு விளையாடப் போய்விட்டான். ஆனால் 'பிள்ளை எக்ஸாம் வடிவாச் செய்திருப் பானோ?' 'இந்த முறை பேப்பர் சுகம். அதால கட்டவுட் எவ்வளவு வரப்போகுதோ?' என்ற கலக்கத்தோடே அவர்களது நாள்கள் கழிந்துகொண்டிருந்தன.

நல்லவேளையாக இந்த முறை 'ரிசல்ட்' விரைவாகவே வந்துவிட்டதால் , ஏக்கத்துடன் கழிக்க வேண்டிய காலமும் குறைந்துவிட்டது. ஏறக்குறைய யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் நேர்த்திக் கடன்களும் வைத்திருந்தார்கள். சும்மா வருகின்ற இந்த நேர்த்திக் கடன்களை இழக்க எந்தவொரு கடவுளர்களும் விரும்பவில்லைப் போலும். அதனாலோ அல்லது பெடியனின் கெட்டித் தனத்தாலோ அல்லது பெற்றோர், உற்றோரின் இடைவிடாத திணிப்பாலோ பக்கத்து வீட்டுப் பெடியன் பாஸ் பண்ணிவிட்டான். திருமணவீடு, சாமத்தியச் சடங்கு போன்றவற்றுக்கு சென்று அன்பளிப்புக் கொடுப்பதைப் போன்று, இப்போதெல்லாம் 'எக்ஸாம் பாஸ்' பண்ணினாலும் ஒருமுறை தலைகாட்டுவது மரபாகிக் கொண்டிருக்கிறது. அந்த மரபை மீறாமல் இருக்கவேண்டுமென்பதற்காக 500 ரூபா காசோடு பக்கத்து வீட்டுக்கு நண்பர் விஜயம் செய்தார்.

மகன் பாஸான சந்தோஷத்தில் பூரித்திருக்க வேண்டிய பெற்றோர் கப்பல் கவிழ்ந்தது போல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். நண்பருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் சென்ற பின்னும் அந்த வீட்டில் நிலவிய நீண்டநேர அமைதியக் குலைத்து நண்பர் உரையாடலை ஆரம்பிக்க எத்தனித்தார்.

''அதுதான் பெடியன் நல்ல மார்க்ஸ் எடுத்துப் பாஸ் பண்ணிட்டானெல்லோ. பிறகென்னத்துக்கு எல்லாரும் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டிருக்கிறியள்?'' நண்பரின் உத்தி வேலை செய்யத்தொடங்கியது. நீண்ட பெருமூச்சுடன் பாஸான பெடியனின் தந்தை தன் மௌனவிரதத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

''அதையேன் கேக்கிறியள். முதல் பெடியன் பாஸ் பண்ணவேணும் எண்டு அந்தரப்பட்டம். இப்ப இவன் ஏன் பாஸ் பண்ணினான் எண்டு கிடக்கு'' விரக்தியோடு வெளிப்பட்டது அவரது குரல்.

''இதென்னடா புதுமையாக் கிடக்கு. ஆரும் பிள்ளை பாஸ் பண்ணினதுக்கு கவலைப்படிவினமோ?'' நண்பர் ஆச்சரியம் பொங்கக்கேட்டார்.

''இந்தக் கலிகாலத்தில இப்பிடித்தான் நிலைமை இருக்கு. கொலர்ஷிப் பாஸ் பண்ணினா ரவுணில உள்ள பெரிய ஸ்கூல்ல சேர்க்கிறதெண்டு சொல்லி வைச்சிருந் தனாங்கள். ஆனா இப்ப அது முடியாது போல கிடக்கு''.

''ஏன்? கொலர்ஷிப் பாஸ் பண்ணின பிள்ளையை எல்லாப் பள்ளிக்கூடங்களும் நீமுந்தி நான் முந்தி எண்டு விழுந்தடிச்சுக் கொண்டு சேர்க்குங்களே'' நண்பர் தன் எண்ணத்தை அவிழ்த்து விட்டார்.

''அப்பிடித்தான் நாங்களும் நினைச்சனாங்கள்.

## கோணல் கோலங்கள்

ஆனால் 'டொனேஷன்' கூடக் குடுக்கிற ஆக்களுக்குத்தான் 'அட்மிஷனில்' முன்னுரிமையாம். அவங்கள் கேக்கிற 'டொனேஷனை' என்னெண்டு குடுக்கிற தெண்டு தெரியாமல்தான் முழுசிக்கொண்டிருக்கிறம்'' தன் மனக்குறையை அந்தத் தந்தை இறக்கி வைத்தார்.

''ஆனா 'அட்மிஷனுக்காக' 'டொனேசன்' வாங்கக் கூடாதெண்டு கல்விப் பணிப்பாளர்கள் சொல்லியிருக்கினமெல்லோ?'' நண்பரும் விடாமல் தன் சந்தேகங்களை கேட்டுக் கொண்டேயிருந்தார்.

''பேப்பரில அப்பிடித்தானிருக்கு. ஆனா பள்ளிக் கூடக்காரர் வலு கெட்டிக்காரர். அவை 'டொனேசனை' நேரடியாகக் கேக்கிறேலை. பாடசாலை அபிவிருத்தி, கட்டட வளர்ச்சி நிதி, அது இதெண்டுதான் கேக்கினம். அதால டொனேஷன்' தான் வாங்குகினம் எண்டு ஆராலையும் நிரூபிக்க முடியாது''. என்று சொல்லிவிட்டு அவர் பழையபடி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டார்.

அநேகமான பெற்றோர் தனது சுற்றுவட்டத்தில் இருக்கும் பாடசாலைகளில் த்ம் பிள்ளைகள் கற்பதை விடவும் பிரபல்யமான கல்லூரிகளில் பயில்வதையே அதிகம் விரும்புகின்றனர். அதனால் அவற்றுக்கு மவுசு அதிகரிக்க, அதற்கேற்ற விகிதத்தில் 'டொனேசனை'யும் உயர்த்தி, அதைக் கறந்த பின்பே பாடசாலைகளில் புதிய மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். சில பாடசாலைகளில் அதிபர் நேரடியாக இந்த 'டொனேசனை'க் கேட்பதில்லை. அவர்கள் வேறொரு உத்தியைக் கையாள்கின்றனர். புதிய அனுமதிக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்ட பின்னர் அவர்களின் பெற்றோர் பாடசாலை அபிவிருத்திச்சபை நிர்வாகத்தினரைச் சந்திக்க வேண்டுமெனக் கோரப்படுவர். பாடசாலை அபிவிருத்திச் சபையினர் தோலிருக்க சுளை விழுங்குவதில் கெட்டிக்காரர்.

'' காசு தந்து எங்கட கல்லூரியில சேர்வதற்கு எத்தனையோ மாணவர்கள் 'கியூவில்' நிக்கினம்.ஆனா உங்கட மகன் கெட்டிக்காரன் எண்டதால உங்களுக்கு 'அட்மிஷன்' கிடைச்சிருக்கு. அதுக்கு கொஞ்சக்காசு எல்லாரும் தருகினம். கஷ்டமெண்டால் 2 தவணையில் கட்டலாம். இதெல்லாம் உங்கட பிள்ளையின்ர

**ஓடுகாலி**

நன்மைக்காகத்தான். அப்பிடியில்லாட்டி ஒரு பிரச்சினையுமில்லை. உங்களுக்கு வசதியான ஸ்கூல்ல நீங்க பிள்ளையைச் சேர்க்கலாம். நாங்கள் அந்த சான்சை வேற ஆக்களுக்குக் குடுப்பம்'' என்பது போல் பேரம் பேசி, 'அட்மிசன்' அலுவலை இனிதே நிறைவு செய்வார்கள். இதனால் அதிபருக்கும் கெட்டபெயர் இல்லை. 'டொனேசனும்' கிடைத்து விடுகின்றது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்.

இம்முறை அனுமதிக்காக எந்தவிதமான அற வீடுகளும் செய்யக்கூடாதென்று கல்விப்பணிப்பாளர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தாலும் மறைமுகமாக 'டொனேசன்' கலாசாரம் தொடர்வதாகவே பெற்றோர் குமுறுகின்றனர். இதை வெளியே சொன்னால் தம் பிள்ளை கற்கவிரும்பும் பாடசாலையில் அனுமதி மறுக்கப்படும் அல்லது அனுமதி கிடைத்த பின்னர் தனிப்பட்ட ரீதியில் அந்தப்பிள்ளை பாடசாலை நிர்வாகத்தால் பழிவாங்கப்படலாம் என்ற பயத்தில் மௌனிகளாக மாறியிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். டொனேசன் வாங்க வேண்டாமென்று சட்டம் போட்டாகி விட்டது. ஆனால் அதை வாங்கியே தீருவோ மென்று திட்டம் போடுபவர்கள் திருந்துவார்களா? ★

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

## இரவி பிரசாத் (றாயு)



மண்ணில்:
1981.10.07

விண்ணில்:
2009.09.19

திதி:
வளர்பிறை பிரதமை

அமரர் சொல்பதித்து ஆணிதனில் மாட்டிவைத்து
ஆண்டிரண்டு சென்றுவிட
உன் படத்தை சுவர் ஓரம் அமர்ந்திருந்து பார்க்கும் நேரம் எல்லாம்
கலை சிறப்புமிக்க உன் நிகழ்ச்சி காண
முன் இருக்கை தேடி அமர்ந்து பார்த்த நினைவுதான்
நெஞ்சில் முள்ளாய் குத்துதையா
பதுங்கு குழிதனிலே பாதுகாத்து வளர்த்து விட்டு
பரந்த நாட்டு பரிஸ் நகரில் பறிகொடுத்த செல்வ மகன்
றாயுவின் நினைவலையை அன்பின் உறவுகளே
உதயனின் பக்கத்தை புரட்டித்தான் பாருங்களேன்

தகவல்: இ.இரவி
புகையிரத வீதி, கொடிகாமம்.

உன் பிரிவால் தத்தளிக்கும்:
அம்மா, அப்பா, சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னையா
மருதலிங்கம்



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
எமது அன்புத் தெய்வமே
உங்களுடன் வாழ்ந்த நாள்களை
எண்ணி எண்ணி எம் கண்களில்
நீர் அருவியாய் கொட்டுதப்பா
மறக்குமோ எம் நெஞ்சம்
உங்கள் நினைவதனை
கடமை, கண்ணியம் கட்டுப்பாடு
என எங்களை வாழ வைத்த
எமது அன்புத் தந்தையே நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஈரைந்து
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம் நெஞ்சை
விட்டு அகலாது அப்பா

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வாக்காளர் பதிவுகள் மேற்கொள்வதில் கிராம சேவகர் அக்கறை தேவை

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பணிபுரியும் கிராம அலுவலர்களும் அதிகாரிகளும் எமது பிரதேசங் களின் நலனைக் கவனத்தில் எடுத்து ஒற்றுமையுடன் செயற்பட்டு வாக்காளர்களுக்கான பதிவுகளை மேற் கொள்ள வேண்டும் என்று யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு தேர்தல் ஆணையாளர் அனுப்பியுள்ள பதில் கடிதம் குறித்து கடந்த வியாழக்கிழமை மாநகரசபை உறுப்பினர் விஜயகாந் யாழ்.மாநகர சபை வளாகத்தில் செய்தியாளர்களு டனான சந்திப்பு ஒன்றை நடாத்தினர். இந்தச் சந்திப் பின் போது அவர் மேற் கண்ட விடயத் தைத் தெரிவித்தார்.

சந்திப்பின் போது அவர் மேலும்கூறுகையில்:-

அடுத்த வருடத்தில் நடைபெறப்போகும் வாக்காளர் பதிவின்போது கணக்கெடுக் கப்படும் தொகை கவனத்தில் எடுக்கப்படும் எனவும் யாழ். மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின்படி 8 லட்சத்து 16 ஆயி ரத்து ஐந்துபேரும் 2010 ஆம் ஆண் டுக்கான பதிவின் போது நான்கு லட் சத்து 84 ஆயி ரத்து 709பேரும் பதிவா கியுள்ளனர்.

இதன்படி 98 ஆம் உறுப் புரையின் கீழ் 9பேரும் 96(4) ஆம் உப உறுப் புரிமைக்கமைய ஒருவரும் என்ற வகையில் பத்து உறுப்பினர்களுக்கு 2009 இல் ஆசன உறுப்புரிமை கிடைத் தது. 2010 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பு தயாரிக் கும் போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட் டத்தில் வதிவிடத் தைக் கொண்டிருக் காதவர்களின் பெயர்கள் நீக்கப் பட்டமையால் நான்கு லட்சத்து 84 ஆயிரத்து 709 வரை வீழ்ச்சிய டைந்துள்ளது. இது சட்டரீதியா கக் குறைக்கப் பட்டிருக்கிறது. எனினும் அடுத்து இடம்பெறப்போகும் பதிவின்போது இந்த விடயம் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக் கப்படும் என்று தேர்தல் ஆணை யாளர் அறிவித் துளார். வாக்காளர் பதிவுகள் தொடர் பாக அதிகாரிகள் நியாயமாகச் செயற் படவேண்டும்.ஊட கங்களும் பொது மக்களும் இது குறித்து விழிப்புணர் வுகளை ஏற்படுத்த முன் வரவேண் டும் எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (வ-7)




சிவபார்வதி ஜோதிட நிலையம்
பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044
வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.
Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=



அபரக்கிரியை, அந்தியேட்டிக் கிரியை போன்ற
சமயக் கிரியைகள் செய்வதற்கு
தொடர்பு கொள்ள வேண்டிய இடம்
தர்ப்புருஷ தேசிக, சிவஸ்ரீ. க.சிவராசக் குருக்கள்
9/1, காளிகோயிலடி, குருமன்காடு,
வவுனியா.
024 222 1075, 024 4907603,
0776016649


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 10.03.1944
மறைவு: 29.08.2011



29.08.2011
திங்கட்கிழமை
சிவபதமடைந்த
எமது
குடும்ப
ஒளிவிளக்கு

அமரர்
புஸ்பராணி
இரத்தினம்
(சந்தணம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.09.2011) புதன்கிழமை காலை 5 மணிக்கு திக்கம் பள்ளந்தண்ணி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரி, அல்வாய் மேற்கு (திக்கம்)
அல்வாய்.

குடும்பத்தினர்

## பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
நவசிவாயம்
நடராசா



அன்னை மடியில்
17.01.1923
ஆண்டவன் அடியில்
02.10.1997
திதி: பிரதமை (28.09.2011)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ, ஆண்டுகள்
பதினான்கு ஆனாலும் மறக்க முடியவில்லையே ஐயா!
அம்பாளின் பாதக் கமலங்களே
சரணம் என்று நவராத்திரிப் பொன்னாளில்
அம்பாளிடமே சென்று விட்டீர்களே!
உங்களின் ஆத்மா சாந்தியடையத்
தேவியை வேண்டி இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஐயனார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 34 ஆம் ஆண்டு நினைவலைகள்



இராசையா தர்மராஜா

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



இராசையா சிவகாமி
(பாக்கியம்)

தோற்றம்:
25.01.1942
மறைவு:
25.10.1977

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டகலா தெய்வங்களே

தோற்றம்:
10.07.1912
மறைவு:
09.09.2010

கச்சேரி ஒழுங்கை, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் திருமுருகன்கொம்நெற்

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :- 0212227835






ஷாம்சன் இங்கிலிஷ் - 3 மாத ஆங்கிலப் பயிற்சி நெறி

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதிற்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக் கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன, ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்றுவரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் நீங்கள் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை. மாறாக மாணவர்களை ஏனையவர்களுடன் உரையாடல் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகிறது. இது குழந்தைகள் தம் தாய் மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப் பயிற்சியில் இணைய விரும்பினால் 01/10/2011 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைந்து கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08-10 a.m பிரிவு III - 01-03 p.m
பிரிவு II 10-12 a.m பிரிவு IV - 03-05 p.m

வாரநாள் பிரிவு (திங்கள், புதன்)
பிரிவு I 08-10 a.m பிரிவு III 01-03 p.m
பிரிவு II 10-12 a.m பிரிவு IV 03-05 p.m

3 மாத பயிற்சிக் கட்டணம்
ரூபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேச முடியாதுவிடின் முழுப் பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ். TEL: 0776214567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இடப்பெயர்வில் இருந்து தப்ப முடியாத நிலையில் 1989இல் இடம்பெயர்ந்து வேலணை மேற்கு நடராச வித்தியாலயத்துடன் இணைந்து பின்னர் சென். ஜோன்ஸ் அக்கடமியில் ஊர்காவற்றுறைப் பாடசாலைகள் இணைந்த கூட்டுப்பாடசாலையாக கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம் இயங்கியது.

அதன் பின்னர் அரியாலையிலுள்ள மில் ஒன்றில் 1995 இன் முற்பகுதியிலும் பின்னர் அல்லாரையிலும் தனது கல்விப்பணியை முன்னெடுத்தது. 1996 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மீண்டும் கரம்பொனில் இயங்கத் தொடங்கியது.



ஊர்காவற்றுறைப் பகுதியில் மீள்குடியேறிய மக்கள் மிகக் குறைவு அதனால் சொந்த இடத்தில் தங்கியிருந்தவர்களின் பிள்ளைகள் என்றவகையில் ஆரம்பத்தில் நூறு பிள்ளைகள் வரை பாடசாலையில் இணைந்து கொண்டனர். இந்தச் சமயம் பிரதி அதிபராகக் கடமையேற்ற கே. தேவராஜா 2000ஆம் ஆண்டில் அதிபராக நியமிக்கப்பட்டார். இடம் பெயர்ந்திருந்த காலப்பகுதியில் இந்தப் பாடசாலைக் கட்டடங்கள் சேதமுற்றதால் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க கல்வித் திணைக்களம் நிதி உதவியை வழங்கியிருந்தது. தற்சமயம் 223 மாணவர்களும் அதிபருடன் 9 ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர். பாடசாலையின் அபிவிருத்திக்கும் கல்விச் செயற்பாட்டு முன் னெடுப்புக்கும் பெற்றோர்களுடன் கனடாவில் உள்ள பழைய மாணவர் சங்கம், கனடா தென் கரம்பன் மேம்பாட்டுக் கழகம் என்பன உதவுகின்றன எனவும் மனையியல் அறைக் கெனப்பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் நிதி வழங்கப்பட்டதாகவும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் போன்றவைகளும் முடிந்த உதவிகளை வழங்கியுள்ளதாகவும் கூறும் அதிபர் தேவராஜா விளையாட்டு மற்றும் கோட்டமட்ட, வலய மட்டப் போட்டிகளிலும் நல்ல பெறு பேறுகள்கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கூயதுடன் விளையாட்டு மைதானம் மாரி காலத்தில் படகுகள் செல்லக்கூடியதாக நீரில் மூழ்கிக்கிடப்பதாகவும் அதை நிரப்ப உதவிகள் தேவை எனவும் கூறுகிறார்.

கடந்த காலங்களில் சிறந்த கல்வி அடைவுகளைக் கொண்டிருந்த இந்தப் பாடசாலை இடப்பெயர்வின் பின்னர் சற்றுத் தளர்வடைந்துள்ளது. ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்த நிலைக்கு மீண்டும் வரவேண்டும் என்பதற்காக ஆசிரியர்கள் பாடசாலை நேரத்துக்கு மேலதிகமாக ஒரு மணி நேரம் கூடுதல் கடமை செய்கிறார்கள்.

ஆசிரியர் பற்றாக்குறை உண்டு. இந்து சமய கலை, கலாசார பண்பாட்டு விழுமியங் களை மேம்படுத்தும் கேந்திர நிலையமாக்கல் எனும் கோட்பாட்டை நிறைவு செய்யக் கூடியதாக சைவப் பாடசாலையான இங்கு சைவ சமயத்தைக் கற்பிக்கக் கூடியதாக ஓர் ஆசிரியர்கள் இல்லை. இதனால் முன் சொன்ன நோக்கம் குறிக்கோள்களை அடைவதில் பிரச்சினைகள் உள் எதாகக் கூறப்படுகின்றது.

தரம் ஒன்று முதல் பதினொன்று வரையுள்ள இந்தப் பாடசாலை இந்தப்

**லக்ஸ்மன்**

பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்று எனக் கூறும் கரம்பொன் மக்கள் ஸ்தாபகரால் பிடியரிசி உதவி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும் அதனைப் புதுப்பித்து உதவ உரியவர்கள் முன்வரவேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

*(முற்றும்)*

TOSHIBA
Leading Innovation
e-STUDIO
இலங்கையின் முதல்தர போட்டோ பிரதி இயந்திரம்
No.1 Photocopier in Sri Lanka
JKOA இடமிருந்தோ அல்லது எமது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்தோ Toshiba e-Studio 181 பல்செயற்பாட்டு போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை செப்ரெம்பர் 15 முதல் ஒக்ரோபர் 30 வரையில் யாழில் கொள்வனவு செய்வதன் மூலம் அற்புதமான வெகுமதியைப் பெற்றுகொள்ளுங்கள்.



- 18 - 21 Copies Per Minute
- 32 MB Memory Std.
- A3-A5 Paper Size
- 250 Sheets Single Cassette & 100 Sheets Stack By Pass
- Zoom: 25%-200%
- 1-999 Multiple Copying
- Electronic Sorting
- 600 X 2400 dpi Resolution
- USB 2.0 GDI Printing

e-STUDIO181
அனைத்து வசதிகளும் ஒன்றில்
போட்டோ பிரதி + பிறின்டிங் + ஸ்கானிங்
சிறப்பு விலை Rs. 105,000/= + vat
TOSHIBA பெயர்ப்பலகை இலவசம்
இலவசம்
SAMSUNG 2232 (Dual Sim) கையடக்கத் தொலைபேசி
DIALOG TV தொலைக்காட்சி அடிப்படை இணைப்பு
TOSHIBA 1810D ரோனர் (25.000 பிரதிகள்)
15 றீம் 80 GSM போட்டோ பிரதித் தாள்கள்
மேலதிக ஒருவருட சேவை உத்தரவாதம்
எமது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்:
North Link Engineering (Pvt) Ltd.
#360/3 Main street, Jaffna. Tel / fax: 0212224099
STP Computer World (Pvt.) Ltd.
149, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 2674
JOHN KEELLS OFFICE AUTOMATION (PVT) LTD.
90 Union Place, Colombo 2, Sri Lanka.
Tel: 011 2313000, 011 5332611, 011 4702611
Fax : 011 2431745
Web : www.jkoa.com
Workshops/spare parts Depts.
148 Vauxhall Street. Colombo 2, Sri Lanka.
Service Hotline: 011 2 445760
தொடர்புகளுக்கு
அசோக் : 077 772 5241
அசோக்பாபு : 077 318 2838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரநாயக்காவின் பெயரை இல்லாதொழிக்க சதித்திட்டம்

## குற்றம் சுமத்துகிறார் சந்திரிகா



பண்டாரநாயக்காவின் பெயரை இல்லாதொழிப்பதற்கு பெரியளவிலான சதித்திட்டமொன்று தீட்டப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தாபகருமான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நினைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் அத்தனகல்ல ஹொரகொல்லவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ன, முன்னாள் ஜனாதிபதியும் புதல்வியுமான சந்திரிக்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

கட்சித் தலைமையகத்தில் சந்திரிக்காவின் படம் அகற்றப்பட்டுள்ளது. தந்தை, தாய் மற்றும் நான் தொடர்ச்சியாக 62 ஆண்டுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமைதாங்கிக் கின்னஸ் சாதனை படைத்துள்ளோம்.

தற்போது கட்சிக் கூட்டங்களில் எனது பெயரை குறிப்பிடுவதில்லை, எனினும் வீதியில் இறங்கினால் மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர். அந்தக்காலம் போன்று தற்போது இல்லை என்று மக்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர்.

குருதி, வியர்வை சிந்தி இந்தக் கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றேன், எனினும், அமைச்சர்கள் என்னிடம் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தாபகர் பண்டாரநாயக்கவின் ஐம்பதாம் நினைவு தினமான இன்று நடைபெறும் நிகழ்வுகளில் கட்சியின் பொதுச் செயலாளர் கலந்து கொள்ளவில்லை - என்று குற்றம் சுமத்தியுள்ளார்- அவர்.

மேலும் மஹாராஜா குழும நிறுவனத்தின் தலைவர் ராஜமஹேந்திரனுடன் தாம் நட்புறவைப் பேணியதாகச் சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை என சிங்களச் தொலைக்காட்சிச் சேவையொன்றுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டி - கொழும்பு அதிவேக வீதியை அமைக்க மலேசிய நாடு உதவும்


## அந்த நாட்டுத் தூதர்

கண்டி - கொழும்புக்கு இடை யிலான 110 கிலோ மீற்றர் அதி வேக வீதியை அமைக்கும் வேலைத் திட்டத்திற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்க மலேசியா தீர்மானித்துள்ளதாக இந்திய மற்றும் தெற்காசியாவிற்கான மலேசிய விசேட தூதர் எஸ்.சாமிவேலு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

கண்டி - கொழும்பு அதிவேக வீதியின் கட்டமைப்புப் பணிகள் கடந்த 2003 ஆம் ஆண்டு மலேசியாவிடம் கையளிக்கப்பட்டன. எனினும் தவிர்க்க முடி யாத காரணங்களால் இலங்கை மற்றும் மலேசிய அரசுகள் அதிவேக வீதி அமைப்புப் பணிகளை கைவிட்டன.

தற்போது இலங்கைத் தரப் பிடம் இருந்து விடுக்கப்பட்ட அழைப்பை அடுத்து கண்டி - கொழும்பு அதிவேக வீதி வேலைத் திட்டத்தில் இலங்கை ஆர்வம் காட்டி வருவதை உணரமுடிகின்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



சுற்றுலா தளங்களில் இலங்கைக் கென்று தனியிடம் இருக்கிறது. உலக சுற்றுலா தினமான நேற்று கொழும்பிலிருந்து காலிக்குச் செல்லும் வழியில் களுத்துறைக்கு அண்மையில் அனைவரது மனதைக் கொள்ளைகொள்ளும் மாதுகங்கையில் உல்லாசப் பயணிகள் சிறிய வள்ளத்தில் பயணம் செய்து மகிழ்கின்றனர்.

# ரத்மலானை விமான நிலையம் விரைவில் நகர விமான நிலையமாகும்

## விமான சேவைகள் அதிகார சபைத் தலைவர்

ரத்மலானை விமான நிலையத்தை நகர விமான நிலையமாக மாற்றி வெளிநாட்டு தனியார்ஜெட் விமானங்களுக்கும் சிறிய வான்கலங்களுக்கும் சேவை வழங்கப்படும் என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகார சபைத் தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றத்தின் மூலம் நாட்டுக்கு மேலதிக வருமானமும் அந்நிய செலாவணியும் கிடைக் கும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வரும் தனியார் ஜெட் விமான ங்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் எனவே, ரத்மலானை விமான நிலையத்தை நகர விமான நிலையமாக மாற்றுவதற்கான ஆரம்ப வேலைகள் ஏற்கெனவே ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் கூறினார். ரத்தமலானை விமான நிலையம் இலங்கை யின் முதலாவது சர்வதேச விமான நிலையமாகும். 1960 காலப்பகுதி வரை அது சர்வதேச விமான நிலையமாக இயங்கியது. யுத்த காலத்தில் அந்த விதமான நிலையம் விமானப்படைத் தளமாக பயன்படுத்தப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.


புலமைச்சுடர் பிரதியை சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே..........




இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்தமாக ரூபா 1000 ஐ காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை

| காசுக்கட்டளையாயின்- (கிரான்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக் கூடியவாறு) | வங்கி வைப்பாயின் - (126-1-001-0-3452799)என்றமக்கள்வங்கிஇலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |
|---|---|

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.,'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*புலமைச்சுடர் சந்தாப்படிவம்*

1. பெயர்:........................................
2. விலாசம் : ....................................
..................................................
3.தொ.பேசி இலக்கம் :..............................
4.பிரதிகளின் எண்ணிக்கை:..........................
5. செலுத்தப்பட்ட பணம் : .................... ரூபா
6. வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716850005/ 0115738855



பாராட்டி வாழ்த்தும்

10 ஆவது பிறந்தநாள்



யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும்
**மனோரஞ்சிதன் கீர்த்திகா**
2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டுப் பெருமகிழ்வடைவதுடன் இன்று (28.09.2011) புதன்கிழமை தனது பிறந்தநாளையும் கொண்டாடும் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ பாராட்டுவதுடன் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பப்பா,
அப்பம்மா, சித்தப்பாமார் (கொடிகாமம்)
28,பழம் வீதி, கந்தர்மடம்.



அதி கூடிய வட்டியினை வழங்கும்
**SDB நிலையான வைப்புக் கணக்கு**




*நிபந்தனைகளுக்கு உற்பட்டது

0112 832567

சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி
www.sdb.lk

Fitch Rating BB+
RAM Rating BBB

ARTBOX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசா, கனிமொழி மீது புது வழக்கு குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள்!

## அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்தனர் எனக் குற்றச்சாட்டு





டில்லி, செப். 28

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்தனர் என மத்திய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உட்பட 17 பேர் மீது புதிய குற்றச்சாட்டை சி.பி.ஐ. நேற்றுமுன்தினம் பதிவு செய்தது.

இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் மோசடி, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தினர் என்று ஆ.ராசா, கனிமொழி, சரத்குமார் உட்பட 17 பேர் மீது சி.பி.ஐ. ஏற்கனவே வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு டில்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி. சைனி முன்பு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் குற்றப் பதிவுக்கு முன், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தங்கள் தரப்பு வாதங்களைத் தனித்தனி யாக நீதிமன்றத்தில் எடுத்துரைத்தனர்.

இது சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெற்றது. இதற்குப் பின்னர் சி.பி.ஐ. தனது விளக்கத்தை அளித்தது. இதைத் தொடர்ந்து, சிறப்பு நீதிமன்றம் விரைவில் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யவுள்ளது.

இந்த நிலையில், மத்திய தொலைத்தொடர்பு அமைச்சராகப் பதவி வகித்த ஆ. ராசா, அவரது தனிச் செயலாளர் சண்டோலியா, மத்திய தொலைத்தொடர்புத்துறை முன்னாள் செயலாளர் பெகுரா ஆகியோர் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் அரசுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கின்றனர் எனக் கூறி பிரிவு 409, சதித் திட்டம் தீட்டினர் என பிரிவு 120 இன் படி புதிய வழக்கை சி.பி.ஐ. பதிவு செய்துள்ளது.

இதற்கு உடந்தையாக இருந்தனர் என கனிமொழி, சரத்குமார், பல்வா உள்ளிட்ட 14 பேரும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ராசா மீது முன்னர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 7 ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை கிடைக்கும். ஆனால், இப்போது சுமத்தப்பட்டிருக்கும் நம்பிக்கைத் துரோகம் தொடர்பான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ராசா உள்ளிட்டோருக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை அல்லது அபராதத்துடன் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ள புதிய குற்றச்சாட்டு மனு மீது குற்றம் சாட்டப்பட்டவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி பதில் மனுக்கள் தாக்கல் செய்ய உள்ளனர். அதன் பின்னர் இதுதொடர்பாக வாதம் நடைபெறவுள்ளது.

குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படாதவரை குற்றவாளிகளுக்குப் பிணை வழங்கக் கூடாது என்று சி.பி.ஐ. எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. குற்றச்சாட்டுகள் பதிவில் கால தாமதம் ஏற்படும் என்று தெரிகிறது.

இதனால் கனிமொழி உள்ளிட்டோருக்கு பிணை கிடைப்பதிலும் மேலும் காலதாமதம் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.(வ)

## தெலுங்கானாவில் தொடர்கிறது போராட்டம்

ஹைதராபாத், செப்.28

தெலுங்கானா தனிமாநிலம் கோரி கடந்த 15 நாள்களாக ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தெலுங்கானா தனிமாநில கோரிக்கைக்கு தொழிற்சாலைகளும் ஆதரவு தெரிவித்து நேற்று 2 ஆவது நாளாக ஸ்டிரைக்கில் ஈடுபட்டுள்ளன. பெல், தளபாடத் தொழிற்சாலை உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்களிலும், ஆரோபிந்தோ, ரெட்டிலேப்ஸ் மற்றும் மேட்ரிக்ஸ் உள்ளிட்ட தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் ஸ்டிரைக்கில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே தெலுங்கானாவின் 10 மாவட்டங்களில் பிற்பகலில் வீதி மறியல் போராட்டமும் தொடங்க உள்ளதால் பொதுமக்களுக்கு மேலும் சிரமத்தை ஏற்படுத்தும் என்று தெரியவருகின்றது. தெலுங்கானா தனிமாநிலம் கோரி நடந்து வரும் போராட்டத்தால் மாநில நிர்வாகம் செயலிழந்த நிலையில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## முறைகேடு வழக்கில் தயாநிதியிடம் விசாரணை ஆரம்பம்



மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக தயாநிதிமாறன் இருந்த போது தொலைபேசி இணைப்புகள் சட்ட விரோதமாக வழங்கப்பட்டமை குறித்து சி.பி.ஐ. விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக பி.டி.ஐ. செய்தி முகவர் வெளியிட்டுள்ள செய்தியில் மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக தயாநிதி பதவி வகித்த காலத்தில் சென்னையில் உள்ள அவரின் போட் ஹவுஸ் இல்லத்திற்கு பி.எஸ்.என்.எல். பொது மேலாளர் பெயரில் 323 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன.

சன் தொலைக்காட்சி அலுவலகத்தில் இருந்து பூமிக்கு அடியில் தயாநிதியின் வீட்டிற்கு அமைக்கப்பட்ட பிரத்தியேக கேபிள்கள் மூலம் இந்த தொலைபேசி இணைப்புகள் எல்லாம் சட்ட விரோதமாக பயன்படுத்தப்பட்டன.

இந்த தொலைபேசி இணைப்புகள் எல்லாம் கட்டணம் அதிகமான ஐ.என்.டி.என் வசதிகளை கொண்டிருந்தன. அதன் மூலம் சன் தொலைக் காட்சிக்குத் தேவையான தகவல்கள், செய்திகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உலகம் முழுவதிலும் இருந்து வெகுவிரைவாகப் பெறப்பட்டன என்று சில தரப்பில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.



சிவசேனா அமைப்பினர் நேற்று டில்லி அமைச்சர்கள் சிதம்பரம், பிராணப் முகர்ஜி, மற்றும் பிரதமர் மன் மோகன்சிங் ஆகியோரின் உருவப்படங்களை எரித்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

## அமைச்சர்களின் உருவப்படங்கள் தீக்கிரை

குற்றச்சாட்டுகள் காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கு உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் காங்கிரஸ் தலைவி சோனியாவிடம் விருப்பம் தெரிவித்திருந்தார். எனினும் பிரதமர் மன்மோகன்சிங் நாடு திரும்பும் வரை பொறுத்திருக்குமாறு, நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த அமைச்சர் ப.சிதம்பரத்திடம் சோனியா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று அமைச்சர்கள் சிதம்பரம், பிராணப் முகர்ஜி, மற்றும் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்கு எதிரான போராட்டங்களைத் தலைநகர் டில்லி சிவசேனா அமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். குற்றம் சாட்டப்பட்டுள்ள அமைச்சர்கள் உடன் பதவி துறக்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன், அவர்களது படங்களைத் தீயிட்டு எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (வ)

# 2 ஜி வழக்கில் ப.சிதம்பரத்தை சாட்சியாக விசாரிக்கவேண்டும்

### ராசா கோரிக்கை

டில்லி, செப்.28

ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணையில் மத்திய உள்துறை அமைச் சர் ப.சிதம்பரத்தை நீதிமன்றுக்கு சங சாட்சியாக அழைத்து விசாரிக்க வேண்டும் - என்று ஆ.ராசாவின் சட்டத்தரணி வாதாடினார்.

டில்லி சி.பி.ஐ. நீதிமன்றில் நீதிபதி ஓ.பி.சைனி முன்பு, ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணை நடைபெற்றது. அப்போது, முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் ஆ.ராசா சார்பில் மூத்த சட்டத்தரணி சுசில் குமார் ஆஜராகி வாதாடினார். அப்போது அவர் கூறியதாவது-

ஆ.ராசா மீதான சி.பி.ஜயின் வழக்கு, இரண்டு குற்றச்சாட்டுகளை பிரதானமாகக் கொண்டுள்ளது. ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை ஆ.ராசா ஏலம் விட்டிருக்க வேண்டும் என்றும், அவர் சுவான் ரெலிகொம், யுனிடெக் ஒயர்லெஸ் ஆகிய கம்பனிகளுக்குச் சாதகமாகச் செயற்பட்டார் என்றும், அதனால் அந்த கம்பனிகள் தங்கள் பங்குகளை விற்று அமோகமான லாபம் அடைந்தன என்றும் சி.பி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நட்டமே ஏற்படவில்லை என்று பிரதமர் மன்மோகன்சிங்கே நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

பங்குவிற்பனையை பொறுத்த வரை, அந்த காலகட்டத்தில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், அப்போதைய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், பங்கு விற்பனை பிரச்சினை குறித்து பிரதமர் முன்னிலையில் தெளிவுபடுத்தினார். சில யோசனைகளையும் தெரிவித்தார்.

ஆகவே, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை சாட்சியாக இந்த நீதிமன்றுக்கு அழைக்க வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டம் 311 ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றுக்கு உள்ள அதிகாரத் தைப் பயன்படுத்தி ப.சிதம்பரத்தை சாட்சியாக அழைக்க வேண்டும். அதற்காக அவருக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும்.

பிரதமர் முன்னிலையில், மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடந்ததா? இல்லையா? அதில், அவர் (ப.சிதம் பரம்) பங்கு விற்பனை குறித்து யோசனை கூறினாரா? இல்லையா? என்று ப.சிதம்பரத்திடம் கேட்க வேண்டும்- இவ்வாறு அவர் வாதாடினார். (வ)

## உண்ணாவிரதச் செலவு தொடர்பாக விளக்கம் கோரி மோடிக்கு 'நோட்டீஸ்'

குஜராத், செப். 28

குஜராத் மாநிலத்தில் முதல்வர் மோடி நடத்திய மூன்று நாள்கள் உண்ணாவிரதத்தின் போது அரச நிதி செலவழிக்கப்பட்டது குறித்து விளக்கமளிக்குமாறு கடிதம் மூலம் அந்த மாநில ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மாநிலத்தில் அமைதி, நல்லிணக்கத்தை வலியுறுத்தி கடந்த 17 ஆம் திகதி முதல் 19 வரை குஜராத் பல்கலைப் பட்டமளிப்பு விழா வளாகத்தில் உண்ணாவிரதம் இருந்தார்.

பின்னர் நேற்றுமுன்தினம் நடத்திய மெகா பேரணியில் ஆளுநரைக் கடுமையாக விமர்சித்தார்.

இந்த நிலையில், மகா குஜராத் ஜனதாக் கட்சியின் தலைவர் கோர்தன் ஜடாபியா என்பவர், ஆளுநர் கமலாபெனிவாலிடம் முறைப்பாட்டு மனு ஒன்றை அளித்தார். அதில், மோடி உண்ணாவிரதத்தில் அரசுப் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. இது குறித்த செலவு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் - என்று கோரியிருந்தார்.

இதுதொடர்பாக ஆளுநர் கமலாபெனிவால், கூடுதல் தலைமைச்செயலர், பொது நிர்வாகத்துறைக்கு தனது முதன்மைச் செயலர் மூலமாக கடிதம் அனுப்பி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கோர்தன் ஜடாபியா, முன்பு மோடி அமைச்சரவையில் அமைச்சராக இருந்து பின்னர் பா.ஜ.கவிலிருந்து பிரிந்து மகா குஜராத் ஜனதாக் கட்சியை ஆரம்பித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சி எனில் நிரந்தரத் தீர்வோ சமாதானமோ ஒருபோதும் கிட்டாது

## தமிழர் விடுதலைக் கூட்டணி

யாழ்ப்பாணம்,செப். 28

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக ஒற்றை யாட்சிமுறை அமையுமானால் சமாதானமோ அல்லது நிரந்தரத் தீர்வோ ஒரு போதும் ஏற்படாது. இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் திடமான எண்ணக்கருவாகும்.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியமற்ற கால விரயத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி அதிருப்தி தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாடு ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது இவ்வாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதில் கட்சியின் பொதுக்குழு வில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கட்சியின் முன்னாள் தலைவரும்செயலாளர் நாயகமுமான வீ. ஆனந்த சங்கரி மாநாட்டில் வெளி யிட்டுவைத்தார். அவற்றின் விவரம் வருமாறு:

* தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி நிபந்தனை அற்ற ஆதரவைக் கொடுத்தது. எமது ஒற்றுமையை நிலை நாட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் சில வேட்பாளர்களை, தமிழ் மக்களின் விருப்பத்துக்கு அமைய கொடுத்து உதவினோம். தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் தேசிய கூட்டமைப்போடு உள்ள உறவினை மீண்டும் வலியுறுத்தி பொது மக்களின் நன்மைக்காக ஒன்று சேர்ந்து செயற்படுவதோடு, ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்படும்.

* தமிழர் விடுதலைக் கூட் டணி தமது அகிம்சை கொள்கையை மீண்டும் வலியுறுத்தி சிறுபான்மை மக்கள் எதிர்நோக் கும் சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் இசைய வைத்து சமாதான முறையில் நியாயமான தீர்வைவென்றெடுக்கும்.

* யுத்தம் முடிவுற்று 2 வருடங்களின் பின்பும் மீள்குடியமர்த்தப்பட்ட ஒரு தொகுதி மக்கள் மீளக்குடியேறி ஒருவருடம் ஆகியும் முறையாக தமது வாழ்வை ஆரம்பிக்கவில்லை. அநேகருக்கு தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குரிய போதிய வழிவகை இல்லை.

அநேகர் தமது உறவுகளை இழந்துள்ளனர். அத்தோடு எல்லா மக்களும் தமது உடைமைகள் அனைத்தையும், வீடுகளையும் இழந்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு பொருத்தமான வழிமுறையில் உள்ளூர் மக்களின் பங்களிப்போடு மீளக்குடியமர்வு புனர்நிர்மாணம் ஆகியவற்றை நீதியான முறையில் அமுல்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கின்றது.

* நாடு முழுவதும் மக்களுக்கு பூரண சமாதானமும் குறிப்பாக யுத்தத்தால் அழிவடைந்த வடக்குகிழக்கு பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கில் சிலர் 18 தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். அத்தகைய நடைமுறையின் போது அவர்கள் தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து தம் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத அளவுக்கு ஓட்டாண்டி ஆகிவிட்டனர். இந்த பரிதாபகரமான நிலையில் இவர்களின் முக்கியமான பிரச்சினை காணி சம்பந்தப்பட்டதே. அநேகமான காணி சொந்தக்காரர்கள் பிற நாட்டில் வாழ்கின்றனர். அவர்களில் சிலர் பராயம் அடையாதவர்கள். அநேகர் தமது காணி உறுதிப் பத்திரங்களை இழந்துள்ளனர். இத்தகைய பல பிரச் சினைகள் மத்தியில் மக்களை தமது காணிகளை பதியுமாறு கேட்பது அவசியம் தானா? தாம் ஆண்டு அனுபவிக்கும் காணி களையும் பதியுமாறு கேட்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி தனது கடும் ஆட்சேபணையை அரசுக்குத் தெரிவித் துக்கொள்கின்றது. இந்தத் திட்டத்தை நாடு முழுவதும்அமுல்படுத்துவதாக இருப்பின் அரசு அப்பணியை இடம் பெயராது வாழும் மாவட்டங்களில் ஆரம்பிக்கலாம். நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து அவர்களின் காணி விவரங்களினைப் பெறுவதை அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

* யுத்தம் மக்களுக்கும் உடைமைகளுக்கும் பல நட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் ஆயுதங்களைக் கண்டதும் பைத்தியம் பிடித்ததுபோல் காணப்படுகின்றனர். கிறீஸ் பூதங்களின் பிரசன்னமும் நடவடிக்கைகளும் நிலைமையினை மிகவும் மோசம் அடையவைத்துள்ளது.

(இந்தவிடயத்தில் அரசு கடும் நடவடிக்கை எடுக்கத் தவறின் விளைவுகள் படுமோசமாகும். ஆகவே ஒருஜனாதிபதி ஆணைக்குழுவையோ அன்றில் உயர் சக்தி படைத்த ஒரு குழு வையோ நிமித்து விசாரணை நடத்த வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியை வற்புறுத்துகின்றது.)

* இராணுவத்தினரால் யுத்தின் போது கைப்பற்றப்பட்ட தங்கம் மக்களுக்கு சொந்தமானது. இந்தத் தங்கத்தை சட்டப்படியும் தார்மீக அடிப்படையிலும் மக்களுக்கே சொந்தமாகையால் அரசு மக்களுக்கே மீளக் கையளிக்க வேண்டும்.

* மீன்பிடி தொழிலில் ஈடு பட்டுள்ள மக்கள் முன்னொரு போதுமில்லாத வகையில் பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றனர். பொத்துவிலுள்ள அறுகம்பை தொடக்கம் யாழ்ப்பாணத்தி லுள்ள மயிலிட்டி வரை இந்தத் தொழிலில் ஈடுபட் டுள்ள மீனவர்கள் சொல்லொணா கஷ்டங் களை அனுபவிக்கின்றனர். மீன் பிடிப்பதற்கு மீனவர்கள் எவரிட மும் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அவசியம் இல்லை. உள்ளூர் மீனவர் களுக்கு இந்தகைய இடை யூறுகளை கொடுப்பதை வன்மையாக கண்டித்து 30 ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு சுதந்திரமாக தொழிலில் ஈடுபட்டார்களோ அவ்வாறே அவர் களை விட்டு விடும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வலியுறுத்துகின்றது.

புதிதாக அமைக்கப் பட்டுள்ள இராணுவ முகாம்களையும் இராணுவத்தினரையும் அகற் றும் படியும் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை வற்புறுத்து கின்றது.

* இந்திய முறையிலான ஆட்சிக்கு இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையி னர் உடன் பாடானவர்கள் என் பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீர்க்கமான அபிப் பிராயமாகும்.

* மக்கள் தம் உறவுகளை எண்ணி துயருற் றும் தாமே இன்னமும் முறை யாக வாழ்வை ஆரம் பிக்காத நிலையில் பிறரை அவர்கள் மத்தியில் குடி யிருக்க வைப்பது எதிர் பார்ப்புக்கு முரணாக அமையும் என்ற பாடத்தை தமிழர் விடு தலைக் கூட்டணி அரசுக்கு புகுத்துகின்றது.


## அகம் மகிழும் நல்வாழ்த்துக்கள்

கைதடி தெற்கைச் சேர்ந்த தற்போது கோண்டாவில் மேற்கில் வசித்து வரும் பக்தராசா - தவலோஜினி தம்பதியரின் செல்வப் புதல்வனும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைந்தனுமாகிய



### பவதாரகன்

2011 புலமைப்பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 4 ஆம் இடத்தைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரை மனதார வாழ்த்துவதுடன் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், பிரதி அதிபர், வகுப்பாசிரியர்களான செல்வி குவேனி, திருமதி ஸ்ரீகுமார், திருமதி சிவகுமார் போன்றவர்களுக்கும் மற்றும் ஊக்கமளித்த சகல ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா-பக்தராசா (கிளி), அம்மா-தவலோஜினி (தவம்) ஆசிரியை, அக்கா - பகிர்தா அண்ணா-பபிலன்.

பழைய முகவரி: - தைடிச் சந்தி
புதிய முகவரி: நவரத்தினராஜா வீதி, கோண்டாவில் மேற்கு.

## PATRICIAN INSTITUTE
## VACANCY

பதவி வெற்றிடம்
கணினிப் போதனாசிரியர்
COMPUTER INSTRUCTOR

மேற்படி பதவிக்குத் தகைமை உள்ளவர்கள் 05.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ விண்ணப் பங்களை அனுப்பவும்.

பின்வரும் பாடநெறிகள் கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

01.Computer Programming
02.Microsoft Office
03.DTP
04.Type Setting
05.Computer Accounting
06.Web Multimedia
07.Video Editing
08.Graphic Design
09. Internet and E.mail

மேலதிக விவரங்களுக்கு:
Register,
Patrician Institute,
61(59),St. Patrick's Road,
Jaffna.

T.P: 0212226148
Fax: 0212226148
E.mail:Spitee@Sltnet.lk

### தவறிவிட்டது

முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு, கோண் டாவில் என்னும் முகவரியைச்சேர்ந்த சிவலிங்கம் கோகுலன் என்பவரது தேசிய அ.அட்டை (870644027V),மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் 25.09.2011 அன்று சீரணிச் சந்திக்கும் வட்டுக்கோட்டை, சங்கரத்தைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது கண் டெடுத்தவர்கள் 0775312732 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

### கோயிலாக்கண்டி வேலம்பராய் கண்ணகி அம்மன் கோயில் பரிபாலன சபை

## அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற D.C. 5008 இலக்க வழக்கு தீர்வையின்படி மேற்படி கண்ணகி அம்மன் கோயில் பரிபாலன சபையினரால் கோயிலும் அதற்குரிய அசையாச் சொத்துக்களும் 02.08.2011 ஆம் திகதியில் நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரினால் பொறுப் பேற்கப்பட்டுள்ளது. பரிபாலன சபையினரால் பூசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு தினமும் காலை 7.30 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் பூசை நடைபெறுகிறது.

கோயிலுக்குரிய நெற் காணிகளில் பயிர்செய்கையை மேற்கொள்வோர் பரிபாலன சபையிடம் குத்தகை அனுமதியைப் பெற்று பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

சுந்தரமூர்த்தி சிவானந்தன் — பரிபாலனசபைச் செயலாளர்
இராமலிங்கம் பரராஜசேகரம் — பரிபாலன சபைத் தலைவர்
வேலம்பராய் கண்ணகி அம்மன் கோயில்
கோயிலாக்கண்டி, கைதடி.


## விதை நெல்லுக்கான விநியோகப் பதிவு

தென்மராட்சி, செப்.28

தென்மராட்சி தெற்கு தனங் களப்பு கமக்கார அமைப்புக் குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான விதை நெல் விநியோக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதுவரை பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் தொடர்பு கொள்ளுமாறு தனங்களப்பு கமக்கார அமைப்பின் செயலாளர் சி.புவனதாஸ் அறிவித்துள்ளார். (207)

## நீதிவான்கள் வெற்றிடம் நிரப்பப்படும்

கொழும்பு, செப்.25

நீதிமன்றங்களில் நீதிவான்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் நடத் தப்படவுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நீதிவான் நீதிமன்றங்களில் ஏற்படும் நீதிவான் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்பவும், நீதிமன்றங்க்ளில் விசாரிக்கப்படாது பிற்போடப்பட்டு வரும் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் மேற்கண்ட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிவான்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 250 க்கும் மேற்பட்டோர் தோற்றியிருந்த போதிலும் அவர்களில் 62 பேர் மட்டுமே குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

போட்டிப் பரீட்சையில் சித்தி யடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்தமாத நடுப்பகுதியில் நடத்தப்பட்டுத் தகுதியானோர் நீதிவான் பதவிகளில் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## சமய அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.28

தாவடி தெற்கு ஸ்ரீவடபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு இலவசமாக நடத்தப்படும் நான் காவது சமய அறிவு விருத்திப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு தரம் 6,7,8,9,10 மாணவர்கள் பங்கு பற்றலாம். பாடசாலை சமயப் பாடத்திட்டத்தையும் அடிப்படை பொதுச்சமய அறிவையும் உள்ளடக்கியதாக நடைபெறும். ஆர்வமுடைய மாணவர் கள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக ஆலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்கலாம்.

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும் இந்தப் பரீட்சை காலை 8.30 மணிக்கு தரம் 10 இற்கும், காலை 9 மணிக்கு தரம் 6 இற்கும், முற்பகல் 11 மணிக்கு தரம் 7 இற்கும், பிற்பகல் 3.30 மணிக்கு தரம் 8 இற்கும், மாலை 4 மணிக்கு தரம் 9 இற்கும் நடைபெறும்.

அத்துடன் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஏழு வய துக்கு மேற்பட்ட இருபாலாருக்கும் சிவதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

ஆர்வமுடையவர்கள் ஆலயத் துடனோ அல்லது 0212225135 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன தனிநாட்டுப் பிரேரணை; அமெரிக்கா வீட்டோவை பாவிக்காது

டென்மார்க்,செப்.28

பலஸ்தீன தனிநாட்டுப் பிரேரணை நேற்றுமுன்தினம் ஐ.நா பாதுகாப்புச் சபையில் விவாதத்துக்கு வந்துள்ளது. அதற்கு எதிராக அமெரிக்கா வீட்டோவை பாவிக்காது என்று இப்போது வெளியாகி உள்ள செய்தி தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளில் 9 நாடுகள் ஆதரவாக வாக்களித்தால் பலஸ்தீனம் ஐ.நாவில் தனியான நாடாக இடம்பெற்று விடும். அமெரிக்கா வீட்டோவை பாவிக்காது என்ற செய்தி புதிய நம்பிக்கையைத் தந்துள்ளது. ஆனால் ஒன்பது நாடுகள் ஆத ரிக்க வேண்டும். தற்போது சீனா, ரஷ்யா, பிரேசில், இந்தியா, தென்னாபிரிக்கா, லெபனான் ஆகியன பலஸ்தீனத்தை ஆதரிக்க முன்வந்துள்ளன. ஏனைய நாடு கள் இதுவரை முன்வரவில்லை. அப்படி முன்வராவிட்டால் அமெரிக்கா வீட்டோவை பாவிக்காமலே; அமெரிக்காவின் தலையில் பழி விழாமலே பிரேரணை தோல்வியடைய வாய்ப்புள்ளது.

பலஸ்தீனத்துடன் நடை பெறும் நெடிய போர் இஸ்ரேலின் பெரும்பான்மை மக்களை வறுமைக் குழிக்குள் தொடர்ந்து தள்ளிக் கொண்டிருக்கிறது. அப்படி இருந்தாலும் தமக்குப் பக்கத்தில் ஒரு சுதந்திர நாடு வருவதை இஸ்ரேலிய மக்கள் விரும்பவில்லை. இன்றுள்ளதைப் போலவே கலவரம் மிக்க நாடாக அது இருப்பதையே பெரும்பாலான மக்கள் விரும்புவதாகக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. பலஸ்தீனம் தனி நாடானால் தமக்கு மிகப் பெரிய ஆபத்து வரும் என்று இஸ்ரேலிய பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

## சவூதி வானில் தெரியும் விடிவெள்ளி பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை

ரியாத் ,செப்.28



அரேபிய நாடுகளிலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்காத நாடாகத் திகழ்ந்து வந்த சவூதி அரேபியா தற்போது அதிலிருந்து வெளிவரப் போகிறது. அங்குள்ள பெண்களும் இனிமேல் வாக்களிக்கலாம் என்று சவூதி மன்னர் அப்துல்லா அறிவித்துள்ளார். அவரது அறிவிப்பை, அந்தநாட்டின் மனித உரிமை ஆர்வலர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். அமெரிக்காவும் மன்னருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

கடந்த 22 ஆம்திகதி அடுத்த நான்காண்டுக்கான நகராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த நிலையில், மன்னருக்கு ஆலோசனை வழங்கும் உயர்மட்டக் குழுவான 'ஷூரா கவுன்சிலில்' பேசிய மன்னர் அப்துல்லா, 'அடுத்த நகராட்சித் தேர்தல் முதல் பெண்களும் வேட்பாளராக நிற்கலாம், வாக்களிக்கலாம்; ஷூரா கவுன்சிலுக்கும் உறுப்பினர்களாக வரலாம். இந்த முடிவை நாட்டின் உயரிய மத அறிஞர்களுடனான ஆலோசனைக்குப் பின்னரே எடுத்துள்ளேன்''; 2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நகராட்சித் தேர்தலில் இவை அமுலுக்கு வருகிறது என்று அப்துல்லா தெரிவித்துள்ளார். இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

அரேபிய நாடுகளிலேயே சவூதியில் மட்டுமே இதுவரை பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படாமல் இருந்து வருகிறது. மேலும் அங்கு பெண்களுக்கு மிகக் கடுமையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுப்பாடுகளை எதிர்த்து சவூதிப் பெண்கள் போராட்டங்களில் குதிக்க ஆரம்பித்துள்ளனர். சமீப காலமாகத் தடையை மீறி கார் ஓட்ட ஆரம்பித்துள்ளனர். இதையடுத்து பெண்கள் பெரும் போராட்டங்களில் குதித்து பல்வேறு கட்டுப்பாடுகளையும் மீறுவதற்குள் அவற்றைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை எடுக்க சவூதி அரசு முடிவு செய்தது. அதன்படி முக்கியத்துவம் வாய்ந்த வாக்குரிமை அனுமதியை தற்போது பெண்களுக்கு அளித்துள்ளது சவூதி அரசு. இதற்கான உத்தரவை சவூதி மன்னர் அப்துல்லா பிறப்பித்துள்ளார்.2015ஆம் ஆண்டு முதல் வாக்களிக்கலாம் என்பதை மாற்றி உடனடியாக வாக்குரிமையை அமுல்படுத்தப்பட வேண்டும் என்று சவூதி பெண்கள் உரிமை ஆர்வலர் வஜேஹா அல் ஹவைதார் கூறியுள்ளார்.

## பாகிஸ்தானில் பஸ் விபத்து: 37 பேர் பலி

கராச்சி, செப்.28

பாகிஸ்தானில் மலைப் பகுதியில் சென்று கொண்டிருந்த பாடசாலை பஸ் விபத்துக்குள்ளானதில் 37 பேர் பலியாகினர். 78க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பாகிஸ்தானின் லாகூர் அருகே உள்ள பாசிலாபாத் நகரில் உள்ள மாணவர்கள் காலார்கார் பகுதிக்கு சுற்றுலா சென்றனர். பஸ் சாவல் நகர் அருகே சென்றுகொண்டிருந்த போது திடீரென பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் பஸ்சில் பயணம் செய்த மாணவர்கள் 37 பேர் பலியாகினர் .

இந்த விபத்து குறித்து அருகில் இருந்த கிராம மக்கள் கூறுகையில் ,72 பேர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய பஸ்சில் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் என 110க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததால் ஏற்பட்டது ணத்தெரிவித்தனர். அதே சமயம் விசாரணை அதிகாரிகள் பஸ் பிரேக் பிடிக்காதத ணால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.



ஐ.நா. சபையின் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி, அங்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்தித்துப் பேசினார்.

## பிலிப்பைன்ஸில் கடும் சூறாவளி

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் சூறாவளி, மழை காரணமாக உள்ளூர் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விமானப் போக்குவரத்துக்களும் ரத்து செய்யப்பட்டுள்ளனன.

அடுத்த 24 மணி நேரத்தில் நாட்டின் கிழக்கு அரோரா பகுதியில் மணிக்கு 215 கி.மீ வேகத்தில் சூறா வளி வீசும் என்று வானிலை ஆய்வுத் தகவல்கள் தெரிவிப்பதால் மீட்புப்பணிக்கு கடற்படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

## 71 வருடங்களுக்கு முன் மூழ்கிய கப்பலில் 240 தொன் வெள்ளி மீட்பு

பல வருடங்களுக்கு முன்பு கடலில் மூழ்கிய இங்கிலாந்துக் கப்பலில் 240 தொன் வெள்ளி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1940 ஆம் ஆண்டு டிசெம்பரில் எஸ்.எஸ். கெய்ர்சப்பா என்ற இங்கிலாந்துக் கப்பல் வெள்ளி, இரும்பு மற்றும் தேயிலை ஆகியவற்றுடன் இந்தியாவிலிருந்து புறப்பட்டு இங்கிலாந் தின் லிவர் பூல் நகருக்குப் புறப்பட்டது.

இந்தக் கப்பல் 1941 பெப்ரவரி 17இல் அயர்லாந்து நாட்டின் தென் மேற்குப் பகுதிக்கு 300 மைல் தொலைவில் வந்தபொழுது பருவ நிலை மற்றும் எரிபொருள் இல்லாமை ஆகியவற்றால் தத்தளித்து கொண்டிருந்தது. அந்தக் கப்பல் நடுக் கடலில் வைத்து ஜேர்மன் நாட்டின் நீர்மூழ்கி கப்பலால் மூழ்கடிக்கப்பட்டது. தற்போது இந்தக் கப்பல் அட்லாண்டிக் கடற்படுகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 155 மில்லியன் பவுண்ஸ்கள் மதிப்பிலான வெள்ளி இருப்பது தெரியவந்துள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக

## நோபல் பரிசு வென்ற மாத்தாய் நேற்று சாவு

நைரோபி,செப்.28

புற்றுநோயால் அவதியுற்று வந்த நோபல் பரிசு பெற்ற பிரபல பெண் சுற்றுச்சூழல் ஆர்வலர் வங்காரி மாத்தாய் சிகிச்சை பயனின்றி மரணமடைந்தார்.

ஆபிரிக்க நாடான கென்யா நாட்டைச் சேர்ந்த வேங்காரி மாத்தாய் (வயது-71) நீண்ட காலமாகப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். நைரோபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பயனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை இறந்தார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் 1977ஆம் ஆண்டு கென்யாவில் பசுமை இயக்கம் என்ற அமைப்பை நிறு வினார். உலகைச் சுற்றுச் சூழலி ருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகப் பல ஆண்டுகளாகப் போராடி வந்தவர்.

இவரது அயராத முயற்சியால் ஆபிரிக்கா முழுவதும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் 40 மில்லியன் மரக்



கன்றுகள் நடப்பட்டன.

1980களில் சுற்றுச்சூழலால் நைரோபி நகரம் மாசுபடர்ந்து வருவதை அறிந்த மாத்தாய் தலைநகரான நைரோபியில் உயர்ந்த கட்டடங்கள் கட்ட எதிர்ப்புத் தெரிவித்து அப் போதைய அரசை எதிர்த்து போராடியதற்காக சிறை சென்றார். இவரது சிறந்த பணியினைப் பாராட்டி கடந்த 2004 ஆம் ஆண்டு இவருக்கு சுற்றுச்சூழலுக்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கடந்த 2002 ஆம் ஆண்டு கென்யா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சுற்றுச்சூழல்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றவர்.

## பாகிஸ்தானுக்கான உதவிகளை நிறுத்த அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம்

வாஷிங்டன் செப். 27

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் நிறுத்தக்கோரும் தீர்மானத்தை அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாண கவர்னர் டெட்போ அமெரிக்கா நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார்.தீர்மானத்தில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கும் அனைத்து உதவிகளையும் நிறுத்த வேண்டும் எனக் கோரி உள்ளார்.

பாகிஸ்தானின் உளவுப்பிரிவு ஆப்கானிஸ்தானின் ஹக்கானி அமைப்புக்கு உதவிசெய்து வருகிறது என அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஆனால் அதற்கு மறுப்புத் தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் அமெரிக்காவையே குற்றம் சாட்டினார். இந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

## சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிரீஸில் அனைத்துத் துறையினரும் போராட்டம்

கிரீஸ் நாட்டில் அரசு மேற்கொண்டு வரும் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் பொலிஸ் உட்பட அனைத்துத் துறையினரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் யூரோ மண்டல கடன் நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் சர்வதேச நிதியமைப்பு புதிய திட்டம் ஒன்றை வகுத்து வருகிறது. ஐ.எம்.எப் ஐரோப்பிய யூனியன், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புகளிடம் இருந்து கிரீஸ் பெற்ற கடன் தவணைகளுக்காக அரசு ஊழியர் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அந்த நாடு அமுல்படுத்தி வருகிறது.


இதற்கு அந்த நாட்டு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதத்தில் நாடு முழுவதும் பாதாள ரயில், புறநகர் ரயில் ஊழியர்கள் 24 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பொதுப்போக்குவரத்து ஊழியர்கள் பல மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

விமான நிலையங்களில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஊழியர்களும் வேலை செய்ய மறுத்ததால் விமானப் பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். இவர்களோடு கிரீஸ் பொலிஸ் துறையும் சேர்ந்து கொண்டது.


இதற்கிடையில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் உள்ள ஐ.எம்.எப் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் யூரோ மண்டல கடன் நெருக்கடி தீர்வுக்கான கூட்டம் நடந்தது. இதில் இன்னும் ஒருசில நாள்களில் கடன் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படும் எனவும், அத்தீர்வு ஐந்தில் இருந்து ஆறு வாரங்களுக்குள் அமுல்படுத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இன்று மோதல்



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம், செப்.28

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தின் வைர விழாவை முன்னிட்டு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தால் வடமராட்சி பாடசாலைகளுக்கு இடையே 20:20 கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மோதவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நிதி முகாமைத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள், வடமராட்சி கல்வி வலய உடற்கல்வித்துறை உதவிப் பணிப்பாளர் ச.செல்வக்குமரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராகக் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராசா, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம்.வேதாபரணம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-23)

## இன்று இடம் பெறும் தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.28

கைதடி மத்திய குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின் ஒளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணியின் விவரம் வருமாறு:

கைதடி உதயசூரியன் 'ஏ' பிரிவு எதிர் கைதடி மின்ஒளி விளையாட்டுக்கழக 'பி' பிரிவு. (ம-23-288)

## இன்று மோதவுள்ள உதைபந்தாட்ட அணிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன்வல்வெட்டித்துறை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 3 மணி- வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் வதிரி பொம்பஸ் விளையாட்டுக்கழகம்.

மாலை 4 மணி-நவிண்டில் அணி எதிர் பருத்தித்துறை ஐக் கிய விளையாட்டுக்கழகம். (ம-23)

# கோலைத் தவறவிட்டது மன்னார் சென்.ஜோசப் வெற்றிவாகை சூடியது பள்ளிமுனை லூசியா

யாழ்ப்பாணம், செப்.28

மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பண்டிவிரிச்சான் முத்துக்கள் மூன்று விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பண்டிவிரிச் சான் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பணங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பள்ளிமுனை சென்.லூசியஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் ஆட்டம் முடிவடையும் வரை இரு அணியினரும் எதுவித கோல்களைப் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதிலும் இரு அணியினரும் 4:4 என்ற கோல்களைப் பெற்றதால் ஆட்டம் மீண்டும் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் மீண்டும் ஒரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதுவும் சமநிலையில் முடிவடைந்ததால் மேலும் ஒரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பனங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் அணி தவறவிட்டது.

பள்ளிமுனை சென்.லூசிய விளையாட்டுக் கழகம் அதனைக் கோல் ஆக்கியதன் மூலம் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ம-23)




'உதயன்' அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை மூன்றாவது வருடமாக நடத்திய பளு, வலு தூக்கும் போட்டியில் சிறந்த கழகமாகத் தெரிவு செய்யப்பட்ட மலாயன் சாண்டோ நடராஜா உடற்பயிற்சி கழக அணித் தலைவரிடம் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக பளு தூக்கும் அணியின் முன்னாள் தலைவரும் கொடிகாமம் போக் கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபருமான கே.எழிலழகன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (ம-23)

# அரையிறுதி ஆட்டத்துக்கு சென்.ஜோன்ஸ் அணி தகுதி

யாழ்ப்பாணம், செப்.28

இலங்கைப் பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கம் 15 வயது பிரிவில் பிரிவு மூன்றுக்கு நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மொறட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி 40 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

ஹரிச்பெர்னான்டோ 50 ஓட்டங்களையும், பண்டார 21 ஓட்டங்களையும், நவிஸ்கா 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக லோகதீஸ்வர் 8 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், துவாரகசீலன் 7 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நிலோசன் 8 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பிரிசங்கர் 5 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், சிஷாந்தியன் 4 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

158 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 38.1 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் அஜித் 23 ஓட்டங்களையும், சிந்தியன் 26 ஓட்டங்களையும் துவாரகசீலன் 28 ஓட்டங்களையும் நிலோஜன் 18 ஓட்டங்களையும் கபில்ராஜ் 15 ஓட்டங்களையும் கணமிர்தன் 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி சார்பாக கருணாரட்ண 7 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஜெயக்கொடி, பண்டார, ஜோயல் பெர்ணாண்டோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் சென்.பீற்றர் கல்லூரி அணிக்கும் இடையில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று தெஹிவளையில் ஜெயசிங்க மைதானத்தில் இடம் பெறும் அரை இறுதியாட்டத்தில் அம்பலாங்கொடை சென்.மேரிஸ் கல்லூரி அணியை எதிரத்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# கிளிநொச்சி செயலக அணி சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.28

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தால் மாவட்ட செயலக உத்தியோகத்தர், 4 பிரதேச செயலகப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்தப்பட்ட வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர் அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

கிளிநொச்சி மாவட்ட செயலக பிரிவு உத்தியோகத்தர் அணியை எதிர்த்து கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவு உத்தியோகத்தர் அணி மோதிக்கொண்டது.

இதில் கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர் பிரிவு அணி 12:07 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# தேசிய மட்ட தடகளப் போட்டி வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.28

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை நான்கு தினங்கள் தியகமவில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தடகளப் போட்டியில் பங்குபற்றுவதற்காக வட மாகாணத்திலிருந்து 158 ஆண்கள், 150 பெண்கள் உட்பட 308 பேர் செல்லவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மண் கவ்வியது கொல்கத்தா



பேர்க்குசன்

கொல்கத்தா அணிக்கும், சவுத் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான நேற்றைய ஆட்டத்தில் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி தோல்வியைத் தழுவியது. சவுத் ஆஸ்திரேலிய வீரர்கள் பேர்க்குசன் மற்றும் கிறிஸ்ரெய்ன் ஆட்டத்தால் இந்த வெற்றியை சவுத் ஆஸ்திரேலியா பெற்றுக் கொண்டது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'பி' ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், ஆஸ்திரேலியாவின் சவுத் ஆஸ்திரேலிய அணியும் ஹைதராபாத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சவுத் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளிங்கர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அணித் தலைவர் கிளிங்கர், டானியல் ஹரிஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஆட்டத்தின் முதல் மூன்று பந்து பரிமாற்றங்களிலும் துடுப்பாட்ட வீரர்கள் எதுவும் சாதிக்கவில்லை. நான்காவது பந்து பரிமாற்றத்தை சுழற் பந்து வீச்சாளர் இக்பால் அப்துல்லா வீச ஹரிஸ் நான்கு ஓட்டம் மற்றும் ஓர் ஆறு ஓட்டம் விளாசினார். இருப்பினும் அந்தப் பரிமாற்றத்தில் அவரால் கொடுக்கப்பட்ட பிடியெடுக்கும் வாய்ப்பை கொல்கத்தா அணி தவறவிட்டது. அடுத்த பந்து பரிமாற்றத்தை யூசுப் பதான் வீச ஹரிஸ் ஆறு ஓட்டம் விளாசினார். இருப்பினும் ஆறாவது பந்துப் பரிமாற்றத்தை வீச அழைக்கப்பட்ட பாலாஜி ஹரிஸின் இலக்கைச் சரித்தார். 19 பந்துகளில் தலா இரு நான்கு ஓட்டங்கள் மற்றும் ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வெளியேறினார். தொடர்ந்து அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிளிங்கர் 20 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டில்' வெளியேறினார்.

தொடர்ந்து பேர்க்குசன் களமிறங்கினார். ஆரம்பத்தில் நிதானமாக ஓட்டக்குவிப்பில் ஈடுபட்டார். மறுமுனையில் களமிறங்கிய பொர்கஸ் 14 ஓட்டங்களுடன் யூசுப் பதானின் பந்து வீச்சில் வெளியேறினார். 11 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அணி 77 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது.

அதன் பின்னர் இணைந்த பேர்க்குசன், கிறிஸ்ரெய்ன் ஜோடி கொல்கத்தாவின் பந்து வீச்சைப் பந்தாடியது. 13 ஆவது பந்து பரிமாற்றத்தில் பேர்குசன் கொடுத்த பிடியெடுப்பைக் கொல்கத்தா கோட்டை விட்டது. தொடர்ந்து 15 ஆவது பந்து பரிமாற்றத்தை யூசுப் வீச பேர்குசன் 3 நான்கு ஓட்டங்களையும், ஒரு ஆறு ஓட்டத்தையும் அந்த பரிமாற்றத்தில் பெற்றார். 4 ஆவது இலக்குக்காக 29 பந்துகளில் 50 ஓட்டங்கள் பகிரப்பட்டது. அடுத்த பந்து பரிமாற்றத்தில் கிறிஸ்ரெய்ன் அதிரடியாய் ஆறு ஓட்டம் விளாச அணியின் ஓட்ட வேகம் சடுதியாக அதிகரித்தது. தொடர்ச்சியாக கொல்கத்தா அணி இவர்களின் பிடியெடுப்புக்களை கோட்டை விட்டது. பேர்க்குசன் 33 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். பாலாஜி வீசிய 19 ஆவது பந்து பரிமாற்றத்தில் கிறிஸ்ரெய்ன் 27 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், இரண்டு ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் இருபது பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சவுத் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பேர்க்குசன் ஆட்டமிழக்காமல் 40 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 70 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் பாலாஜி 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு மிகச் சவாலான இலக்கை கொல்கத்தா விரட்டியது. பஸ்லா, கலிஸ் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. முதலாவது பந்து பரிமாற்றத்தை சுழற் பந்து வீச்சாளர் நதன் லயோன் வீசினார். முதலாவது பந்திலேயே ஆட்டமிழப்பு முறையீடு செய்யப்பட்டது. அடுத்த மூன்று பந்துகளில் பஸ்லா தொடர்ச்சியாக நான்கு ஓட்டங்கள் விளாசி அதிரடியுடன் ஆட்டத்தை ஆரம்பித்தார். இரண்டாவது பந்து பரிமாற்றத்திலேயே அவரது ஆட்டம் முடிவுக்கு வந்தது. புட்லன் வீசிய பந்து வீச்சில் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த சகிப் அல் ஹசன் ஒரு நான்கு ஓட்டம், ஒரு ஆறு ஓட்டத்துடன் 13 ஓட்டங்களுடன் அவரும் ஆட்டமிழக்க கொல்கத்தா அணி சரிவைச் சந்திக்க தொடங்கியது.

தொடர்ச்சியாய் கம்பீர் 9, கலிஸ் 20, யூசுப் பதான் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். மத்திய வரிசையில் களமிறங்கிய திவாரி மாத்திரம் தனித்து நின்று சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். இறுதியில் திவாரி 31 பந்துகளில் தலா 2 நான்கு ஓட்டங்கள், ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஒரு கட்டத்தில் 15.1 பந்து பரிமாற்றங்களில் 104 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து மோசமான தோல்வியை நோக்கி கொல்கத்தா நகர்ந்து கொண்டிருந்தது.

இறுதி நேரத்தில் ரென் டொஸ்காரா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். 16 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்களுடன் 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் பகிர்ரா, அப்துல்லா ஜோடி இறுதி இரண்டு ஓவர்களை பந்தாடியது. இறுதியில் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து கொல்கத்தா 169 ஓட்டங்களைப் பெற்றது. பகிர்ரா 13 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 21 ஓட்டங்களை பெற்றார். அப்துல்லா ஆட்டமிழக்காமல் 2 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஹரிஸ், புட்லண்ட் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சவுத் ஆஸ்திரேலியாவின் பேர்க்குசன் தெரிவானார். (15)

## இன்றைய ஆட்டங்கள்

நியூ சவுத் வேல்ஸ் VS ரினினாட் ரொபோகோ
பி.ப. 4 மணி - சென்னை

சென்னை சுப்பகிங்ஸ் VS கேப் ஹோப்பிராஸ்
இரவு 8 மணி - சென்னை

# எங்களுக்குப் பாதிப்பில்லை

இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சச்சினை பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் தனது சுயசரிதையில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதற்கு பி.சி.சி.ஐ தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்தர் தனது செயலுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென மும்பை கிரிக்கெட் சபைத் தலைவர் விலாஸ்ராவ் தேஷ்முக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அக்தரின் செயலால் இந்தியா - பாகிஸ்தான் சபைகளுக்கு இடையேயான உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றார் பி.சி.சி.ஐ துணைத் தலைவர் ராஜீவ்சுக்லா.

## அதிருப்தியாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைமைத்துவம் மற்றும் கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென வலியுறுத்தி ஜே.வி.பியின் அதிருப்தியாளர்கள் குழுவொன்று போர்க் கொடி தூக்கியிருக்கிறது. இதன் பின்னணியில் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் செயற்படுவதாக நேற்றும் ஜே.வி.பியின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் குற்றஞ் சாட்டியிருந்தார்.

ஜே.வி.பியின் தலைவர்களுக்கும், அதிருப்தியாளர்களுக்குமிடையில் கருத்து முரண்பாடு தீவிரமடைந்திருப்பதையடுத்து இரு தரப்பும் அதிரடித் தீர்மானங்களை எடுப்பதில் தீவிரமாக நாட்டம் காட்டத் துவங்கியுள்ளன.

இதன் பிரதான அம்சமாக கட்சியின் அதிருப்தியாளர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஜே.வி.பி. தலைமை தீர்மானித்துள்ளது. (ஒ-சி)

## கூட்டமைப்புடன் பேசி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை விரைவில் நடத்தி அரசியல் பிரச்சினைகளுக்கு உரிய காலத்துக்குள் உறுதியான தீர்வு எட்டப்படுவதையே இந்தியா விரும்புவதாகவும் பிரணாப் முகர்ஜி எடுத்துக் கூறியுள்ளதாக பிரிஐ செய்தி நிறுவனத்திடம் பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தமிழ்ச் சமூகத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் நீதியான- அமைதியான- கண்ணியமான தீர்வு ஒன்றுக்கு இலங்கை வரும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும் பிரணாப் முகர்ஜி இந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார். (ஒ-10)

## அரசு - கூட்டமைப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணப்படவேண்டும். ஆரம்பம் முதலே நாம் இதனையே வலியுறுத்தி வருகின்றோம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எவ்வாறு வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பாக சிங்கள மக்களின் கருத்துகளை அரசு முதலில் கேட்டறிய வேண்டும். அதன் பின்னரே, ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டாம் என்று நாம் கூற வரவில்லை. நாட்டை கூறுபோட முனையாத, அதேபோன்று தேசப்பற்றுடனும் இதயசுத்தியுடனும் செயற்படும் தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை முன்னெடுக்குமாறே வலியுறுத்துகின்றோம். - என்றார். (ஒ-சி)

## கட்சி மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் கூறியதன் காரணம், கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளும் நல்ல நோக்கத்துடனாகும். ஆனால், அதனை சிலர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

கட்சி தொடர்பில் தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தவறான கருத்துகள் மற்றும் கட்சி உறுப்பினர்களிடையே காணப்படுகின்ற அதிருப்தியற்ற நிலைமைகளைச் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு ஜே.வி.பி. கட்சி மாநாட்டைக் கூட்டவேண்டும். ஆனால், சிலர் எங்களைப் பழிவாங்கும் எண்ணத்துடன் கட்சி மாநாட்டைக் கூட்டித் தீர்மானம் எடுத்தால், அதை அரசியல் பழிவாங்கல் என்றே கருதுவோம் - என்றார்.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாஷிங்டனில் உள்ள இராஜாங்கத்திணைக்களம் மற்றும் தூதரகங்களுக்கு 2009 மார்ச் 12 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள தகவல் குறிப்பிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளதாக 'விக்கிலீக்ஸ்' மேலும் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

2009 மார்ச் 10 ஆம் திகதி பாதுகாப்பு வலயத்தில் பலத்த ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஐ.நா அறிக்கை கூறுவதாகவும், இதில் 124 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 254 பேர் காயமுற்றதாகவும் ஐ.நா பிரதிநிதி தமக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.


இதையடுத்து 2009 மார்ச் 12ஆம் திகதி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து, பொதுமக்கள் தங்கியுள்ள பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று பலமுறை வலியுறுத்தியதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பீரங்கி நிலைகள் இருந்தாலும் கூட ஷெல் தாக்குதலை நடத்த வேண்டாம் என்றும் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

[illegible] கோத்தபாய ராஜபக்ஷ, சீரற்ற காலநிலையால் இரண்டு நாள்களாக ஜெட் விமானங்கள் பறக்கவில்லையே என்று தொடர்பில்லாமல், ஏளனமாகப் பதிலளித்ததுடன் பொதுமக்கள் கொல்லப்பட்டனரா என்று ஆச்சரியத்துடன் கேள்வி எழுப்பியதாகவும் விக்கிலீக்ஸ் கூறியுள்ளது. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 09.06.1940
விண்ணில்: 19.09.2009

அப்பா....!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஈராண்டு கழிந்ததுவே அப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்வோம்

மைத்துனர் தங்கவேல்
சகோதரி கனகம்மா, மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.*

**சரவணமுத்து கனகரத்தினம்**
(விதுசா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சங்கானை)

## REPAIRING
Contact : 021-222 4459, 0774192275

சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**NORTH LEAD**
Computer Sales and Service Center
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## COMPUTER CLASSES
### CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)

**NORTH LEAD EDUCATIONAL CENTER**
No.328,Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
*Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460*

## வைத்திய உதவியாளர் தேவை

454, ஆஸ்பத்திரி வீதியில் (பழைய OPD எதிரில்) இயங்கும் றோயல் மெடிக்கல் சென்ரரில் பணியாற்ற
- வைத்திய உதவியாளர் (ஆண்/பெண்)
- மருந்தாளர் (பதிவு செய்யப்பட்டவர்)

தேவை.
சுயவிவரக்கோவையுடன் நாளை (29.09.2011) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நேரில் வரவும்.



**தொடர்பு:**
**021 320 2300**

## Multimedia துறையிலே நீங்களும் வல்லுனராக விரும்புகின்றீர்களா?
## உங்களுக்காகவே விஷேட கலந்துரையாடல்!

யாழ் நகரில் முதன் முதலாக




இந்தியாவிலே திரைப்படத்துறையில்
பணியாற்றிய ஆசிரியரின் நேரடி வழிகாட்டலில்




நீங்கள்......
- வீடியோ எடிட்டிங் துறையில் வல்லுனராக வேண்டுமா?
- உங்கள் Studio ல் நவீன தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா?
- குறும்படம் தயாரிக்கும் ஆர்வம் உள்ளவரா?
- கட்டட நிர்மாணத்துறையில் 3D Animation Technology ஐ உட்புகுத்த விரும்புகின்றீர்களா?
- நீங்கள் எடுக்கும் வீடியோக்களை நீங்களே சிறந்த முறையில் Edit செய்ய விரும்புகின்றீர்களா?

**நீங்கள் எத்துறை சார்ந்தவராக இருப்பினும் உங்கள் திறமைகளை வளர்த்து கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

**இடம் : IIS பிரதான மண்டபம்**

**காலம் :- 02.10.2011 காலை 10.00மணி**

**மேலதிக விபரங்களுக்கு :- 0779688006**

பங்குபற்றுங்கள் பயனடையுங்கள்

## கண்ணீர் அஞ்சலி



எமது கமநல சேவைக்குழு உறுப்பினர்
சி.திருச்சிற்றம்பலம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு தந்தை

**கதிர்காமர் சிதம்பரநாதர்**

22.09.2011 வியாழக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.
அன்னாரின் அமர ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கமநலசேவை நிலையம், உடுவில்.
கமநலசேவைக்குழுவும் உத்தியோகத்தர்களும்.

## துயர் பகிர்கிறோம்



எமது திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
சி.திருச்சிற்றம்பலம் அவர்களின் தந்தை

**கதிர்காமர் சிதம்பரநாதர்**

22.09.2011 வியாழக்கிழமை இறைபதம் அடைந்ததால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
கமநலஅபிவிருத்தி திணைக்கள சமூகமும், நலன்புரி சங்கமும்.

## மரண அறிவித்தல்

### *பாலசிங்கம் புஸ்பராசா*
*(தாரா - லண்டன்)*

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் புஸ்பராசா (தாரா) நேற்று முன்தினம் (26.09.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவராசவதியின் அன்புக் கணவரும் நிதர்சன், பூஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பநாதன், கருணாகரன் (பிரான்ஸ்), ஆனந்தராஜா (நெதர்லாந்து), மகேந்திரராஜா (சுவிஸ்), உமாவதி, காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், அமராவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2011 சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர் நா.விஸ்வலிங்கம்
(சிவக்கொழுந்து) குடும்பம்.
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

# துயர் பகிர்கின்றோம்



## அமரர் இராசரத்தினம் செல்லம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது அன்புக்குரிய மருமகன்
ஐ.தயானந்தராஜா குடும்பம்
மற்றும் அன்னாரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரது
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயம்,
சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக விலங்கு விசர்நோய்தினம் 2011

மேற்படி தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ். நாவலர் றோட் தியாகிகள் அறக்கொடை நிதிய சொர்ணாம்பிகை மண்டபத்தில் இன்று 28.09.2011 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக செயலாளர், சுகாதார அமைச்சு வடமாகாணம், திரு ச.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில் மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டிகளுக்கான பரிசில்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். பரிசு பெறும் மாணவர்கள் மேற்படி விழாவில் கலந்து கொண்டு பரிசில்களைப் பெறுமாறு வேண்டுகின்றேன்.

**பரிசு பெறுவோர்**

**பாடசாலைமட்ட கட்டுரைப்போட்டி**

1ஆம் இடம்: சி. தனுராஜ்
க.பொ.த. (உயர்தரம்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

2ஆம் இடம்: ச. சத்தியபாலன்
க.பொ.த. (உயர்தரம்)
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

3ஆம் இடம்: க. துவாரகன்
க.பொ.த. (உயர்தரம்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**ஆறுதல் பரிசுகள்**

1. கி. அரவிந்தன், தரம் - 11
யா/இணுவில் மத்திய கல்லூரி
2. கி. சுவஸ்திகா, தரம் - 11
யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை
3. டிலானி பூமணி
க.பொ.த. (உயர்தரம்)
யா/இந்து மகளிர் கல்லூரி
4. சி. சிவதர்சினி, தரம் - 11
யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை
5. ம. கஜகிருஸ்ணா, தரம் - 07
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பாடசாலைமட்ட ஓவியப்போட்டி**

1 ஆம் இடம்: தே. பபிராஜ்
தரம் - 13
யா/இணுவில் மத்திய கல்லூரி

2 ஆம் இடம்: சூ. சர்மிளா
தரம் - 12
யா/இந்து மகளிர் கல்லூரி

3 ஆம் இடம்: த. மதுசன்
தரம் - 11
யா/ஹாட்லிக் கல்லூரி

ஆறுதல் பரிசுகள்

1. வ. தனுசுயன்
தரம் - 10
யா/இணுவில் மத்திய கல்லூரி
2. ப. பார்த்தீபன்
க.பொ.த. (உயர்தரம்) 2011
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி
3. யோ. அரவிந்தன்
க.பொ.த. (உயர்தரம்) 2011
யா/இணுவில் மத்திய கல்லூரி
4. கு. கஜலக்சன், தரம் - 08
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
5. மு. கலாரஞ்சினி, தரம் - 13
யா/இணுவில் மத்திய கல்லூரி

விழாவில் நாடகம், நடனம் போன்றன இடம்பெறும். மக்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர், சுகாதரா சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் இருந்து 2011 தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 178 புள்ளிகளைப் பெற்ற **செல்வி மகேந்திரம் லலிதாம்பிகை** அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற கு.காண்டீபன், ஜெ.ஜெனுசன், கி.புவிநிஷா, ர.ஜனனி, பி.ஜீவரோசினி, கு.சாருஜன், ஸ்ரீ. ஸ்ரீதரன், ர.ரணீஸ், சி.கனிஸ்ரன், கு.திவாகரன் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவி

**செல்வி சதீசன் சமீனா**

2011 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளை பெற்றுச் சித்தியடைந்தமைக்கு இவரை வழி நடத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அன்பொழி கல்வி நிறுவன இயக்குனர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது பெருநன்றிகளைக் கூறுவதோடு இவரை அம்மா, அப்பா, தங்கை, பேரன்மார், பேர்த்திமார், பெரியப்பாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் பல்கலையும் பெற்று வழமுடன் வாழ்கவென இனிதே வாழ்த்துகின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

## அதிபர்களுடனான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.28

வலிகாமம் கல்வி வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஓ-313)

## விரைவு கணித திறன் விருத்திப் போட்டி இன்று

பருத்தித்துறை,செப்.28

வடமராட்சி வலய மட்ட விரைவு கணிதத் திறன் விருத்திப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களில் நடைபெற்ற போட்டி யில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்வர். (ஓ-190)

## மாற்று வலுவுள்ள மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை ,செப்.28

வடமராட்சிகல்வி வலயத்தின் மாற்று வலுவுள்ள மாணவர்களுக்கான மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் சேவைக்கால ஆலோசகர் ரி.புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்து கொள்வார். (ஓ-190)

## திறந்த பல்கலைக் கழக சட்டமாணி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செ.28

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கை நெறிக்கான விசேட கருத்தரங்கு செயலமர்வு இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

கொழும்பு திறந்த பல்கலைக் கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் கருத்தரங்கு நிகழ்வில் சகல சட்டத்துறை மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (323)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையின் ஆளுநர் சபை உறுப்பினரும் இ.செ.ச.சண்டிலிப்பாய் பிரிவு செயலாளரும். ஆகிய திரு.த.ரவிச்சந்திரன் அவர்களின் பாசமிகு மாமியார்

**திருமதி இராசையா திரேசம்மா**

காலமாகியதையிட்டு இ.செ.சங்க சண்டிலிப்பாய் பிரிவு சார்பில் அன்னாரது மறைவினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
சண்டிலிப்பாய் பிரிவு.

**COMPUTER COURSES**

Diploma in Computerized **Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** Premiere Pro CS4, particleillusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

**DMI COMPUTER EDUCATION**

Tel. : 021-222 4403
நெல்லியடி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி. Tel. : 021-227 9243

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி சோதிமலர்



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சோதிமலர் 25.09.2011 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்தையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் தியாகராசா (இராசையா) திசநாயகம், மகேந்திரராசா ஆகியோரின் சகோதரியும் விக்னேஸ்வரன் (நெதர்லாந்து), யோகேஸ்வரி (டென்மார்க்), நிர்மலேஸ்வரி (ஆசிரியை மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), விஜயேஸ்வரி ஆகியோரின் தாயாரும் ரூபலதா (நெதர்லாந்து), வசந்தராசன் (மென்மார்க்) இராஜகுலேந்திரன் ஆகியோரின் மாமியும் ஸ்ரெபியா, ரொசாந், நிலுஜா, ஜெனீசா, ஹிசானன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28.09.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தசாமி தங்கவேலாயுதம்



வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தங்கவேலாயுதம் 24.09.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி-மகேஸ்வரி தம்பதியரின் மகனும், யோகமலரின் கணவரும், வனீசன், அனோயன், கம்சா ஆகியோரின் தந்தையும், மனோகரி, புனிதவதி, துரையம்மா, செல்வம் ஆகயோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2011) புதன் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1ஆம் ஒழுங்கை, பிரம்படி லேன்,*
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
வெ.செந்தூர்ராஜன்
(மருமகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 29 |
| 04 | 08 |
| 1935 | 2011 |



அமரர் **மாரிமுத்து சிதம்பரம்(சீர்காழி)**

கடந்த 29.08.2011அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் மாரிமுத்து சிதம்பரம் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று 28.09.2011 புதன் கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும். அன்னாரது ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

39/கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

கஜன்(பேரன்)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 30 |
| 09 | 09 |
| 1950 | 2008 |



திருமதி **விவேகானந்தன் பூபாலதேவி**

ஆண்டு மூன்று ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா
துன்பக்கடலில் மூழ்கியே
துவண்டு துடிக்கின்றோம்
துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழி நடத்தும்
எங்கள் அன்புத் தெய்வமே....
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

பெரியார் பகுதி
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

கணவன், மகன், மகள், மருமக்கள்,
தம்பி, பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Upto 90% Discount + Free 5 Diploma Course fee

Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English

6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி பயிலும் வாய்ப்பு

இன்றே உங்கள் <Name><Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

MCS Supported By UNDP/JRRP
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324, Palaly Road, Parameswara Junction
facebook - mcsitcampus www.mcsitcampus.org

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு

அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்

பிரிவு 1 : 28.09.2011 காலை 11-1 மற்றும் 29.09.2011 காலை 11-1
பிரிவு 2 : 01.10.2011--12.30-2 மற்றும் 02.10.2011--12.30-2

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

மீண்டும் யாழ். மண்ணில்
A/L அரசியல் by: K. சுகாஷ் (LLB)

2008 வரை யாழ். முன்னணி ஆசிரியர்
தற்போதைய கொழும்பின் பிரபல ஆசிரியர்

வகுப்புக்கள் ஆரம்பம் 01.10.2011

D.C.M - யாழ் நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
BITSMANS - மானிப்பாய்
SUBRA - சித்தன்கேணி

2012 -paper class (முழுப்பாடத்திட்டம் முடிக்கப்படும்)
2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாராயணபிள்ளை மகேஸ்வரி
(தொல்புரம் கிழக்கு - சுழிபுரம்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாராயணபிள்ளை மகேஸ்வரி 25.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அம்பலவாணர் நடராசா



காரைநகர், கள்ளித் தெரு, தங்கோடையைப் பிறப்பிடமாகவும், 61/2, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடராசா 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இராசேஸ்வரி, ராஜகுமாரி, சூரியகுமாரன் (நிர்வாக உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), நந்தகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செவ்வராணி, பூரணச்சந்திரன், விமலச்சந்திரன், லோகேஸ்வரி (உதவி விரிவுரையாளர், உயர் தொழில் நுட்ப நிறுவனம், A.T.I. திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும், றூபன் (முகாமைத்துவ உதவியாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), சுரேஸ்குமார், யசோதா, தர்சன், துவாரகன், அங்கனி, அட்சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் 29.09.2011 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
N.சூரியகுமாரன் (மகன்)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.28

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், பாரம்பரிய சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்த தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் துறைசார்ந்த அதிகாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலி.தென் மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-323)

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
முதற்தர கலப்பின ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
பதிவுகளுக்கு - 021 7200616

DCM யாழ்.நகர்
A/L 2012, 2013 & PAPER
பௌதிகவியல் S. வரதராஜன்
கணக்கீடு AP.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புதியதோர் உலகம் செய்வோம்
DCM
A/L DAY CLASS
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 2.00
ஆரம்பம் : 3 - 10 - 11 திங்கள் 7.30
பின்னர் வருகின்றது.
நிர்வாக இயக்குநர் S. வரதராஜன்

## மரண அறிவித்தல்

### திருமதி சிவானந்தன் மீனலோஜினி



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தன் மீனலோஜினி நேற்று (27.09.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்பிகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், முத்துத்தம்பி - தங்கச்சியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவானந்தனின் அன்பு மனைவியும், கஜானனின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான நாகபூசனியம்மா, செல்வி சறோஜினிதேவி மற்றும் இராஜராஜேஸ்வரி, குருபரன், சோதிநாதன் (சுவிஸ்), பவானிதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
கஜன் (மகன்)

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு

B1 Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
Duration : 2 Months

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனைத்து பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I 29.09.2011 2.00 - 4.00
Batch II 30.09.2011 8.00 - 9.00
Batch III 03.10.2011 2.00 - 4.00

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

புலமைப் பரிசில் வகுப்பு
யாழில் சாதனை நிலைநாட்டிய பாடசாலையின் விசேட ஆசிரியர்
திரு. சி.ஞானகுமாரன்
அவர்களின் விசேட புலமைப் பரிசில் வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 01-10-2011 சனி மாலை 3.00மணி
தரம் 5 புலமைப்பரிசில் 2012 (தற்போது தரம் 4)
புதிய அனுமதிகள் இடம்பெறும்
தரம் 4 புலமைப்பரிசில் 2013 (தற்போது தரம் 3)
புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கடை திறப்பு விழா
மதுசிகா தளபாட விற்பனை நிலையம்





இன்று (28.09.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இல. 512, K.K.S.வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணத்தில் சகல விதமான தளபாடங்களையும் மொத்தமாகவும், சில்லறை யாகவும் பெறக்கூடிய வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்காக மதுசிகா தளபாட நிலையம் திறக்கப்படுகின்றது.

உரிமையாளர்
தொ.பே: 0776354574 இ.சாந்தீபன்

IIS கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
24.09.2011
01.10.2011 காலை 10.00 மணி
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!! உங்களுக்காகவே விசேட பிரிவுகள் பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரையுள்ள காலத்தை பயனுள்ளதாக்கி கொள்ளுங்கள்.....
IIS இனால் வழங்கப்படும் விசேட சலுகைகளை அனுபவிக்க உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள் ....
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.
T.P :021 222 2831 Fax:021 222 6933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



உ
மகாகணபதி துணை
அழைப்பிதழ்
28.09.2011 புதன்கிழமை
காலை 10.31 - 11.01 மணிவரையான
அத்தநட்சத்திர சுபவேளையில்
மருதம் பெயின்ற் டீலேர்ஸ்
(நெல்லியடி பொலிஸ் நிலையம் முன்பாக)
162, பிரதானவீதி, நெல்லியடி, கரவெட்டி.
எங்கள் முன்னேற்றத்திற்காக
தங்கள் நல் வரவை நாடும்
மருதம் பெயின்ற் டீலேர்ஸ்


# மிளகாய் மருத்துவம்

காரசாரமான உணவுக்கு முக்கிய காரணமாய் இருப்பது மிளகாய். நமது சமையலில் மிளகாய்க்கு சிறப்பான இடம் உண்டு. இது ஊசி மிளகாய், குண்டு மிளகாய், குடமிளகாய் என மூன்று வகைகளைக் கொண்டது.

இவை காரத்தன்மையால் வேறுபடுகின்றன. குடமிளகாய் காரம் குறைந்தது. இத்தாவரத்தின் காய் சமையலுக்கும், கனிந்த கனிகள் மற்றும் விதைகள் நறுமணப்பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுகின்றன.

விதைகளுடன் கனிகள், ஜீரணத்தை ஊக்குவித்து உடலுக்கு வலுவேற்றுகிறது. தசைக்குடைச்சல் வலியை போக்கும் தன்மை கொண்டது. கிருமி நாசினியாக செயல்படுகிறது. வியர்வை மற்றும் ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும். வலிபோக்கும் மருத்துவத்தில் பயன்படுகிறது.

உடலுக்கு வெப்பத்தைத் தரும் தன்மை. இரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவுகிறது. கை, கால், ஆகிய பகுதிகளுக்கும், மற்ற மைய உறுப்புகளுக்கும் இரத்த ஓட்டத்தைச் சரி செய்கிறது. கெப்சைசின் எனும் வேதிப்பொருள் இத்தன்மைக்கு அடிப்படையாகிறது.


CENFIN GN 12
போல் பெயறிங் - டிறெற் இன்ஜெக்சன் மாதிரிகள்
சென்பின்
கைடிரக்டர்கள்




ஆகக் கூடிய
விற்பனை விலை
ரூ. 205,900/-

- சிறந்த இலகு தவணைக் கொடுப்பனவு முறை
- விற்பனையின் பின் 4 முறைகள் இலவசமான சேவை
- தேவையான அளவு உதிரிப்பாகங்கள்

1 வருட உத்தரவாதம்

இலவசம் ரக்டர்களோடு பொருந்தக்கூடிய நீர்ப்பம்பிகள்

CREATIVE SERVICES

வியாபாரிகளின் விருப்பம் இதுவே

மேலும் ஒவ்வொரு சென்பின் GN12 இரு சக்கர டிரக்டருடனும் இலவசம்

இரு மட்வீல்கள்

ஆயுதக் கோவை

சென்ரல் பினான்ஸ் பிஎல்ஸி
தொழில்நுட்ப பிரிவு : 313, கொஹொல்வில, களனி.
தொலைபேசி : 011-2914815 / 011-4815672
மற்றும் நாடெங்கிலுமுள்ள கிளைகள் - மட்டக்களப்பு - 065-2227823, மன்னார் - 023-4920727, யாழ்ப்பாணம் - 021-2221608, பொத்துவில் - 063-2248080, வவுனியா - 024-2225813
Inquires: 0777 594475

வாங்குவதற்கு சிறந்த இடம் - சென்ரல் பினான்ஸ்


# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
## கந்தையா சின்னப்பா

அன்னை மடியில்: 24.09.1926
ஆண்டவன் அடியில்: 08.10.2010

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் முகவரியாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்களை வழிநடத்தி
வாழ வைத்த தெய்வமே
அருட்பெரும் சோதியில்
ஒன்றறக் கலந்து ஓராண்டு
ஓடி மறைந்தனவே அப்பா
ஓராண்டல்ல நூற்றாண்டுகள்
ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காது அப்பா
எங்கள் எல்லோருடைய கண்ணீர்ப் பூக்களால்
உங்கள் பாதங்களை அர்ச்சித்து
தினமும் இறைவனை
இறைஞ்சி நிற்கின்றோம் அப்பா

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.
கைதடி கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவப்பட வேண்டிய தேவை உள்ளதா?

தெற்கில் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ள நிலையில் வடக்கிலும் இவ்வாறான கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான தேவை உள்ளதாகப் பல்வேறு மட்டத்தில் இருந்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்து கற்றோர் மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களில் சில.

- நிரோஜன், டிலீப் -

**எஸ்.தவபாலசிங்கம்,**
**தலைவர்,**
**யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.**

இலங்கையில் தனியார் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதை முற்றாக எதிர்க்கிறேன். தனியார் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் போது இதனைக் காரணம் காட்டி எதிர்காலத்தில் அரச பல்கலைக் கழகக் கல்வி முறையில் தரக்குறைவு ஏற்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம். இதனால் ஏழை மாணவர்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுவர்.

இலங்கையில் எட்டுப் பல்கலைக் கழகங்களில் மருத்துவபீடம் உள்ளது. தனியார் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதன் மூலம் அரச பல்கலைக் கழகக் கல்வித் தரம் குறைய வாய்ப்பேற்பட்டுவிடும். இதனால் அரச பல்கலைக் கழக மருத்துவர்களின் தரம் பாதிக்கப்படும்.

தனியார் பல்கலைக்கழகம் உருவாகும்போது திறமையற்றவர்களும், வசதிபடைத்தவர்களும் பட்டதாரிகளாக, வைத்தியர்களாக உருவாகும் நிலை ஏற்படும். இதனால் ஒழுங்கு முறையில் படித்துவருபவர்களின் தரம் பாதிக்கப்படும். தவிர வெளிநாட்டு நிறுவனங்கள் இலாபமீட்டும் நிறுவனமாக இவற்றைப் பயன்படுத்தும்.

எனினும் அரச பல்கலைக் கழகங்களுக்கு சமமான கல்வித் தரத்தைக் கொண்டதாக அல்லது அதிக தரம் வாய்ந்ததாக தனியார் கல்வித் தரம் அமையுமாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது.

**செ.கண்ணதாசன்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**நோயியல் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்**

தனியார் பல்கலைக் கழகம் நிறுவப்படும் பொழுது அதன் தரம் பாதுகாக்கப்படுமாக இருந்தால் வரவேற்கத்தக்கது.

அது ஒரு பகுதியினருக்குச் சார்பானதாகவோ, அரசியல்வாதிகளுக்கு இயைபானதாகவோ, பணம் சம்பாதிப்பதனை நோக்காகக் கொண்டதாகவோ இருத்தல் கூடாது.

இவை தவிர தனியார் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் விதம், அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

திறமை அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அரசியல் செல்வாக்கு இருத்தலாகாது. வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி அவர்களுக்கான ஏனைய வளங்கள் உரிய முறையில் கிடைக்கப் பெறல் வேண்டும்.

இவர்களுக்கான பரீட்சைகளைப் பல்கலைக் கழக

**கலாநிதி செ. அறிவழகன்**
**கணித புள்ளிவிவரவியல் பிரிவு,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைபவர்களில் 10 வீதமான மாணவர்களே பல்கலைக் கழகங்களினுள் உள்வாங்கப்படுகின்றார்கள். ஏனைய பலர் திறமை இருந்தும் பல்கலைக் கழக அனுமதி கிடைக்கப் பெறாமல் உள்ளனர். எனவே தனியார் பல்கலைக்கழகம் இங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியம்.

உதாரணமாக அமெரிக்காவில் பிரசித்தி பெற்ற பல பல்கலைக் கழகங்கள் தனியார் பல்கலைக் கழகங்களாக இருக்கின்றன. ஆனால் அவைபெறும் இலாபத்தை நிர்வாகத்தினர் எடுத்துச் செல்லாது அடுத்தடுத்த வருடங்களில் அங்கு பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குகின்றனர். எனவே இங்கு இலாபநோக்கம் கருதி தனியார் பல்கலைக் கழகம் ஸ்தாபிக்கப்படலாகாது.

ஸ்தாபிக்கப்படும் தனியார் பல்கலைக் கழகத்தினது தரம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மிகுந்த அவதானத்துடன் செயற்படுதல் வேண்டும்.

**சி.சிவரூபன்**
**வைத்திய அதிகாரி,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

வடக்கில் தனியார் பல்கலைக்கழகங்கள் வருவது வரவேற்கத்தக்க விடயம். இருப்பினும் அத்தகைய பல்கலைக்கழகங்கள் தமது அனுமதியின் போது உரிய கல்வித் தரத்தைப் பேணுதல் வேண்டும்.

எமது மக்கள் மத்தியில் தனியார் பல்கலைக்கழகங்கள் வருவது ஒருவித அச்ச உணர்வையே ஏற்படுத்தும். ஏனெனில் இதன் மூலம் தகுதியில்லாதவர்கள் உருவாக்கப்படுவார்கள் என்றுதான். தனியார் பல்கலைக்கழகங்கள் வருவது தவறில்லை. அவை தமது தகுதியைத் தகுதியாகப் பேண வேண்டும்.

ஆகக்குறைந்தது மருத்துவத்துறையைப் பொறுத்த வரையில் மூன்று பாடங்களும் 'பி' தரச் சித்தியைப் பெறுபவர்களுக்கே அனுமதியை வழங்க வேண்டும்.இந்தியா, ரஷ்யாவில் சில நல்ல தனியார் பல்கலைக்கழகங்கள் உண்டு. இங்கிருந்து பலர் இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்து அந்த இடங்களுக்குச் சென்று கல்வி கற்கின்றார்கள். அவர்கள் அந்த நாட்டுச் சூழல் முறைக்கு ஏற்ப கல்வியை கற்பதனால் பின்னர் இங்கு வந்து தமது வைத்தியத் தொழிலினை மேற்கொள்வது கடினமாக இருக்கும்.

எனவே தனியார் பல்கலைக்கழகங்கள் இங்கு வருவது மூலம் மாணவர்களின் லட்சக்கணக்கான பணம் மீதமாவதுடன் எமது சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் கல்வி கற்பதற்குரிய வசதிகள் ஏற்படும்.

**வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா**
**பிரதிப்பணிப்பாளர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதாக இருந்தால் அதன் தரம் உயர் நிலையில் இருத்தல் வேண்டும். வெளிநாடுகளில் பல தனியார் பல்கலைக் கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. மருத்துவபீடம் என்பது முக்கியபகுதி. மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்டது. இதனை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்குள்ள பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் போன்று தனியார் பல்கலைக் கழகங்கள் தரமான பயிற்சிகளை வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

---

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நம்பகரமான விசாரணைகள் அவசியம் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்ற நிலையில், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனும் ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்தினார்.

இந்த நிலையில், பான் கீ-மூனின் கருத்துத் தொடர்பாக முக்கிய கட்சிகள் கூறியுள்ள கருத்துக்கள்

## விசாரணை நடத்தப்பட வேண்டும்



**லக்ஷ்மன் கிரியெல்ல**

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் யுத்தம் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டிலிருந்தே இதை வலியுறுத்தி வருகிறார். இது ஒன்றும் புதியவிடயமல்ல.

எனவே, அரசிடமே தற்போது பொறுப்பு உள்ளது. எதிர்காலத்தில் இலங்கை சர்வதேசத்திடம் வெட்கமடையக்கூடாது என அரசு நினைக்கும் என்றால் கட்டாயம் விசாரணைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், வரும் நாள்களில் இழப்புகளைப் பொருளாதார ரீதியிலும், ஏனைய ரீதியிலும் நாம் எதிர்கொள்ள நேரிடும்.

ஐ.நா.தனது நிலைப்பாட்டை 2009ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வெளிப்படுத்தியது. அன்று இலங்கை வந்திருந்த ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்ளக விசாரணை ஒன்று தேவை என்ற விடயத்தில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.இந்த நிலையில் அதனை அரசு புறந்தள்ளவோ அல்லது தட்டிக்கழிக்கவோ முடியாது. இருசாராரும் இணங்கியபடி விசாரணை செய்ய வேண்டும்.

இலங்கையை வெட்கப்படுத்தக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இருக்குமானால், உறுதியளித்தபடி விசாரணை செய்யவேண்டும் - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல.

## இப்போதே ஒன்றும் கூற முடியாது



**நிமல் சிறிபால டி சில்வா**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னரே இது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை அறிவிக்க முடியும். தற்சமயம் எம்மால் ஒன்றும் கூற முடியாது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## அரசால் தட்டிக்கழிக்க முடியாது



**சிவசக்தி ஆனந்தன்**

ஐக்கிய நாடுகளின் செயலர் பான் கீ - மூனின் வலியுறுத்தலை இம்முறையும் இலங்கை அரசுக்குத் தட்டிக்கழிக்க முடியாது. அவ்வாறு தட்டிக்கழித்தால் யானை தன் மீது தானே மண்ணை வாரி இட்டுக் கொண்டதற்குச் சமனாகிவிடும்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக நம்பகரமான விசாரணை தேவை என்று சர்வதேச சமூகம் தொடர்ந்து இலங்கையை வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில், அதனை நாமும் தொடர்ந்து தட்டிக்கழிக்க முடியாது. விசாரணை செய்து உண்மை நிலைமையை வெளிப்படுத்தும் நேரம் வந்துவிட்டது. இதனையும் நாம் செவிமடுக்காமலும், உணராமலும் நினைத்தபடி செயற்பட்டோம் என்றால் சர்வதேசம் எதிர்காலத்தில் எவ்வித அழுத்தங்களையும் செய்யாமல் நேரடியாகத் தலையிடும்.

சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நடந்துகொள்வதே புத்தி சாலித்தனமாகும். எனவே, இலங்கை அரசு இதனைப் புரிந்துகொண்டு இனிமேலும் மேட்டிமைத் தனமாகச் செயற்படாது விசாரணை மேற்கொள்ளவேண்டும்.-இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

## சர்வதேச விசாரணை எதற்கு



**முத்தலிப் பாவா பாருக்**

உள்ளக விசாரணை நடத்தப்படுகின்ற நிலையில் சர்வதேச விசாரணை எதற்கு?ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, உள்ளக விசாரணைகளைத் திருப்திகரமாக மேற்கொண்டு வருகின்றது. எனினும், நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சர்வதேச சமூகம் திருப்திகொள்ளவில்லை. அதற்காகப் புறம்பான விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இலங்கைக்கு இல்லை. எனவே, நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றது. அதனைவிட மேலான ஒன்று விசாரணைக்கு அமைக்க முடியாது.- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசமைப்பு விவகாரம் தொடர்பான பிரதிநிதியும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முத்தலிப் பாவா பாருக் கூறினார்.

## அரசே முடிவெடுக்க வேண்டும்



**ரில்வின் சில்வா**

இலங்கை விவகாரத்தில் சர்வ தேசம் தலையிட விளிம்புவரை வந்துள்ள நிலையில், முழுமையான விசாரணை ஒன்றை இலங்கை அரசே மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தை மட்டுமே வெற்றிகொள்ள நினைத்துப் போராடிய அரசு, மனித உரிமை விவகாரத்தில் தோல்வி அடைந்துவிட்டது. குற்றச்சாட்டுகள் மீதான விசாரணையை அரசு தொடர்ந்து தட்டிக்கழித்து வந்ததன் பின்னரும், இன்று சர்வதேசம் கண்டபடி தலையீடு செய்கின்றது; வலியுறுத்தல்களும் விடுத்து வருகின்றது. எனவே, இதனைக் கருத்தில்கொண் டாவது அரசு விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும். ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் மேற்குலக சக்திகளின் பட்டியலின்படி செயற்படுகின்றார். எனவே, அவர் அப்படித் தான் வலியுறுத்தல்களை விடுவார். அதனை நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இருந்தபோதிலும், எமது நாட்டு இறைமையைப் பாதிக்கிற பிரிவினருக்கு நாம் தக்க பதிலடி வழங்க வேண்டும் என்றால் உள்ளக விசாரணை அவசியம். இலங்கை அரசே இதற்கான முடிவை எடுக்கவேண்டும்.- இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org